Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
பெப்.18–24,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 141

## மலையகம் மீளுமா?





## எப்போது வெடிக்கும்?

## புலிகளின் உளவியல் ஆயுதம்!



வாசக நெஞ்சங்களுக்கு ரமழான் வாழ்த்துக்கள்

## பிடித்ததும் பிடிக்காததும்

–மாதுரி டிக்சித்–

## புதிய திகில் தொடர் ஆரம்பம்

# முரசம்

## கிரிக்கெட் வருத்தம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

குண்டுவெடிப்பு நிகழாதிருந்தால்
கொழும்பில்
கிரிக்கெட் திருவிழா
களைகட்டியிருக்கும்.

வடக்கு-கிழக்கில்
யுத்தம் தொடரும் நிலையிலும்
தலை நகரில் தங்கு தடையின்றி
கிரிக்கெட் போட்டிகளை
நடத்திமுடிக்கலாம் என்று
எப்படிக் கணிப்புச் செய்தார்கள்?

யுத்தம் தீராதிருக்கும் வரை
பாதுகாப்பு உத்தரவாதம்
நிலைத்திருக்கும் என்று
நினைப்பதும் தவறுதானே!

நிகழ்ச்சி நிரலில்
யுத்தம்-
நிரந்தர இடம்பிடித்திருக்கிறது.
இங்கே-
விளையாட்டும் அதுவே!
விபரீதமும் அதுவே!

எந்த மைதானத்தில்
எப்போது தொடங்கும்
என்பது-
ஆரம்பிக்கிறவர்களுக்கு மட்டுமே
தெரிந்த இரகசியம்.

இருதரப்பு பங்குகொண்டாலும்
முன்னறிவித்தல் இன்றியே
மறுதரப்பு ஆடத் தொடங்கிவிடும்.

அதனால் ஒரு தரப்பு மட்டும்
எதையும் உத்தரவாதமாகச்
சொல்லவே முடியாது.
யுத்த விளையாட்டிலுள்ள
அபாயம் அதுதான்!

அதனைப் புறக்கணித்துவிட்டு
உலகக் கிண்ணப் போட்டிகளை
நடத்த சம்மதம் கொடுத்ததுதான்
சங்கடத்தில் மாட்ட வைத்துள்ளது.

வரமறுக்கும் நாடுகள் மீது
வருத்தப்பட்டுப் பயனில்லை.
"உயிர் என்ன துரும்போ?"
என்று களத்தில் குதிக்க
கிரிக்கெட் அணிகளில் இருப்பவர்கள்
போர் வீரர்களல்ல!

அரசாங்கம் வருத்தப்படுவதில்
பல காரணங்கள் உள்ளன.

சில போட்டிகள் தடைப்பட்டால்
கொட்டப்பட்ட பணம்
விரயமாகுமே
என்பது சின்னக் காரணம்!

'உலகக் கிண்ணப் போட்டிகள்
இலங்கையில் இரத்து'
என்ற செய்தி பரவினால்,
வெளியுலக அபிப்பிராயம்
கெட்டுப் போய்விடும்.

அமைதிக்கான பாதையில்
முன்னேறிக் கொண்டிருப்பதாக
அகிலமறியச் சொன்ன கதை
பொய்யாகிவிடும்.

'மாங்காய்த் தீவில்
மரணங்களுக்குப் பஞ்சமில்லை'
என்று எண்ணப்படுமானால்,
எந்தவொரு உல்லாசப் பயணியும்
இங்கே வர விரும்பமாட்டார்!

அவைதான் பெரிய கவலை.
நியாயமான கவலைதான்!
ஆனால், யுத்தம் ஒரு புறமும்
வளம் கொழிக்கும் சூழல்
மறுபுறமும் என்று
எங்கும் இருந்ததில்லை.

யுத்தம்-
வெற்றி பெறுகிறவர்களையும்
நிம்மதியாக இருக்கவிடாது;
தோல்வி பெறுகிறவர்களையும்
நிம்மதியாக இருக்கவிடாது.

கிரிக்கெட் போட்டிகளில்
ஏற்பட்ட இடையூறுகள்
கொடும் நோயால்
வாடும் நோயாளிக்கு
ஏற்படும் பக்கவிளைவுகளுக்கு
ஒப்பானவைதான்!

வலிக்கிறதே என்று
வருத்தப்பட்டுக் கொண்டிராமல்,
அடிப்படையான நோய்க்கு
தகுந்த சிகிச்சை செய்வதே
வலியை நிரந்தரமாகப் போக்கும்!

அதற்குத் தேவை,
அரசியல் துணிச்சல்!
நம்மிடம் அது இல்லாதபோது
விளையாட்டு வீரர்களிடம்
துணிச்சல் இல்லையே என்று
தூற்ற நினைப்பது சரியல்ல!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை. என்றென்றும் அன்புடன்

—ஆசிரியர்—

## ஆன்மீகம்



### உன் பாரத்தை.......

மனதிலே பாரம், சின்னஞ்சிறு இதயத்தினாலே தாங்கிக் கொள்ள முடியாத பாரம். சத்துருக்களும், பகைஞர்களும் தந்திட்ட பாரமானால் தாங்கிக் கொள்ளலாம். நம்பினவர்கள் தந்த பாரம்.... உயிருக்குயிராய் நேசித்தவர்கள் தந்த பாரம்... சுமக்க முடியவில்லையே என்று அங்கலாய்க்கும் உள்ளங்கள் தான் எத்தனை! எத்தனை!

செய்யாத ஒன்றினை செய்தானென்று சுமத்துகின்ற பாரம்! பிள்ளைகளால் ஏற்படும் மனப்பாரம்... சுமக்க முடியாத பாரங்களால் தத்தளிக்கும் உள்ளங்கள் செய்ய வேண்டுவது என்ன என சாலமோன் மன்னன் (சங்-55:22ல்) கூறுகிறார்:

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்".

நாமும் எம்பாரங்களை கர்த்தர் மேல் வைத்துவிடுவோம். தேவன் நிச்சயம் எம் பாரத்தை நீக்கிப் போடுவார்.

ஜே.புளோரன்ஸ், கெங்கல்ல.

### ரமழானின் நற்செய்தி

அல்லாஹ் ரமழான் மாதத்தின் ஒவ்வோர் இரவிலும் அவன் அடியானுக்கு பின்வருமாறு அழைப்பு விடுக்கிறான்:. "எவரேனும் என்னிடம் கேட்பவர் இருக்கின்றனரா? அவர் கேட்பதை நான் கொடுக்கிறேன். "தவ்பாச்" செய்பவர் எவரேனும் இருக்கின்றனரா? அவருடைய தவ்பாவை நான் ஏற்றுக் கொள்கிறேன். பாவ மன்னிப்புக் கேட்பவர் எவரேனும் உண்டா? அவருக்கு நான் பாவமன்னிப்பளிக்கிறேன்".

மேலும் அவன் சொர்க்கத்தின் காவலாளரிடம் "றிள்வானே! சொர்க்கத்தின் வாசல்களை நீர் திறந்து வைப்பீராக," நரகத்தின் காவலரிடம் "மாலிக்கே! எனக்காகவே எனது அடியான் நோன்பு நோற்றான். அதற்காக நரகத்தின் வாசல்களை அடைத்து விடுவீராக" எனக் கூறுகிறான்.

ரமழான் மாதத்தை முடித்து ஈதுல் பித்ரைக் கொண்டாடும் நாளில் அல்லாஹ் அவன் அடியானுக்கு வழங்கிய வெகுமதியை கண்டு மலக்குகள் மகிழ்ச்சியடைந்து நல்லடியார்களுக்கு நற் செய்தி கூறுகின்றனர்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-138

### யாரப்பா?

தூரத்தே தெரிகின்ற
திருத்தூதர் யாரம்மா!
'வாட்டுகின்ற வறுமையினை
வந்து அவர் விலக்கிடத்தான்
வருகின்றார் பாரப்பா!!

ஏ.எச். ராஸீன் மொகமட்,ஏத்தாலை.

### வெறுப்பு

பூத்துக் குலுங்கிய
பூங்காவனம்
பாலைவனமாகியதால்
வெறுத்துப் போன
ஓர் உயிர்
விடியலைத் தேடுகிறது.
விடுதலை எப்போது???

ரோஜா ஆனந்தராஜா, ராகலை.

### வெண்புறா

மண்ணில்
மனைவியையும்
மகனையும்
புதைத்துவிட்டு
'வெண்புறா பார்க்கிறான்'!

சுபாவரன், கண்டி.



## கவிதைப் போட்டி இல-141



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 24.02.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 141.
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல1772, கொழும்பு.

## பரிசுக்குரிய கவிதை

### தலை நிமிர்ந்து நில்லடா

வானிலிருந்து மழை. பொழிய...
திரண்டு வருவது கருமேகங்களா...?
குண்டு வீச பறந்து திரிவது...
புக்காராவா? சுப்பர் சொனிக்கா...?
வகுத்தறிய முடியாமல்... அங்கே...
தலை நிமிர்ந்து நிற்பது தமிழனா...?

என் .சஹாப்தீன், ஓட்டமாவடி.

### ஏமாற்றம்

'இன்றுபோய் நாளைவா'
என்று சொன்னது,
சமாதானம்!
நின்று அழைத்துவர,
நீண்ட நாட்களாய்,
நிற்கின்றேன் இவ்விடத்தில்!

பூ. இதயரெத்தினம்,
ஆரையம்பதி-03.

### வாழ்வு மடிந்திடவோ?

அடிவானம் கறுத்திருக்கு
ஆசைகளும் கலைந்திடுமோ?
தினை விதைத்த பலனாக
வினை வந்து கிடைத்திடுமோ?
வானவூர்தி சத்தமதோ
வாழ்வும் இதில் மடிந்திடுமோ?

தெ.லோஜனா, கொழும்பு-04.

### நம்பிக்கை

யார் என்ன சொன்னால்
என்ன?
வரும்.... நிச்சயம் வரும்
என்றாவது ஓர்நாள்
நிம்மதித் தென்றல்
தேடி வரும்!

நா.ஹரி, நீர்கொழும்பு.

### எங்கு சென்றாய்?

காலை எழுந்து கஞ்சிதனை அருந்தி
கதிரறுக்க வென்று கழனி சென்றவனே!
மாலையான பின்னும் மனைதனை ஏகிடாது
மைந்தா எங்கு சென்றாய்? பிதா நான் கலங்குகிறேன்.

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### பொறுமை

போர் மேகம் கலைந்திட
புது வாழ்வு பிறந்திட
புவியதனில் வழியுண்டா?
பொறுத்திருப்போம் போகும்வரை....!

ஸ்ரீபதி ரவீந்திரநாத்,அக்கரைப்பற்று.

### பெரு மூச்சு

புக்காரா வருமோ..?
பொழியும் குண்டுகளோடு
பொம்பர்தான் வருமோ..?
போர்ப் புகை மண்டிய
வட புலத்தில், வானம்
பார்ப்பதே தினம்
வாழ்வாய்ப்போனதே!

வை. சித்திக்கிருஷ்ணா,
பாண்டிருப்பு-01.

## வாசக(ர்)✉சாலை



தமிழ் கட்சிகள் ஒரு புறமும், இனவாதக் கட்சிகள் மறுபுறமும் நின்று வாதப்போர் செய்ய, நடுவில் நின்று மத்தியஸ்தம் செய்யப்போகிறது அரசு. காலத்தை நீடிக்க நல்ல வழி. தீர்வு யோசனைகள் பற்றிய முரசின் அலசல்கள் நேர்மையானவை.

பொ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

முரசின் கணிப்புக்களும், முன்னறிந்து கூறும் தகவல்களும் பொய்ப்பதில்லை என்பது தொடர்ந்து நிரூபணமாகிறது. 'கிழக்கில் படை நடவடிக்கை-புலிகள் வேறுமுனைகளில் தாக்கத் திட்டம்' என்று செய்தி போட்டிருந்தீர். பலித்தது.

இரா.தங்கமணி, அவிசாவளை.

முரசில் மீண்டும் ராஜேந்திரகுமாரின் நாவல் என்ற செய்தி தித்திப்பாக இருந்தது. முன்னர் அவரது 'ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்' கலக்கியதுபோல் கலக்கட்டும்.

எச்.ரம்ஸானியா, அக்குறணை.

ராஜேந்திரகுமாரின் நாவலை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம். முத்தான நாவலாய் இருக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

பா.கேதீஸ்வரன், மல்வான.

அந்நியநாட்டில் இருந்தாலும் தேடி அலைந்து பெற்றிட்டு சுவையுடன் இதமாக வாசித்து என்னுள் நிறைந்த தினமுரசுக்கு வாழ்த்துக்கள்.

எம்.தர்மகர்ணன், பலர்மோர்-இத்தாலி.

கிரிக்கெட் செய்திகள் பிரமாதம். 20ம் பக்கத்தில் வர்ணத்தில் தந்தது நன்றாக இருந்தது. தொடர்க.

எஸ்.எம்.ஹயாத், மாத்தளை.

தரமான ஆக்கங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு மிகவிரைவில் முரசில் பிரசுரிக்கப்படுவது வாசகர்களாகிய எங்களுக்கு கிடைத்த வெற்றி. ஹலோ டாக்டர்-நோயாளிகளுக்கு மருந்து. சிறுகதை, தேன்கிண்ணம் சூப்பர். சினிவிசிட் கண்ணை பறிக்கிறது. முரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

ஜெ.யூட் ஹிலேரியன், மட்டக்களப்பு.

பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதும் "விலையுயர்ந்த குற்றம்" சூப்பர் தொடர். அத்தோடு இலக்கிய நயம், வாரம் ஒரு திருக்குறளை வைத்து எங்களை புதுமை இலக்கியத்தால் நனைக்கிறார்.

ஜே. திருச்செல்வன்,அம்பாறை.

வாரந்தோறும் முரசுதரும் தேன்கிண்ணம்-தித்திக்கும், தேன்தான். தேன்கிண்ணத்தின் சின்னச் சின்ன சித்திரங்கள் கூட வெகு கச்சிதமாய் நெஞ்சை அள்ளுகிறதே! அரசியலை அலசும் விதம்-முரசின் தனிரகம். சிந்தியா பதில், இலக்கியநயம்-யப்பா!

ஷர்மிலா இப்றாலெப்பை-கல்முனை-07.

என்னங்க! ஒரு தினமுரசைப் பார்த்தா மற்றொரு முரசை பார்க்கணும் போலிருக்கு. ஒரு கிழமைக்கு இரண்டு முரசா பார்த்து அனுப்புங்களேன். ப்ளீஸ்!

ஜா.றாஸி முஹம்மத்-அக்கரைப்பற்று.

ப்ரிய ரசிகனின் "இலக்கிய நயம்"; இனிக்கும் பழம்! கூடவே, "த்ரில்"லுடன் தந்த, அற்புதமான "நாயக- வில்லன்" "கார்லோஸ்" தொடர் மார்வலஸ்!...

முத்துமணி-பதுளை.

இராமாயணத் தொடரில் இதுவரை அறிந்திராத சில விடயங்களையும் எமக்கு வரப்பிரசாதமாக அள்ளி வழங்கும் முரசுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

திருமதி.கே.குமார்-பூண்டுலோயா.

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் படு ஜோர். அதிலும் பாப்பா முரசு, ரசிகனின் தொடர் நவீனம், லேடீஸ் ஸ்பெஷல் பலே. சினி விசிட் தூள் கிளப்புகிறது.

ப.சஞ்ஜீவனி-மாத்தளை.

வாரப் பத்திரிகை என்றால் எப்படியிருக்க வேண்டும்? முரசுபோல இருக்கவேண்டும் என்று விதி போடப்பட்டுவிட்டதா? நான் ஏன் சொல்கிறேன் என்று புரிந்துகொண்டால் சரி.

செல்வி எம்.நிரோசா, கண்டி.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:**

- ஏ.எம்.இப்திகார், புத்தளம்.
- ரிபான்-எம்.பௌஸர், ரம்புக்-எல.
- மிஸ்ரியா சிவராஜா, காத்தான்குடி-06.
- ரி.இமெல்டா மாலினி, மட்டக்களப்பு.
- எம்.மாறன், அக்கரைப்பற்று-09
- எச்.பைசல் அமீன், புத்தளம்.
- சுகந்தி செல்வம், திருகோணமலை.
- ஆர்.சிவகுமார், செங்கலடி.
- ஸலீம் முஹமட், ஹொறவபொதானை.
- அ.பரமேஸ்வரன், கொழும்பு-13.
- ஆர்.கனகேஸ்வரி மல்வன், பூனாகலை.
- அ.மு.நிலாம்தீன், கிண்ணியா.
- ரி.ஜனகன், கொழும்பு-15.
- குலசிங்கம் குலரூபன், முறக்கொட்டாஞ்சேனை.
- எஸ்.ரி.ரமீஸ், அக்கரைப்பற்று-06.
- எம்.மங்கேஸ்வரன், மட்/முறக்கொட்டாஞ்சேனை.
- எப்.எப்.நிரோஸ், அநுராதபுரம்.
- வ.பிர்தௌஸ், கிண்ணியா-03
- வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.
- பொன்-சிவா, கொள்ளுப்பிட்டி.
- அமுதா இராமநாதன், கம்மடுவ.
- செல்வி பாலரூபி, வவுனியா.
- லதா அருணாசலம், கொம்மாதுறை.
- சில்மியா சியானா, நிக்கெவவ.
- துரைராசா சாந்தி, திருமலை.

# தலைநகரிலும் கிழக்கிலுமே புலிகளது கவனம்

# கிரிக்கெட் போட்டிகள் முடிந்ததும் பாரிய நடவடிக்கை?

### புலிகளின் திட்டம்

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினரது எண்ணிக்கையைக் குறைப்பதே வடபுலப் போர் முனையில் புலிகளது தற்போதைய தந்திரம் என்று நம்பப்படுகிறது. அதனால் அங்கு பாரிய நடவடிக்கை எதிலும் உடனடியாக ஈடுபடமாட்டார்கள். பாரிய நடவடிக்கையை மேற்கொண்டால் படையினர் அங்கு பெரியளவில் நிலைகொள்ள வேண்டிய தேவை ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் பாரிய தாக்குதல் எதிலும் ஈடுபடாமல் வெளியே தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது படையினரை பரவலாக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் புலிகளது பாரிய தாக்குதல் எதுவும் இல்லாத நிலையில் அங்கு படை பலத்தை முடக்கிவைத்திருப்பது அரசாங்கத்திற்கு பல வழிகளில் நஷ்டத்தையும், நெருக்கடியையும் உருவாக்கும் என்று புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

புலிகள் இயக்கத்தினருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவலின் படி, "படைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டிருக்கட்டும், நாம் கொழும்பிலும் கிழக்கிலும் எமது பலத்தைக் காட்டிக் கொண்டிருப்போம்" என்று புலிகளது முக்கியஸ்தர்கள் கூறிவருகின்றனர்.

கொழும்பு தாக்குதல்களால் தமிழ் மக்கள் பாதிக்கப்படலாம் அல்லவா என்ற கேள்விக்கும் புலிகளது முக்கியஸ்தர்கள் பதில் வைத்திருக்கிறார்கள். "அப்படி ஏதாவது நடந்தால் அரசாங்கமே நாட்டை இரண்டாக பிரிப்பதாகிவிடும். எமக்கு வேலை சுலபமாகிவிடும்" என்று கூறுகின்றனர்.

### அரசின் யோசனை

இதேவேளை, கொழும்பு குண்டு வெடிப்பையடுத்து அரசாங்கம் தனது பலத்தைக் காட்ட வடக்கு-கிழக்கில் பாரிய நடவடிக்கை ஒன்றுக்கு அனுமதி கொடுக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கிரிக்கெட் போட்டிகள் இங்கு நடைபெற்று முடிந்தபின்னர்தான் புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் எதிர்க்கட்சியால் குறை கூறப்பட்டு வருகிறது. அதனைச் சமாளிக்க எங்காவது ஒரு முனையில் வெற்றிபெற்றுவிட வேண்டும் என்று அரச தரப்பினர் நினைக்கின்றனர்.

இதேவேளை கொழும்பில் மேலும் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவல்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

### மாற்று ஏற்பாடு

மேலும் நான்கு வாகனங்கள் தயார் நிலையில் இருப்பதாக சென்ற வாரம் முரசு செய்தி வெளியிட்டமை தெரிந்ததே. 12.02.96 அன்று கொழும்பில் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட லொறியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் அவிசாவளையில் ஒரு லொறி பிடிபட்டுள்ளது. அந்த லொறியில் வெடிமருந்துகள் எதுவும் இருக்கவில்லை.

அவிசாவளையில் இருந்து சென்று உரிய நேரத்தில் வெடிமருந்தை நிரப்பிக் கொள்ளக்கூடிய தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த லொறியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பில் பிடிபட்டுள்ள லொறி தொடர்பாகவும் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

கொழும்பு மத்திய வங்கி தாக்குதலுக்காக இரண்டு லொறிகள் தயார் செய்யப்பட்டிருக்கலாம். ஒரு லொறி இடையில் எங்காவது மாட்டிக்கொண்டால் மாற்று ஏற்பாடாக இன்னொரு லொறி தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

400 கிலோ வெடிமருந்தை ஏற்றி வந்த லொறி சோதனைகளைத் தாண்டி கொழும்புக்குள் வந்து சேர்ந்துவிட்டது. எனவே அதனையே தாக்குதலுக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ●

# அடுத்த இலக்கு உல்லாசப் பயணத்துறை!

## 'எல்லாளன் படை' மீண்டும் எச்சரிக்கை

எல்லாளன் படையினரால் 3.2.1996 என்று திகதியிடப்பட்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது:

எல்லாளன் படையினராகிய நாங்கள் இன்று கொழும்பில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களைப் பற்றி முன்கூட்டியே அறிவுறுத்தி விட்டோம்.

கடந்த காலத்தில் புலிகள் தாங்களே தமிழர்களது ஏக பிரதிநிதிகள் என்று கூறி வந்தனர். ஆனால் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட கொலைகளுக்கு பதிலடியாக அவர்களால் கொலைகளை செய்ய முடியவில்லை. இதனால் புலிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களது உயிர்களின் பெறுமதியை உணரவேண்டும். எல்லாளன் படை நினைவூட்ட விரும்புவதும் அதுவே.

அடுத்து எமது தாக்குதல் வெளிநாட்டு மூலதனங்கள், மற்றும் உல்லாசப் பயணத்துக்குரிய இடங்களை நோக்கியதாக இருக்கும்.

இவ்வாறு 'எல்லாளன் படை' தனது பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளது. 'இரத்தம் தோய்ந்த நாட்கள் முடிவுக்கு வரும்' என்ற தலைப்போடு அறிக்கை வெளியாகியுள்ளது. ●

# மூதூர் வேட்டை! மக்களிடம் பீதி

## தேசிய தொலைக்காட்சியில் இருட்டடிப்பு

திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூரில் இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் நடத்திய வேட்டையில் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் பலத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது.

பலியானவர்களிலும், படுகாயம் அடைந்தவர்களிலும் அநேகமானோர் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.

புவனேந்திரி என்னும் மூன்று வயது குழந்தை, தயாளினி என்னும் 5 வயது குழந்தை, சுதாகரன் 7 வயது ஆகியோரும் காயமடைந்த 30 பேருக்கு மேற்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் ஆறு வயதான சி.பிரசாத் என்னும் சிறுவனும் ஒருவர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோடு வெட்டுக் காயங்களும் காணப்படுகின்றன.

கிளிவெட்டியில் ரோந்து சென்ற படையினர் மீது 11.02.96 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். அதில் இரண்டு படைவீரர்கள் கொல்லப்பட்டனர். அதனையடுத்தே இராணுவத்தினர் தமிழர்களது வீடுகளுக்குள் புகுந்து கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

'நாங்கள் இராணுவத்தினர் வந்திருக்கிறோம் கதவைத் திறவுங்கள்' என்று கூறியே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஊர்காவல் படையினர் கத்தி-வாள் போன்ற ஆயுதங்களால் வெட்டினார்கள்.

இவ்வாறு பாரிய படுகொலை நடவடிக்கை இடம் பெற்றும் கூட அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் மௌனம் அனுஷ்டித்தன. கிளிவெட்டியில் படையினர் இருவர் கொல்லப்பட்ட செய்தியை மட்டுமே தொலைக்காட்சியும், வானொலியும் அறிவித்தன.

புலிகளது நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் ரூபவாகினியில் உடனடியாக படங்களோடு செய்தி ஒளி பரப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. வானொலியிலும் செய்தி உடனடியாக ஒலிபரப்பப்படுவதுண்டு.

# 'புலிகள் அழிக்கப்பட்டால் சாதகம் யாருக்கு'?

## இந்திய உளவுப் பிரிவு இரகசிய ஆலோசனை!

இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையில் மீண்டும் நட்புறவை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக முரசு முதன்முதலில் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

அதன்பின்னர் புலிகளது சர்வதேசப் பிரதிநிதி திலகர் அளித்த பேட்டியொன்றிலும் இந்தியா தமது நட்பு நாடு என்று தெரிவித்திருந்தார்.

தற்போது புலிகளது சர்வதேச செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"விடுதலைப் புலிகளது தலைமைப்பீடத்தை அழித்தால் ஏற்படக்கூடிய தாக்கங்கள், பின்விளைவுகள் குறித்து இந்திய உளவுப் பிரிவு இரகசியமாக ஆராய்ந்து வருகிறது.

இந்திய உளவுப்பிரிவுகளில் ஒன்றான 'றோ' அதிகாரிகளே அவ்வாறு ஆலோசனை நடத்தியுள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் சூரியநாராயணன், இந்திய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் மேனன் ஆகியோரை அழைத்தும் 'றோ' அதிகாரிகள் கலந்தாலோசனை நடத்தியுள்ளனர்.

"புலிகளின் தலைமைப்பீடத்தை சிறீலங்கா படையினர் அழித்தால் தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் இந்தியாவின் நலனுக்கு ஏற்படக்கூடிய சாதக- பாதகங்கள் பற்றி இரகசிய கூட்டத்தில் ஆராயப்பட்டது" என்று புலிகளது சர்வதேச செயலகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இந்தியாவின் நட்பை நாடுவதால், அது தொடர்பான முடிவொன்றை எடுப்பதற்காகவே இவ்வாறான ஆலோசனைகள் நடைபெற்றுவருவதாக நம்பப்படுகிறது.

# தொண்டாவின் பேச்சுக்கு கண்டனம்

## மத்திய மாகாண சபையில் அதிருப்தி

(கண்டி நிருபர்)

கடந்த 24.12.95ல் நுவரெலியாவில் நடைபெற்ற மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் அவமதிக்கப்பட்டதாகவும் அங்கு இலக்கியம் பேசுவதற்குப் பதிலாக அரசியல் பேசப்பட்டது சரியல்ல எனவும், இது குறித்து விசாரிக்க குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும் ம.மா.சபையின் கடந்த கூட்டத்தில் பலத்த புகார் தெரிவிக்கப்பட்டது.

திரு. பத்மகீர்த்தி ஹேமச்சந்திர தலைமையில் கூட்டம் மாகாணசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. வீ.டி.தர்மலிங்கம், தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.டி.அய்யாதுரை, இ.தொ.கா. அதிருப்தியாளர்களான திருவாளர்கள் எஸ்.அருள்சாமி, சபையின் உபதலைவர் திரு. ஆர். தங்கவேல் ஆகியோரே இவ்வாறு சாகித்திய விழாவை சபையில் விமர்சித்தனர்.

தமிழ் கல்வி அமைச்சர் திரு. வி..புத்திர சிகாமணியை அரை மந்திரி எனவும் அவரைப்பாதிக்கக் கூடிய விதத்திலும் மாகாண சபைக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும் வகையிலும் அன்றைய விழாவில் அமைச்சர் ஒருவர் (திரு எஸ்.தொண்டமான் என பெயர் குறிப்பிட்டு) ஆற்றிய உரை கண்டிக்கத்தக்கதெனவும் திரு தர்மலிங்கம் சபையில் உரத்துச் சொன்னார்.

தமது அனுமதியின்றி 18 வயதில் எடுத்த தனது படத்தை எப்படியோ எடுத்து விழா மலரில் போட்டது தனக்கு அவமானம் என்றார்.

23.12.95ல் அட்டனில் நடைபெற்ற முதல் நாள் விழாவில் முதலமைச்சர் திஸாநாயக்காவும் அமைச்சர் ஹலீமும் இலக்கியம் பற்றியே பேசினார். ஆனால் நுவரெலியாவில் இடம் பெற்ற விழா முழுக்க முழுக்க அரசியல் மேடையாகவே அமைந்தன. சிலர் தமக்கு விளம்பரம் தேடுவதற்காக சாகித்திய விழாவைப் பயன்படுதிய செயல் கண்டிக்கத்தக்கதே என திரு அருள்சாமி தெரிவித்தார்.

இந்த மலரில் தமிழுக்குத் தொண்டு புரியும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்ட செயல் சரியல்ல என திரு தங்கவேல் கண்டித்தார்.

# கமிஷன் தலைவருக்கு புலிகள் கடிதம்

ஐரோப்பிய ஆணைக்குழுவின் தெற்காசியப் பிரதிநிதி புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளது நடவடிக்கைகள் தொடர்பாக குறை கூறியிருந்தார். புலிகள் இயக்கத்தினர் வெளிநாடுகளில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக அவர் தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து விடுதலைப் புலிகளது சர்வதேச செயலகம் கடிதம் ஒன்றை ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை வெளிநாட்டமைச்சரை கொழும்பில் சந்தித்த பின்னரே தெற்காசிய பிரதிநிதி அவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். அதில் எவ்வித உண்மையும் இல்லை. வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடப்பதை தடுக்கவும், வெளிநாடுகளது உதவிகளைப் பெறவும் சிறீலங்கா அரசு பொய்யான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளது என்று புலிகள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர். ●

### காணாமல் போன பா.உக்கள்

கடந்த சில மாதங்களாக அவசரகால சட்டப் பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களித்து வந்தது.

இம் முறை அவசரகால சட்டப் பிரேரணை வாக்களிப்புக்கு விடப்பட முன்னரே கூட்டணி பா.உக்கள் சபையில் இருந்து காணாமல் போய்விட்டனர்.

பாராளுமன்ற கூட்டத் தொடர் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நாளில் எதிர்த்து வாக்களிப்பது அரசாங்கத்திற்கு அபசகுனமாகிவிடும் என்பதால்தான் அப்படி நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. ●

# இருமுனை விசாரணை

மட்டு/சந்திவெளியில் சமீபத்தில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அச்சம்பவத்தில் தொடர்புடைய மூவர் ஏறாவூர் பொலிசாரின் பிடியில் அகப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்கள். இதே சம்பவம் தொடர்பாக மற்றும் இருவரைப் புலிகள் பிடித்துச் சென்று விசாரிக்கின்றனர். பொலிசாருக்கு புலிகள் பிடித்துள்ள இருவரும் மேலதிக விசாரணைக்காகத் தேவைப் படுகிறார்கள். புலிகளுக்கு பொலிசார் வசமுள்ள மூவரும் விசாரணைக்காகத் தேவைப் படுகிறார்கள். ●

# மின் மாற்றி தகர்ப்பில் அரை செஞ்சரி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நகரிலுள்ள மத்திய வீதி கத்தோலிக்க மண்டபத்திற்கு அருகில் உள்ள மின் மாற்றி சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை தகர்க்கப்பட்ட மின் மாற்றிகளின் எண்ணிக்கை 50 ஆகிவிட்டது.

ஏற்கனவே சேதமாக்கப்பட்ட 49 மின் மாற்றிகளில் பாதுகாப்பு படையினரின் அங்கீகாரத்துடன் 13 மின் மாற்றிகள் புதிதாக பொருத்தப்பட்டுள்ளன.

மத்திய வீதி மின்மாற்றி முன்பும் ஒரு தடவை குண்டு வீசித் தகர்க்கப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது மட்டக்களப்பு நகரில் கணிசமான பகுதி இருளில் மூழ்கியுள்ளது. வர்த்தக நிலையங்களும் பாதிக்கப்பட்டது.

இதுவரை மின்மாற்றிகள் சேதமாக்கப்பட்டது தொடர்பாக 8 1/2 கோடி ரூபாவை மட்டக்களப்பு இலங்கை மின்சாரசபை இழந்துள்ளது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மின் பாவனையாளர்களால் 12 கோடி ரூபா வரை மின்சார நிலுவை செலுத்தப்படாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இருவர் தவறியதால் புலிகள் ஆவேசம்

10.02.96 அன்று மட்டக்களப்பு வந்தாறு மூலையில் இடம்பெற்ற தீவிர மோதலொன்றின் பின்னர் படையினரால் 5 புலிகளின் சடலங்களும் கொல்லப்பட்டவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். புலிகளின் தரப்பில் மேலும் இருவர் தவறியிருந்ததைக் கண்ட புலிகள் மறுநாள் காலை அவ்விடத்தில் பெருந்தொகையாகத் திரண்டு தவறிய இருவரையும் தேடுவதில் ஈடுபட்டிருந்த அதே சமயம் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த வாகனங்ளை மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது மட்டக்களப்பு சிறைச் சாலையிலிருந்து கொழும்பு நோக்கி கைதிகள் இருவரை எடுத்துச் சென்ற சிறைக்காவலர்கள் இருவரையும் பிடித்து கைதிகளைப் பிணைத்திருந்த பூட்டால் சிறைக் காவலர்களைப் பூட்டி இழுத்துச் சென்றனர். "நாங்கள் தமிழர்கள் எங்களை விடுங்கோ" என்று அவர்கள் கூக்குரலிட்டபோதும் அவ்விடத்தில் அவர்களுக்குப் பலத்த அடி விழுந்தது. அவர்களுக்கு என்ன ஆனது என்று இதுவரை தெரியவில்லை.

பிரதான வீதி நெடுகிலும் பகலெல்லாம் பெருந்தொகையான புலிகள் திரண்டு நின்றதைக் கண்ட ஊர் மக்கள் அச்சத்தின் காரணமாக ஓட்டம் பிடித்தனர். வீதியால் வாகனங்களில் வந்தோரிடமெல்லாம் பக்கத்து இராணுவ முகாம்களிலுள்ள (கொம்மாதுறை, முறக்கொட்டாஞ்சேனை) படையினரை கண்டிப்பாக வரச் சொல்லுமாறு புலிகள் ஆவேசத்துடன் கூறி நின்றனர். பகல் 12 மணிவரை வீதியில் புலிகள் நின்றிருந்தனர். அதன் பின்னரே படையினர் வீதிப்பாதுகாப்பிற்குச் சென்றனர்.

வந்தாறுமூலையில் வைத்தே அன்றைய தினம் மாலை மட்டுநகர் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகைவண்டி புலிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் ஐவர் காயமடைந்தனர். புகையிரதப் பெட்டிகள் சில சேதமாகித் தடம் புரண்டன.

10.02.96 அன்று செங்கலடி டெலோ காரியாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவாக இரு வீடுகளும், ஒரு கடையும் எரிக்கப்பட்டன. ●

# கொம்மாதுறைப் பயணத்தில் ஏற்படும் கொடுமை!

(ஏறாவூர் நிருபர்)

"சின்னக் கிளாலி" என்று கேலியாக அழைக்கப்படும் கொடுமை நிறைந்த கொம்மாதுறை வீதிப் போக்குவரத்தின் கொடுமை நாளுக்குநாள் அதிகரிக்கிறது.

மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதியில் கொம்மாதுறை இராணுவ முகாம் அமைந்துள்ளது. பிரதான வீதியின் இரு மருங்கிலும். இம்முகாமைப் படையினர் அமைத்ததால் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பல வருடங்களுக்கு முன்னர் இப்பிரதான வீதி பொதுப் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டது. பின்னர் அதற்காக முகாமைச்சுற்றி உபபாதையொன்று தனியார் வளவுகளுக்கூடாக அமைக்கப்பட்டது. இப்போது அவ்வாறு அமைக்கப்பட்ட உபபாதையையும் படையினர் தடை செய்து விட்டதால் பயணிகளின்பாடு பரிதாபத்திற்குரியதாகிவிட்டது. கொழும்பிலிருந்தும் ஏனைய தூர இடங்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பொருட்களை ஏற்றிவரும் பார லொறிகளும், பஸ்களும் மற்றும் வாகனங்களும் மணல், சேறு நிறைந்த தனியார் வளவுகளுக்கூடாகவும், சிறிய ஒழுங்கைகளுக்கூடாகவும் பயணம் செய்ய வேண்டியுள்ளது. அவரவர் தமக்குத் தெரிந்தமாதிரி எப்படியோ சென்று முகாமைக் கடந்தால் சரியென்றாகிவிட்டது. இதனால் நாளாந்தம் சேற்றிலும், மணலிலும் பாரம் ஏற்றி வரும் பல பஸ்கள் லொறிகள் புதைந்து கிடப்பதைக் காணமுடிகிறது.

பஸ்களில் செல்லும் சகல பயணிகளும் செங்கலடியிலிருந்து இறங்கி வாகனத்தின் பாரத்தைக் குறைத்து, சேறும் மணலும் நிறைந்த பாதையைக் கடந்து செல்லும் வரை கொம்மாதுறை வரை நடந்து சென்று பஸ்களில் ஏற வேண்டியுள்ளது. 1/4 மைல் தூரத்திற்கு மேல் பயணிகள் நடந்தே செல்ல வேண்டியுள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களிலும் பிரிகேடியரால் அவ்வப்போது கூட்டப்படும் கூட்டங்கிளிலும் மட்டக்களப்பின் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள். என்றாலும் இப்படியான விடயங்கள் அவர்களது கண்களிலும் காதுகளிலும் படாது போய்விடுகிறதே என்று பொதுமக்கள் தமது துன்பப்பயணத்தை விவரிக்கின்றனர். ●

### 15 பேர் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரிய கல்லாறு என்னுமிடத்தில் 15 தமிழர்கள் புலிகள் இயக்கத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

10.2.96 இரவு அவர்கள் அனைவரும் துறை நீலாவணையூடாக தோணியொன்றில் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் சிலரது அடையாள அட்டைகளையும் புலிகள் பெற்றுச்சென்றுள்ளனர். ●

# ஹவாலா கட்சி உதயம்

## திடுக்கிடும் கொள்கைப் பிரகடனம்!

இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஜஸ்பால் பட்டி என்பவர் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

25.1.96 அன்று தனது கட்சியின் தொடக்கவிழாவை நடத்தினார். தொலைக் காட்சி படத்தயாரிப்பாளரான ஜஸ்பால் பட்டி தனது கட்சிக்கு வைத்துள்ள பெயர் ஹவாலா கட்சி. இந்தியாவை கலக்கிக் கொண்டிருக்கும் ஹவாலா ஊழல் விவகாரத்தின் தீவிரத்தை மக்களுக்கு உணர்த்தத்தான் அப்படி பெயர் வைத்துள்ளார்.

சண்டிகார் நகரில் பத்திரிகை நிருபர் களை கூட்டிவைத்து ஹவாலா கட்சியின் கொள்கைகளை விளக்கினார் ஜஸ்பால் பட்டி. நிருபர்கள் திறந்த வாய் மூட வில்லை.

இதோ ஜஸ்பால் பட்டி சொன்ன கொள்கை விளக்கம்:

"நாட்டில் ஊழலை ஒழிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

ஊழலை வளர்ப்போம். ஒழுக்கத்தை ஓட ஓட விரட்டுவோம்.

வரும் பொதுத்தேர்தலில் நாங்கள் போட்டியிடுவோம். ஒழுக்கம் ஒழிக என்பதே எங்களது பிரசாரகோஷம்.

நாங்கள் பதவிக்கு வந்ததும் நாடு முழுவதும் உள்ள யோக்கியமான அதிகாரி களை பதவி நீக்குவோம்.

சாதாரண மக்களும் ஊழல் செய்ய ஒழுக்கத்தை கைவிட உரிமை உண்டு.

ஊழல்- வாழ்க்கையில் ஒரு பகுதியாக இடம் பெறாவிட்டால் வாழ்க்கையே அல்ல."

இப்படிப்போகிறது கொள்கை விளக் கம். ஏனைய அரசியல் கட்சிகளை கிண்ட லடிப்பதுதான் ஹவாலா கட்சியின் நோக்கம் என்று தெரிகிறது.

# இந்திய இரசிகர்களை கண்காணிக்க உத்தரவு


பாகிஸ்தானில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியைக் காணச் செல்லும் இந்திய இரசிகர்கள் கடுமையாகக் கண் காணிக்கப்படுவார்கள். பாகிஸ்தான் அரசு அதற்கான உத்தரவை வழங்கியிருக்கிறது.

கிரிக்கெட் போட்டியை காணச்செல்லும் இரசிகர்கள் மத்தியில் இந்திய உளவாளிகளும் செல்லலாம் என்று பாகிஸ்தான் அஞ்சுகிறது.

இரசிகர்களை கண்காணிப்பதற்காக விசேட பாதுகாப்பு படை ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இந்தியா செல்லும் இரசிகர்கள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத் தில் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். இந்தியா செல்லும் பாகிஸ்தான் இரசிகர்களும் அங்கு கண்காணிக்கப்படலாம் என்று தெரி கிறது. ஆரியக் கூத்தாடினாலும் இரு நாடுகளுக்கும் காரியத்திலே கண்.

# காட்டூண் மூலை




# கவனம் திரும்புமா? கட்டிடம் எழுமா?

சம்மாந்துறை மாவட்டவைத்திய சாலையில் 98 லட்சம் ரூபா செலவில் நிருவாகக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படு மென்ற பிரச்சாரம் கடந்த பலமாத காலமாக அமர்க்களமாக நடைபெற்று வந்தது!

சுகாதார அமைச்சர் அல்-ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸி, அமைச்சு நிதிமூலம் இதனை அமைத்துத்தர முன்வந்துள்ளார் என பல சந்தர்ப்பங்களில் திகாமடுள்ள மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்.யூ.எல்.எம். முகைடீன் (முஸ்லிம் காங்கிரஸ்) புகழாரமும் சூட்டிவந்தார்.

கடந்த வருடம் ஜுலைமாதம் 15ம் திகதி (15-07-1995) அமைச்சர் அல்-ஹாஜ் பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் முகைடீனின் அழைப்பை ஏற்று சம்மாந்துறைக்கு வருகை தந்தார். அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்றைய தினம் அமைச்சர் அல்-ஹாஜ் பௌஸி சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில், மேற்படி நிருவாகக் கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் வைபவ ரீதியாக நாட்டிவைத்தார்.

"ஐ.தே.க. ஆட்சியில்தான் வெறுமனே அடிக்கல் நாட்டுவது வழக்கம். நாம் அடிக்கல் நாட்டினால் உருப்படியாக நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தே தீருவோம்"-என்ற உறுதி முழக்கங்களும் மேற்படி அடிக்கல் நாட்டு வைபவ பொதுக் கூட்டத்தில் கேட்டன.

சுமார் ஏழுமாதங்கள் கடந்து விட்டன! நாட்டிய அடிக்கல் அப்படியே இருக்கிறது!! நிருவாகக்கட்டிடம் எழவேஇல்லை,

நிருவாகக்கட்டிடத்தின் 'கதி' என்ன? மக்கள் கேட்கிறார்கள்! மாற்றுக்கட்சியினர் மட்டும் சும்மாவா இருக்கிறார்கள்? வாய்க்கு 'அவல்' கிடைத்தமாதிரித்தான்! திரும்புமா அமைச்சின் பார்வை?

அம்பாறை மாவட்ட நிருபர்

# உலகக் கோப்பை-இம்ரான் கருத்து

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெல்லும் வாய்ப்பு உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

1992ம் ஆண்டு இருந்த அணியை விட தற்போதைய அணி நல்ல பலத்துடன் இருப்பதாக இம்ரான்கான் கூறியிருக்கிறார்.

# மரங்கள் மறைந்த மாயமென்ன?

## மட்டு நகரில் மரம் பிடுங்கு விழா!

சூழல் பாதுகாப்பில் மரம் நடுகையும் ஓர் அங்கமாகும். வருடாவருடம் மர நடுகை விழாக்கள் என்று பல நாடுகள் மரங்களை நட்டு வளர்ப்பதற்கான ஊக்கத்தை மக்களுக்கு ஊட்டுகின்றன. எமது நாட்டிலும் கணிசமான தொகை மர நடுகைக்காகச் செலவிடப்படு கிறது. பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் தனியார் நிறுவனங்களிலும் உள்ள பயன் படுத்தப்படாத நிலத்தில் ஏதாவது மரத்தினை நட வேண்டுமென்று கோரிக்கை விடப்படு கிறது. கடந்த பல வருடங்களாக மரநடுகை, நம் நாட்டில் நல்ல பலனைத் தந்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்பி லுள்ள இலங்கை வங்கி நகரக்கிளையில் மரம்பிடுங்குவிழா அண்மையில் வெகு சிறப் பாக நடைபெற்றிருக்கிறது. அவ்வங்கி முன்றலில் பல வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டு, நீரூற்றிப் பேணிப்பாதுகாப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்த ஓரளவு அழகுதரும் 30 சவுக்கு மரங்கள் இரவோடு இரவாக வேரோடு பிடுங்கப்பட்டு தெருவில் வீசப்பட் டுள்ளன. வங்கி இருந்த வளவுக்குப் பசுமை யாகவும் வனப்பாகவும் காட்சி தந்ததோடல்லா மல் அங்கு வரும் எம் போன்ற வாடிக்கை யாளர்களுக்கு நிழற் குடையாகவும் அம்மரங் கள் பயன்பட்டு வந்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் இம்மரங்கள் பிடுங்கப் பட்ட அதே இடங்களில் திடீர் பூக்கன்றுகள் தோன்றியிருப்பதுதான்!

நன்கு வளர்ந்த பசுமையான சவுக்கு மரங்களைக் காணவில்லையே என்று வாடிக்கையாளர்களும் சுற்றுவட்டாரத் திலுள்ளவர்களும் வினவியபோது, "அவை வங்கிக் கட்டடத்தின் அழகைக் கெடுக்கின்றன வாம்; அதனால்தான் இம் மாற்றம் தேவைப்பட்டதாம்" என்று வங்கி அதிகாரிகள் கூறியதாகத் தெரிவித்தனர். அத்துடன் "புதிய நிர்வாகம் பொறுப்பேற்றமைக்காக ஒரு புதுத்தோற்றம் காட்ட வேண்டாமா?" என்று வாடிக்கையாளரான வர்த்தகர் ஒருவர் கிண்டல் செய்தாராம்.

இதற்கிடையில் இம்மரங்களைப் பிடுங் கிய சிற்றூழியர் ஒருவருக்கு-வங்கி வருமானத்தை விட-மேலதிகமாக ரூ2000.00 லாபம் கிடைத்ததாம். பிடுங்கி எறியப்பட்ட மரங்களை எவரும் அறியாமல் அத் தொகைக்கு விற்றுவிட்டாராம்.

சவுக்குமரங்கள் உயரமாக வளர்பவை. அழகும் தருபவை.

அடர்த்தியாக இருந்தால் அதன் கிளை களை வேண்டிய வடிவில் கத்தரித்து மேலும் அழகூட்டலாம். இதனைவிடுத்து மரங்களை வேரொடு பிடுங்கி எறிந்தமை யினால் மக்கள் மிக வேதனை அடைந் திருக்கின்றனர்.

-'புளியந்தீவான்'

# கூரைகளை கொண்டு செல்ல அனுமதி

மட்டு வாகரையில் இடம்பெற்ற விமானக் குண்டு விச்சினால் வாகரை ஆஸ்பத்திரியின் ஒரு பிரிவுக் கட்டிடம் சுக்குநூறாகியது. இந்த ஆஸ்பத்திரி பலகாலமாக உபயோகிக்கப்படாதிருந்து வந்துள்ளது. இவ்வாஸ்பத்திரி குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்டபின் உடைபடா திருந்த ஆஸ்பத்திரியின் மற்றைய இரு பிரிவுக் கட்டிடங்களின் கூரைகளைப் புலி களின் அனுமதியுடன் பொதுமக்கள் கழற் றிச் சென்றனர்.

இவ்வாஸ்பத்திரியின் அருகிலேயே கிழக்கில் பெரிய தொலைத் தொடர்புக் கோபுரத்தைப் புலிகள் நிறுவியுள்ளனர். அதற்கருகில் தேவாலயமும் இன்னும் சற்றுத் தூரத்தில் புலிகளின் முகாமும் உள்ளன.

மேற்படி இடம்பெற்ற விமானக் குண்டு விச்சினால் கட்டிடங்களின் சிதறல்கள் பொதுமக்கள் மீது பட்டதில் ஐவர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

இதனிடையே மட்டு-பதுளைவீதியில் இராணுவ நடவடிக்கை இடம் பெறலாம் என்ற காரணத்தினால் கடந்த மாதம் 17ம் திகதி தொடக்கம் பஸ் போக்குவரத்து இடம்பெறாததால் ஆசிரியர்கள் பாடசாலை களுக்குச்செல்லவில்லை. இதனால் பதுளை வீதிப் பாடசாலைகள் இயங்கவில்லை.

# களைகட்டும் மது விற்பனை

(மட்டக்களப்பு நிருபர்)

இவ்வருடம் சில மது விற்பனையாளர் களுக்குரிய அனுமதிப்பத்திரம் நீடிக்கப்பட வில்லை. இருந்த போதிலும் மட்டக்களப்பு நகரில் கோட்டைமுனை பகுதியிலும், ஏறாவூர், செங்கலடி, எருவில் போன்ற பிரதேசங்களிலும் ஏற்கனவே விற்பனையில் ஈடுபட்டு ஆனால் அனுமதிப் பத்திரம் நீடிக்கப்படாத விற்பனையாளர்கள் சிலர் சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பலலட்சம் ரூபா அனுமதிப் பத்திர கட்டணம் செலுத்தி விற்பனையில் ஈடு படும் விற்பனையாளர்கள் பாதிக்கப்பட்டுள் ளனர்.

மதுவரித்திணைக்களம் இவ்விடயம் குறித்து கண்டும் காணாதது போல இருப்ப தாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

# கண்டியில் கருத்தரங்கு

(கண்டி நிருபர்)

"மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய தொண்டு" என்ற தலைப்பில் கண்டியில் கருத்தரங்கு ஒன்றை நடாத்த மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு.வீ.புத்திரசிகாமணியும் முஸ்லிம் கல்வி அமைச்சர் திரு.எம்.எச்.எ. ஹலீமும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மத்திய மாகாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற இருப்பதால் இதற்கு முன்னோடியாகவே இந்த கருத்தரங்கு நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாரம்பரிய கதை, சிறுகதை, நாவல், நாட்டாரியல், கவிதை போன்ற தலைப்புக்களில் இக்கருத்தரங்கு நடைபெறும். இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் மத்தியமாகாண தமிழ்க் கல்வி, இந்து கலாசார அமைச்சு, கீழ்மாடி, கண்டி செயலகம், என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# வானம் பொழியவில்லை; பூமி வரள்கிறது

(திருமலை நிருபர்)

மழை இன்மை காரணமாக மூதூர் பிரதேசத்தில் 15 ஆயிரம் ஏக்கர் வயல்கள் அழிந்து போயுள்ளன. மூதூர் பிரதேசச் செயலாளர் பிரிவில் பத்தாயிரம் ஏக்கரும் ஈச்சிலம்பற்றை பிரதேசச் செயலாளர் பிரிவில் ஐயாயிரம் ஏக்கரும் வரட்சியால் பாதிப்படைந்துள்ளன.

தொடர்ந்து பல ஆண்டு காலமாக வன்செயல்களினால் உடைமைகளை இழந்து நிர்க்கதியான விவசாயிகளுக்கு மழை பொய்த்து வயல்கள் கருகியமை பேரிடியாக அமைந்துள்ளது. வயல் அழிவுக்கான நஷ்டஈடு அரசாங்கத்தால் வழங்கப்பட்டாலன்றி இவ்விவசாயிகள் நிலைமை கவலைக் கிடமாகவே இருக்கும்.

இது சம்பந்தமாக விவசாயிகள் கஷ்ட நிலைமையை விளக்கி பிரபல சமூக சேவகர் எஸ். குணநாயகம் அவர்கள், காணி வனவள அமைச்சர் டி.எம்.ஜயரத்ன அவர்களுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பியுள்ளார்.


# மனோதத்துவ வைத்தியம்

## (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் ஹிஸ்டீரியா ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளையேறுதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

பெப்ரவரி **18** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 மார்ச் **3,4** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஒட்டமாவடியிலும், பெப்ரவரி **10,11,12**ம் மார்ச் **9,10,11** கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.





# சிங்கார ஆடைகளில் சிறப்புத் தேர்ச்சி

திருமண பட்டுப் புடவைகள் (காஞ்சிபுரம், பனாரீஸ், தஞ்சூர்)
சல்வார் கமீஷ், சேர்ட்டிங்ஸ், சூட்டீங்ஸ் அத்துடன்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிங்கம் மார்க்(Lion Brand) சாரங்கள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் தலைநகரில் தலை சிறந்த இடம்

**சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்**
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

241. பிரதான வீதி, கொழும்பு-11.
T.P. 324153, 440463





33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல 'மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.ஏ) ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.



# விளம்பரப் பகுதி

கணனியில் தமிழ் புதிய Windows 95 க்கும் பாவிக்கக்கூடிய

Lestech இன்

**Windows True Type Fonts**

இப்பொழுது 21 குடும்ப தமிழ் எழுத்துக்கள் விற்பனையாகிறது. தமிழ் தட்டச்செழுத்திலும் (Key Board) பாவிக்கக்கூடியது. எந்தவொரு அளவுகளுக்கும் உருமாற்றக் கூடியதும் ஒவ்வொரு வரி வடிவத் திலும் விரும்பிய அளவுகளில் பொது நிலையானவை, தடிப்பானவை (Normal, Bold, Italic) ஆகிய வரி வடிவமைப்பிலும் கிடைக்கிறது. சிங்களம் ஒரு (1) குடும்ப எழுத்து விசயசேகரா Key Board ல் பிரயோகிக்கலாம்.

Page Maker Desk Top Publishing
வகுப்புக்கள்நடத்தப்படுகின்றன.
தொடர்புகொள்ளவும்

**ஸ்ரீ கிருஸ்ண துளசி**
127, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு - 13.
இலங்கை. (Sri Lanka)

தொ.பே: 335540
Fax: 94-1-434351

# பீதியைக் கிளப்பும் உளவியல் ஆயுதம்

**க**டந்தவாரம் கொழும்பில் பரவிய வதந்திதான் சமீபகால வதந்திகளில் சாதனை படைத்திருக்கிறது.

நள்ளிரவில் வீட்டுக்கதவுகள் தட்டப் பட்டன. என்னவோ ஏதோ என்று வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து கதவைத்திறந்தவர்களுக்கு அந்த அதிர்ச்சி யான செய்தி சொல்லப்பட்டது.

"தண்ணீரில் சயனைட் கலக்கப் பட்டுள்ளதாம். குடித்துவிடாதீர்கள்!" அப்போதுதான் தண்ணீர் குடித்திருந்த பலருக்கு பொறிகலங்கிவிட்டது.

வயிற்றுக்குள் ஏதோ செய்வதுபோல இருந்தது. ஓடினார்கள் ஓடினார்கள் வைத்தியசாலை நோக்கி ஓடினார்கள். ஓடும்போதே சிலருக்கு வாந்தியும் வந்து விட்டது.

தலைநகரமே அல்லோல கல்லோலம். எப்படியோ ரூபவாஹினி தொலைக்காட்சி யில், வதந்தி என்று அறிவித்து வயிற்றுக் கலக்கலுக்கு முற்றுப்புள்ளியிட்டார்கள்.

தலை நகரமே நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டது.

'நெருப்பில்லாமல் புகையாது' என் பார்கள். வதந்தியும் தானாகப் பரவாது. ஆகவே வதந்தி பரப்பியது யார் என்று பாதுகாப்பு தரப்பு தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

வீடு வீடாகத் தட்டி தாம் அறிந்த செய்தியைத் தெரிவித்தவர்கள், வீதிகளில் கடமையில் இருந்தபோது தாம் அறிந்த செய்தியை விரைவாக மக்களுக்கு எட்டச் செய்த பொலிசார் மீதெல்லாம் வதந்தி பரப்ப உதவினார்கள் என்பதுபோல சொல்லப்படுவது நியாயமில்லை.

ஏனெனில் அவர்கள் தாம் கேள்விப் பட்ட செய்தியை வதந்தி என்று தெரி யாமல்தான் வெளியே சொன்னார்கள். உண்மையில் உயிரிழப்புக்களை தடுக்க நினைத்தார்கள்.

இளைஞர்கள் வீடு வீடாகத் தட்டி யெழுப்பி செய்தி சொன்னதிலும் கெட்ட நோக்கம் எதுவுமிருக்கவில்லை.

ஒருவேளை உண்மையாகவே சயனைட் கலக்கப்பட்டிருந்தால் அவர் களது செயலை, பொறுப்புணர்ச்சி என்று அரசாங்கமே பாராட்டியிருக்கும். வதந்தி என்று தெரியாமல் துரிதமாக செய்தி சொல்லி மக்களை உஷார் படுத்திய பொலிசாருக்கு விருதுகூட கிடைத்திருக் கலாம்.

எனவே-வதந்தியை திட்டமிட்டு பரப் பிய சக்தி எதுவென்று கண்டுபிடிப்பது தான் அவசியம். வதந்தி பரவிய பின்னர் அது உண்மையோ பொய்யோ என்று தெரியாத நிலையில் மக்களை உஷார் படுத்தியவர்களையெல்லாம், வதந்தி பரப் பியோர் என்ற பட்டியலில் சேர்க்கக் கூடாது.

வதந்தியைப் பரப்புவதில் ஒரு தனியார் வானொலி நிறுவனம் சமீபகாலத் தில் உதவிகரமாக இருந்துவருகிறது.

கொலன்னாவை எண்ணெய்க்குதம் தாக்கப்பட்டபோதும் அந்த வானொலி அவசரப்பட்டு செய்திகளை வெளியிட்டது. அவிசாவளைவரை தீ பரவும் என்று மக்களை மிரட்டியது.

கொழும்பு குண்டுவெடிப்பையடுத் தும் பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் பரபரப்பு செய்தி வெளியிட்டது.

சயனைட் விவகாரத்திலும் அதே தனியார் வானொலிதான் பாதுகாப்புத் தரப்பிடம் தீரவிசாரித்தறியாமல் செய்தி வெளியிட்டது.

ஆனாலும், வதந்தியை முதலில் பரப்புவதில் ஒரு கோஷ்டியொன்று திட்ட மிட்டு இயங்கியிருப்பது தெரியவந்திருக்கிறது.

கொழும்பு நகரின் முக்கிய பகுதிகளில் வெள்ளை வேன் ஒன்றில் சென்ற கோஷ்டி தான் சயனைட் கதையை சொல்லிவிட்டு மாயமாய் மறைந்திருக்கிறது.

யாரந்த கோஷ்டி என்று பாதுகாப்பு தரப்பு இன்னமும் கண்டுபிடிக்கவில்லை.

ஆனால் ஒன்று, ஏனைய வதந்திகள் போல இதனை லேசாக எடுத்துக்கொள்ள முடியாது.

ஒரு சம்பவம் நடைபெற்ற பின்னர் பல கதைகள் பரவி, திரிந்து, தேய்ந்து, அல்லது ஊதிப்பருத்து, கை கால் வைத்து வதந்தி யாகப் பரவுவது வழக்கம்தான்.

ஆனால், தண்ணீரில் சயனைட் கலக்கப் பட்டதாக சொல்லப்பட்ட வதந்தி எந்த ஒரு முன் சம்பவமும் இல்லாமல் கட்டப்பட்ட கதை. முன்கூட்டியே சிந்தித்து திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கதை.

அவ்வாறான வதந்தி மூலமாக எத்தகைய நோக்கங்களை சாதிக்க நினைத்திருப்பார்கள்?

1. தலைநகரில் ஒரு பீதியை உருவாக்கி அரசாங்கம்மீது மக்களை நம்பிக்கை இழக்கச் செய்வது.

2. இரவோடு இரவாக கொழும்பில் மக்களை குழப்பமடையச் செய்து கலவரத்தை ஏற்படுத்துவது.

3. தலைநகரம் பாதுகாப்பில்லாத பகுதி யாக மாறிவருகிறது என்ற அபிப்பிராயத்தை உருவாக்குவது மூலமாக, அரசாங்கத்தின் யுத்த வெற்றிச் செய்திகளை மங்கவைப்பது.

இந்த மூன்று காரணங்களுக்காக வதந்தி பரப்பக்கூடிய அவசியம் யாருக்கு என்று பார்த்தால், பிரதான எதிர்க்கட்சிமீது சந்தேகம் திரும்புகிறது.

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை அரச தரப்பு வெற்றிப் பிரசாரமாக முன்னெடுத்தபோது பெரிதும் பாதிக்கப்பட்டது பிரதான எதிர்க்கட்சிதான்.

உண்மையைச் சொல்வதானால், புலி கள் கொடுக்கப்போகும் மிகப் பாரிய பதிலடிக் காக பிரதான எதிர்க்கட்சி காத்திருந்தது.

கொழும்பு குண்டுத்தாக்குதல் செய்தி, பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை உள்ளூர ஒரு சந்தோசமான செய்திதான்.

'இப்போது எப்படி?' என்பதுபோல அரச தரப்பை ஒரு பார்வை பார்த்துக் கொண்டார்கள். கடந்த வாரம் நடைபெற்ற அவசரகால சட்ட விவாதத்தில் ஒரு பிடி பிடித்தும் விட்டார்கள்.

எனவே, அரசாங்கம் தடுமாறியுள்ள தருணத்தை பாவித்து தாமும் ஒரு தாக்குதல் நடத்த பிரதான எதிர்கட்சியில் ஒரு சாரார் திட்டம் போட்டிருக்கலாம். வதந்தியை தமது வெடிகுண்டாக அவர்கள் பாவித்திருக்கலாம்.

பிரதான எதிர்க்கட்சிக்குள் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு பிரிவு இன வாதத்தை நம்பிக்கொண்டிருக்கிறது. முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் 'ஹெல உறுமய' என்ற பெயரில் இனவாதம் பேசிய பிரிவுதான் இப்போது பிரதான எதிர்க்கட்சிக் குள் சங்கமித்து இருக்கிறது.

எனவே, எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பிருக்கிறதோ என்று தெரியாத நிலை தான்.

அடுத்த சந்தேகம் புலிகள் மீதுதான்.

தலைநகரப்பாதுகாப்பில் அரசாங்கம் முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக் கக் கூடியதாக நெருக்கடிகளை ஏற்படுத்து வது புலிகளுக்கு லாபம்.

அது தவிர உளவியல் ரீதியில் தலை நகரில் பீதியை ஏற்படுத்துவது, அரசின் போருக்கு ஆதரவான நிலைப்பாட்டையும் தளர்ச்சியடைச் செய்யும் என்று புலிகள் நம்பலாம்.

மீண்டும் ஒரு பாரிய நடவடிக்கையை புலிகளுக்கு எதிராக மேற்கொண்டால் தலைநகரில் எப்போதும் எது வேண்டுமானா லும் நடக்கக்கூடும். சாதாரண மக்களது உயிர்களுக்கு உத்தரவாதமில்லாத நிலை தோன்றக்கூடும் என்பதை முன்னெச்சரிக்கை யாக தெரிவிக்க புலிகள் முற்படலாம்.

அந்தக் கோணத்தில் பார்க்கும்போது புலிகள் வதந்தியை பரப்பியிருக்கலாம் என்று சந்தேகப்பட இடமிருக்கிறது. எனினும் தலைநகரில் புலிகள் பகிரங்கமாகத் தோன்றி தம்மை அடையாளப்படுத்தக்கூடிய வகையில் மக்களுக்குள் வதந்தி பரப்பியிருக்க முடியுமா என்பது தான் உதைக்கிறது. ஆனாலும் சாத்தியமில்லை என்று சொல்லி விட இயலாது.




எப்படியோ, யார் அந்த வதந்தியைப் பரப்பியிருந்தாலும் ஒரே ஒரு விஷயம் மிகத் தெளிவாக இருக்கிறது.

புலிகள் தொடர்பாக தலை நகரில் உள்ள மக்களிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது. புலிகள் சந்திர மண்டலத்தில் இருந்து தலை நகரைத் தாக்கப் போகிறார்கள் என்று சொன்னாலும் நம்பத்தயாராக இருக்கிறார்கள்.

சூரியக்கதிர் நடவடிக்கை மூலமாக செய்யப்பட்ட பிரசாரங்கள் புலிகளின் கதையே முடிந்துவிட்டது என்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

அப்படியான எண்ணம் வளர்ந்த நிலை யில் கொழும்பின் இதயப்பகுதியில் புலிகள் புகுந்து தாக்கிவிட்டதால், நிலமை தலைகிழாக மாறிவிட்டது. அரசின் பிரசார சாதனங்கள் சொல்வதை மக்கள் நம்பமுடியாதவர்களாகி விட்டார்கள்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை பெரும் வெற்றிவிழாவாகக் கொண்டாடப் படாமல் இருந்திருந்தால், கொழும்பு குண்டுத் தாக்குதல் புலிகளது நடவடிக்கையில் ஒரு கட்டம் என்றுமட்டுமே கருதப்பட்டு இருக்கும்.

ஆனால், புலிகளது கதையே முடிந்து

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

விட்டதாக ஒரு எண்ணம் தோன்றிய நிலை யில் தாக்குதல் நடத்தப்பட்டதால், புலிகளை வெல்லவே முடியாது என்ற கருத்தை ஏற்படுத்திவிட்டது.

இனிமேல், வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கை தொடர்பாக அரச தரப்பு சொல்வதை தெற்கில் உள்ள மக்கள் முற்றிலும் உண்மை என்று நம்பப்போவ தில்லை.

கொழும்பு குண்டுத்தாக்குதலை அடுத்து தலைநகரமே இராணுவமயமாகியிருக்கிறது. பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாகி யுள்ளன. அதே சமயம் தவிர்க்கமுடியாத இந்த நடவடிக்கைகள் மக்களிடம் இனம் தெரியாத பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

எப்போது வெடிக்கும், எங்கே வெடிக் கும் என்ற பீதியை அகற்ற படைத்தரப்பால் முடியாது போய்விட்டது.

எந்தவிதமான பாதுகாப்பு வியூகத்தையும் புலிகள் ஊடறுத்துவிடுவார்கள் என்று மக்கள் நம்பத் தொடங்கிவிட்டார்கள். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கம்தான். புலிகளுக்கு அதுதான் சாதகம்.

கொழும்பு குண்டுத் தாக்குதலுக்கு பின் னர் அடையாளம் காணமுடியாத ஆயுதத்தை எதிர்த்து அரச தரப்பு போராடவேண்டி யிருக்கிறது.

அந்த ஆயுதம் உளவியல் ரீதியானது. தலைநகரம் ஆபத்தில் இருப்பது போன்ற எண்ணத்தை தொடர்ந்து தக்கவைப்பது அந்த உளவியல் ஆயுதம்தான்.

சூரியக் கதிர் மூலம் புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என்ற பிரசாரம் அரசுக்கு உளவியல் ஆயுதமாக இருந்தது. அதன் மூலம் மக்களை தன்பக்கம் திரட்டி தேர்தல்களை நடத்தவும் அரசு திட்டமிட்டது.

கொழும்பு குண்டுத்தாக்குதல் மூலமாக அந்த உளவியல் ஆயுதம் அரசிடம் இருந்து தவறிப் போய்விட்டது.

இப்போது புலிகளின் கையில் உளவியல் ஆயுதம். அந்த ஆயுதம் மூலமாக புலிகள் முக்கியமான மூன்று இலக்குகள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள்.

1. புலிகளை போரில் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை.

2. போர் நடத்துவதில் வல்லமை வாய்ந்த அரசாங்கம் என்று கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட தோற்றப்பாடு.

3. புலிகளை ஓரம்கட்டிவிட்டு இலங்கை யில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அரசாங் கம் செய்த பிரசாரம்.

மேற்கண்ட மூன்று இலக்குகள் மீதும் புலிகளது உளவியல் ஆயுதம் கணிசமான சேதங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

நாற்பதினாயிரம் படையினரை வைத்து அரசாங்கம் ஏற்படுத்திய வெற்றி குறித்த நம்பிக்கைகளை, நான்கு பேரைக் கொண்ட தாக்குதல் அணி மூலம் புலிகள் தகர்ந்து விழச் செய்திருக்கிறார்கள். தமது கையில் உளவியல் ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டார்கள்.

அதனால்தான் சந்திர மண்டலத்தில் இருந்து புலிகள் தாக்கத் திட்டமிடுவதாகச் சொன்னா லும் நம்பக்கூடிய நிலை தோன்றியிருக்கிறது.

பௌத்த குருமார் வேடத்தில் கரும் புலிகள் ஊடுருவலாம் என்று பாதுகாப்புத் தரப்பே அறிவித்திருக்கிறது.

அதன்பின்னர் பௌத்த மதகுருமார் களைக் கண்டாலே முக்கிய பிரமுகர்களுக்கு ஒரு மாதிரியாகிவிடுகிறது. முக்கிய நிகழ்ச்சி களில் கலந்துகொள்ளச் செல்லும் பௌத்த குருமார்கள் துருவப்படுகிறார்கள். இதுவரை சர்வ சுதந்திரமாக நடமாடிய பௌத்த குரு மார்களுக்கும் சங்கடம் ஏற்படத் தொடங்கி விட்டது.

கிடைக்கும் தகவல்களை அலட்சியப்படுத் தக்கூடிய நிலையில் படைத்தரப்பு இல்லை.

புலிகள் சகல வழிகளிலும் ஊடுருவுவார் கள் என்று படைத்தரப்பு கருதவேண்டியே இருக்கிறது. அதன் மூலமாக யுத்தம் சகலரையும் சந்தேகிக்கக் கூடியவகையில், சகலரையும் ஏதோ ஒரு வகையில் சிரமப் படுத்தும் வகையில் விரிந்து வியாபித்துள்ளது.

சுதந்திர தின விழாவுக்கு எந்தவொரு தமிழ் கட்சியும் அழைக்கப்படவில்லை. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவும் இல்லை.

யாரைத்தான் நம்புவதோ என்றரீதியில் காரியங்கள் நடக்கத் தொடங்கிவிட்டன.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் போரை முடிவுக்கு கொண்டுவரலாம் என்று அரச தரப்பு சொல்லியிருந்தது.

ஆனால், யுத்தமோ மேலும் மேலும் புதிய தளங்களுக்கு தன்னை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது.

இப்போதுள்ள நிலவரப்படி ஏப்ர லுக்கு பின்னர்தான் போர் மேலும் ஒரு புதிய கட்டத்துக்கு செல்லுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

-★★★-

**பா**ராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதி பதியால் ஆரம்பித்துவைக்கப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி இருக்கைகள் காலியாக இருந்தன.

அரச தரப்பில் அநேகமாக சகல ருமே ஆஜராகி இருந்தனர். குறிப்பாக சகல அமைச்சர்களும் இருக்கைகளில் காணப்பட்டனர்.

ஒரே ஒரு அமைச்சர் மட்டும் ஆஜராக வில்லை. முன்வரிசையில் அவரது ஆசனம் காலியாக இருந்தது. அவர் திரு.தொண்டமான்.

அப்போது அவர் இந்தியாவிற்கு சென்றிருந்தார். நினைத்திருந்தால் வந் திருக்கலாம். வராமல் இருந்தது அவருக் குள்ள கசப்பைத்தான் சொல்லாமல் சொல்லுகிறது.

மலையக தமிழ் மக்களும் நிறையச் சலிப்படைந்திருக்கிறார்கள். அரசாங்கம் பாராமுகமாக இருப்பதாக நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி இரண்டும் அரசாங்கத்தை ஆதரித்துக்கொண்டிருக்கின்றன. அந்த இரண்டு கட்சிகளின் எந்தவொரு உறுப் பினருக்கும் அரசாங்கம் தொடர்பாக திருப்தியில்லை.

தமது தலைமைகள் ஏதோ ஒரு தந்திரோபாயம் கருதியே அரசை ஆதரிப்ப தாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

மறுபுறம், வடக்கு-கிழக்கில் புலிகளது நடவடிக்கைகளும் மலையக இளைஞர்கள் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கி உள்ளன.

வடக்கு-கிழக்கில் புலிகள் தோல்வி கண்டால், பேரினவாதம் தங்கள்மீதும் அலட்சியமாக கைவைக்கும் என்று மலையக இளைஞர்களில் பலர் நினைக் கிறார்கள்.

அதேசமயம், வடக்கு-கிழக்கு பிரச் சனையின் தீவிரமும், யுத்தம் பரவி வளர்வதும் மலையக இளைஞர்கள்மீதும் சந்தேகப்பார்வைகளை அழுத்தமாக்கி வருகிறது.

தொடர் கைதுகளையும், தடுத்து வைத் தல்களையும் மலையக அரசியல் தலைமை களால் நிறுத்த முடியாமல் போனால், இளைஞர்களின் கோபம் ஜனநாயக அரசியல் தலைவர்கள்மீதும் திரும்பலாம்.

மலையகம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இருந்து மீளுமானால், மற்றுமொரு யுத்த களமாக மாறிவிடும்.

அதனை நிறுத்த வேண்டுமானால், மலையக மக்களை ஜனநாயக அரசியலில் நம்பிக்கை இழக்கச் செய்யும் அணுகு முறைகளை அரசாங்கம் நிறுத்தியாக வேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரச்சனையில் செய்யப்பட்ட தவறை மலையக விடயத் திலும் செய்ய முற்படாமல் இருப்பது நல்லது.

மலையகத்தில் தீவிரவாதத்துக்கு தளம் கொடுக்கும் தலைமைகள் தற்போது இல்லாமலிருப்பது உண்மை.

ஆனால், தற்போதுள்ள தலைமைகள் தோல்வி கண்டால் அடுத்து உருவாகும் தலைமை வேறு விதமாகவே இருக்கும்.

அதைத் தடுத்து மலையகத்தை வன் முறையில் விழாமல் மீட்க இரண்டு வழிகள் உள்ளன:

1. மலையக அரசியல் சக்திகளது ஒற்றுமையும், தமது கோரிக்கைகளுக்கான ஒன்றுபட்ட போராட்டமும்.

2. மலையக ஜனநாயக அரசியல் தலைமைகளது கோரிக்கைகளை அரசு கவனத்தில் எடுத்து நிறைவேற்றி நம்பிக்கை ஏற்படுத்துவது.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**கொ**ழும்பு குண்டு வெடிப்பால் தனியார் காப்புறுதி நிறவனம் ஒன்றும் கவலைக்கிடமாகியது. காப்புறுதி கொடுக்கும் காப்புறுதி நிறுவனத் திற்கே சேதாரம் வந்தால் அந்தக் காப்புறுதி நிறுவனம் எந்தக் காப் புறுதி நிறுவனத்திடம் போய் காப் புறுதி கேட்பது? இந்த யுத்தக் காலத்திலை கடவுளுக்கே காப்புறுதி யில்லைப் பாருங்கோ. அதிலை காப் புறுதி நிறுவனத்திற்கோ காப்புறுதியிருக்கும்?

**த**ண்ணீரில் விஷம் எண்டு வதந்தி பரவினதல்லோ. வீடுகளுக்கு தகவல் சொல்ல இளைஞர் பட்டாளம் ஒன்றே களத்தில் இறங்கி யிருந்தது. அவை கதவிலை டொக் டொக் எண்டு தட்ட, தேடு தலுக்குத்தான் வந்திருக்கினம் பொலிசார் எண்டு தமிழ் வீடுகள் பதட்டப்பட்டுப் போச்சாம்.

**தை**யல் சம்பந்தப்பட்ட மெசின் கம்பனி ஒன்று கொழும்பில் இருக்குது. அதில் உள்ள முக்கிய புள்ளியொருவர் தேனகம் சென்று திரும்பியவராம். அவருடைய மேலதிகாரி முதல் ஊழியர் வரை அவரைக் கேட்ட கேள்விதான் மனதை கஷ்டப்படுத்திப் போட்டுதாம். தேனகத்தில் உள்ள ரெண்டு எழுத்து பிரமுகரான 'காலனை' சந்திச்சுப் போட்டோ வந்தனீங்கள்? எண்டு கேள்வி மேல் கேள்வியாம். நாளைக்கு நடக்கக்கூடாதது எதுவும் நடந்தால் தன் கதி என்னவென்று அந்த முக்கிய புள்ளி டென்ஷனில் இருக்கிறார். தகவல் கொடுத்தது அவர்தான் எண்டு பழியல்லோ விழும். சொந்த ஊர் போய்த்திரும்பும் தமிழ் அதிகாரிகளுக்கு ஏற்படும் கதியைப் பார்த்தியளோ?

**மு**ஸ்லிம் மக்களும் ரெண்டு எழுத்தாருக்கு உதவக்கூடும் எண்ட சந்தேகம் சின்ன சின்ன கொப்புளமாகத் தோன்றி பெரிசாகிக் கொண்டிருக்குதாம். சில கேந்திர இடங்களில் இருந்து வேறு பகுதிக்கு மாற்றங்கள் நடப்பதாகத் தகவல். கொழும்பு குண்டு விவகாரத்தில் கிடைத்த சில தகவல்களை வைத்து அந்தச் சந் தேகம் வளர்ந்து கொண்டிருப்பதாகக் கேள்வி. அதெல்லாம் சரியுங்கோ, பெரும்பான்மை இனத்தவர் சிலரே வாங்கிக்கொண்டு உதவியிருக்கினம். அதுக்கு என்ன செய்யிறதாம்? உதவுற மனம் இருக்கோ இல்லையோ, பணம் இருக்கல்லோ பணம், அது பாதாளம் வரை பாயும். எப்படித் தடுக்கிறதா?

**கி**ரிக்கெட் விவகாரத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு போய் நீதி கேட்பது நியாயம்தான். என்ரை கேள்வி என்னவென்றால், கிரிக்கெட் விவகாரத்திலை நாலு நாடுகளை அபிப்பிராயம் சொல்லக் கேட்கலாமென்றால், கிடுக்கிப்பிடியாக இருக்கும் இனப்பிரச்சனை விடயத்திலை நாலு நாடுகளது யோசனையைக் கேட்பதிலை என்ன பிழை?

**தீ**ர்வு யோசனைக்கு ஆதரவாக எழுதும்படி தமிழ் பத்திரிகை யாளர்களை அழைத்து அதிகாரமட்டத்தில் விளக்கம் சொல்லப் பட்டது. கூட்டான கட்சியின் நீலமானவர் அதில் கலந்து கொண்டு பத்திரிகையாளர்களுக்கு புத்தி சொன்னவராம். முரசுக்கு அழைப் பில்லையோ? எண்டு ஒரு பத்திரிகையாளர் கேட்க, எரிச்சல்பட்டு ஒரு விளக்கம் சொன்னவராம். தீர்வு யோசனை தயாரிப் பும் அவரே, தரகரும் அவரே எண்டு முரசு ஏற்கனவே செய்தி போட்டது. முரசை கூப்பிட்டு தனது முகத்தை காட்டியிருந்தால் முரசின் செய்தியை உறுதியாக்கினது போல இருக்குமல்லோ, அதுதான் அண்ணர் கூப்பிடேல்லை. காரணம் அப்படியிருக்க அண்ணர் தோரணம் கட்டிப்பார்க்கிறார். உது தோதுப்படாது.

நீலமானவரின் இரட்டை வேடம் கூட்டான கட்சிக்குள்ளும் சிலருக்குப் பிடிக்கேல்லையாம். எண்டாலும் வெளிநாட்டு நிறுவனங் கள் மூலமாக கூட்டான கட்சிக்கு பணம் பெற்றுக் கொடுப்பது அவர்தானாம். அதுதான் மெள்ளவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் முள்ளை தொண்டையில் வைச்சுக் கொண்டு அவதிப்படு கினமாம்.

இந்த வாரம் ஒரு பொன்மொழி. ஜோன் ஃபிலிண்ஸ் என்பவர் செப்பியது.

**"சொர்க்கத்திற்கு போவதற்கு நல்லவர்கள் உழைப்பதைவிட நரகத்திற்கு போவதற்கு கெட்டவர்கள் அதிகம் உழைக்கிறார்கள்."**

# விதிக்கப்பட்ட தடையும் புலிகள் நடத்திய கண்காட்சியும்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

66



இடமிருந்து வலமாக: சிறீ, பத்மநாபா, பாலகுமார், பிரபா. —கைப்படாத கனவு

### இன்று ரெலோ நாளை?

ரெலோவை தடைசெய்துவிட்டதாக புலிகள் இயக்கம் அறிவித்தது ஏனைய இயக்கங்களையும் யோசிக்க வைத்து விட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ஈரோஸ் ஆகிய அமைப்புக்கள் தமக்கெதிராகவும் புலிகள் திரும்பலாம் என்று நினைக்கவே செய்தன.

ரெலோ இயக்கத்தை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூறியே தமது தடைக்கான பிரசாரம் செய்தனர் புலிகள் இயக்கத்தினர்.

ரெலோவுக்கு அடுத்ததாக இந்திய அரசோடு நெருக்கமாக இருந்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

எனவே, ரெலோமீது காட்டப்பட்ட குற்றச்சாட்டு தமக்கெதிராகவும் காட்டப்படலாம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். நினைத்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலதிபர் க.பத்மநாபா அப்போது தமிழ்நாட்டில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உள் பிரச்சனை காரணமாக இரண்டு துருவங்களாக இருந்தது. ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் பத்மநாபாவோடு நின்றவர்களுக்கு டக்ளஸ் தேவானந்தாவோடு இருந்தவர்கள் மீது ஒரு சந்தேகம் இருந்தது.

கிட்டுவோடு டக்ளஸ் தேவானந்தா நட்பாக இருப்பதால் ரெலோவுக்கு உதவி செய்ய விரும்பமாட்டார் என்று நினைத்து விட்டார்கள்.

டக்ளஸ் தேவானந்தா தனது வாகனம் மூலமாகவே நூற்றுக்கு மேற்பட்ட ரெலோ உறுப்பினர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று மானிப்பாயில் இருந்த பிரதான முகாமில் புகலிடம் கொடுத்து வைத்திருந்தார்.

அப்படிச் செய்தாலும்கூட ரெலோ தலைமைக்கு டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்புக் கொடுக்க விரும்பமாட்டார் என்றே ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்குள் இருந்த மறுசாரார் நினைத்துக் கொண்டிருந்தனர்.

### முதல் நாள் மோதல்

ரெலோவின் பிரதான முகாமில்தான் ரெலோத் தலைவர் சிறீசபாரத்தினம் தங்கியிருந்தார்.

புலிகள் தாக்குதலை ஆரம்பித்த முதலாவது நாள் பிரதான முகாமில் இருந்த ரெலோ உறுப்பினர்கள் தீரத்துடன் சண்டையிட்டனர்.

முதலில் அது ஒரு தற்காலிக மோதல் என்றுதான் சிறீசபாரத்தினமும் முதலில் நினைத்தார்.

சண்டை தொடர்ந்த தீவிரமும், கிடைத்த தகவல்களும் புலிகள் இறுதித் தாக்குதல் ஒன்றுக்கு தயாராகிவிட்டதை உணர்த்தத் தொடங்கின.

அதனால் சிறீசபாரத்தினமும் தனது முக்கியமான பாதுகாவலர்களுடன் வேறு ஒரு இடத்துக்கு தப்பிச்செல்ல தீர்மானித்தார்.

அதற்கிடையே சிறீசபாரத்தினத்தின் நம்பிக்கையான ஆள் ஒருவர் மூலமாக பத்மநாபாவோடு தொடர்பு கொள்ளப்பட்டது.

ரெலோவோடு சேர்ந்து புலிகளுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எஃப். களத்தில் இறங்கியிருந்தால் மோதல் தீவிரமாகியிருக்கும்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உள்ளே இருபிரிவுகளாக இருந்தமையால் அதைப் பற்றி யோசிக்கவே இயலவில்லை.

சிறீசபாரத்தினத்துக்கு பாதுகாப்பு வழங்க பத்மநாபா ஒப்புக்கொண்டார்.

கல்வியங்காட்டில் இருந்து சிறீசபாரத்தினத்தை வெளியே கொண்டுவந்து பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பது.

பின்னர் தமிழ்நாட்டுக்கு பத்திரமாகக் கொண்டு செல்வது என்பதுதான் திட்டம்.

சிறீசபாரத்தினம் தப்பிச் சென்றால் ஆபத்து. ரெலோ மீண்டும் பலமாகிவிடும். அதனால் சிறீசபாரத்தினத்தை தப்பவிடக் கூடாது என்று புலிகள் உறுதியாக இருந்தார்கள்.

> சண்டைகளில் இது சகஜம். மறு தரப்பை அச்சமடையச் செய்வதற்கு இப்படியான சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும். இங்கே இது புது அனுபவம் என்பதால் அதிர்ச்சியடைகிறீர்கள். —கிட்டு—

### சிறீ எங்கே?

கல்வியங்காட்டிலிருந்து சிறீசபாரத்தினம் தப்பிச்செல்ல முடியாதளவுக்கு புலிகள் இயக்க உறுப்பினர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்படியிருந்தும் சிறீசபாரத்தினம் தனது நம்பகமான மெய்ப்பாதுகாவலர்களுடன் கல்வியங்காட்டில் இருந்து தப்பிவிட்டார்.

ரெலோவின் பிரதான முகாமை புலிகள் கைப்பற்றியபோது அங்கு சிறீசபாரத்தினத்தை இறந்த உடல்கள் மத்தியில் தேடிப் பார்த்து ஏமாந்து போனார்கள்.

சிறீசபாரத்தினம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களால் கோண்டாவிலில் அன்னங்கை என்னுமிடத்தில் உள்ள வீடொன்றில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டார்.

ஆனால், இந்த விடயம் இராணுவத் தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியவே தெரியாது.

டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்கச் சென்றார் கிட்டு.

"சிறீசபாரத்தினத்துக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"சாதாரண உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம். தலைமையில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது பற்றி இன்னமும் முடிவு செய்யவில்லை. அவர்கள் கேட்டால் யோசிக்கலாம்" என்றார் டக்ளஸ் தேவானந்தா.

ரெலோவை தாம் ஏன் தடை செய்ய வேண்டி வந்தது என்று விளக்கினார் கிட்டு.

"முதலில் ஒரு பாடம் படிப்பிக்கத்தான் நினைத்தோம். அவர்களிடம் இருந்து எதிர்ப்பு இல்லையென்பதால் பூரணமாக முடித்து விடலாம் என்று தீர்மானித்தோம்" என்று டக்ளஸ் தேவானந்தாவிடம் சொன்னார் கிட்டு.

### மரச்சட்ட அடி

ரெலோவின் முக்கிய உறுப்பினர்கள் பலர் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் மோகன். ஒபரேய் தேவனின் சகோதரர். பறுவா மோகன் என்றும் அவரை அழைப்பார்கள்.

அவர்மீது கிட்டுவுக்கு முன்னரே கோபம் இருந்தது. அதனால் தானே நேரடியாகச் சென்று மோகனை மரச்சட்டத்தால் அடித்து நொறுக்கினார்.

"சிறீசபாரத்தினம் எங்கே?" என்று கேட்டு மோகனை துவைத்தெடுத்தார்கள்.

கைதுசெய்யப்பட்ட ரெலோ உறுப்பினர்கள் அனைவரையும் புலிகளது உளவுப்பிரிவினர் விசாரணை செய்தனர்.

விசாரணைக்கு பொறுப்பாக இருந்தவர் வாசு. அவர்தான் அப்போது உளவுப்பிரிவுக்கு யாழ் மாவட்டத்தில் பொறுப்பாக இருந்தவர்.

வாசுவே நேரடியாக பலரை விசாரணை செய்தார். மரச்சட்டத்தால்தான் அடிப்பார். தலைகீழாகக் கட்டி தொங்கவிடப்பட்டவர்கள் மரச்சட்டத்தால் அடிவிழும்போது உரத்துக் கத்துவார்கள். 'கத்தாதே' என்று அடி தொடரும்.

### மக்களின் பாதுகாப்பு

புலிகளிடமும் பிடிபடாமல், ஏனைய இயக்கங்களிடமும் புகலிடம் கேட்காமல் பொதுமக்களது பாதுகாப்பில் பல ரெலோ உறுப்பினர்கள் உயிர் தப்பினார்கள்.

இயக்கங்கள் தமக்குள் சண்டை போடுவதை மக்கள் விரும்பவில்லை.

"எல்லோரும் எங்கள் பிள்ளைகள்தானே. போராட வந்தவர்கள்தானே" என்று சொல்லி தமது வீடுகளில் தங்கவைத்தார்கள்.

ஆனால் ரெலோ பலமாக இருந்தபோது அதனை விழுந்து விழுந்து ஆதரித்த சிலர் கட்சி மாறினார்கள்.



கிட்டு

புலிகள் இயக்கத்தினருக்கு கொக்காகோலா கொடுத்து ரெலோ மீதான வெற்றியில் தமது மகிழ்ச்சியை அவர்கள் தெரிவித்ததுதான் வேடிக்கை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்.

யாழ்ப்பாணம் இருபாலை சந்திக்கருகில் ஒரு தேநீர் கடை இருந்தது. அந்தக் கடையில்தான் ரெலோ உறுப்பினர்கள் வாடிக்கையாக சாப்பிடுவார்கள். கூடக் குறைய கணக்குச் சொன்னாலும் பணம் கொடுத்துவிட்டுப் போவார்கள். அவரும் தன்னை ஒரு ரெலோ ஆதரவாளராகவே காட்டிக்கொண்டிருந்தார்.

ரெலோவை புலிகள் தாக்கிவிட்டு, இருபாலை சந்திக்கு அருகிலும் டயர் போட்டு கொளுத்திக்கொண்டிருந்தார்கள்.

ரெலோ உறுப்பினர்கள் டயிரில் எரிந்து கொண்டிருந்தார்கள்.

அந்த தேநீர் கடை உரிமையாளர் என்ன செய்தார் தெரியுமா? புலிகள் இயக்க உறுப்பினர்களின் களைப்புத்தீர சுடச்சுட தேநீர் தயாரித்து வழங்கிக்கொண்டிருந்தார்.

அதேவேளையில் மற்றொரு சம்பவம்.

நல்லூரில் இருந்தது அவர்கள் வீடு. இரண்டு பிள்ளைகளும் புலிகள் இயக்கத்தில் இருந்தார்கள்.

மறைய இடம்தேடிச் சென்ற ரெலோ உறுப்பினர்களுக்கு அந்த விஷயம் தெரியாது.

தமது வீட்டில் அவர்களை தங்க வைத்தது அந்தக் குடும்பம்.

ரெலோ இயக்க உறுப்பினர்கள் இருவர் வீட்டில் மறைந்திருப்பது தமது பிள்ளைகளுக்கே தெரியாமல் பார்த்துக் கொண்டனர் அந்த வீட்டார்.

விடைபெறும்போதுதான் ரெலோ உறுப்பினர்களுக்கே விஷயம் தெரிந்தது. விழிகளில் கண்ணீரோடு நன்றி சொன்னார்கள். அதற்கு அந்த வீட்டார் சொன்னார்கள்; "தம்பிமார், நீங்களும் எங்கள் பிள்ளைகள்தானே".

ரெலோவை சரணடையுமாறு புலிகள் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

இலங்கை வானொலியில் பணியாற்றிய கே.எஸ்.ராஜா பணியால் விலக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார்.

ரெலோவை சரணடையுமாறு ஒலிபெருக்கியில் அறிவிக்குமாறு கூறி கார் ஒன்றில் அவரை ஏற்றிவிட்டார்கள் புலிகள். தனது வழக்கமான பாணியில் கே.எஸ்.ராஜா அறிவிக்கத் தொடங்கினார்.

### எப்படிச் செல்வது?

சிறீசபாரத்தினத்தை பளையில் உள்ள தாழையடி கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டார் பத்மநாபா.

பளைக்கு செல்வதற்கு இடையில் புலிகளது சோதனை அரணகளை தாண்ட வேண்டியிருக்கும்.

யாழ்பாணத்திலிருந்து சிறீசபாரத்தினம் தப்பிச்சென்றுவிடலாம் என்பதால் யாழ்ப்பாணக் கடலோரங்களிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறும் தரைப்பாதைகளிலும் கடும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

சகல வாகனங்களையும் மறித்து சோதனையிட்டனர்.

டக்ளஸ் தேவானந்தாவும் அவரது பாதுகாவலர்களும் சென்ற வாகனமொன்றை புலிகள் மறிக்க முற்பட்டதில் பிரச்சனை எழுந்தது.

"எமது வாகனங்களை மறிக்கக் கூடாது. மறித்தால் பிரச்சனை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்" என்று சொல்லிவிட்டார் டக்ளஸ் தேவனந்தா.

அப்போது டக்ளஸ் தேவானந்தாவின் வேனுக்குள் அவரது மெய்ப் பாதுகாவலர்களுடன் நான்கு ரெலோ உறுப்பினர்களும் இருந்தனர்.

வேறு வழியின்றி புலிகள் வழிவிட்டனர். டக்ளஸ் தேவனந்தா ஆட்களோடு பிரச்சனைப் பட வேண்டாம் என்று கிட்டுவும் உத்தரவிட்டிருந்தார்.

இடையிலே ஒரு தடவை தாழையடிக் கடற்கரையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் படகு ஒன்று தமிழ்நாட்டுக்கு செல்ல ஆயத்தமானது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களோடு ரெலோ உறுப்பினர்களும் படகில் ஏற்றப் பட்டனர். புலிகளுக்கு எப்படியோ செய்தி கிடைத்துவிட்டது.

குறிப்பிட்ட இடத்துக்கு வந்த புலிகள் அந்த படகில் இருப்பவர்களை பார்க்க வேண்டும் என்று கேட்டார்கள். 'முடியாது' என்று மறுத்துவிட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அதே தாழையடி கடல் மார்க்கமாகத்தான் சிறீசபாரத்தினத்தையும் ஏற்றி அனுப்பத் திட்டமிடப்பட்டது.

### சுற்றி வளைப்பு

டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியாமல் ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தமையால் தாமதங்கள் ஏற்பட்டன.

ஒரு சவப்பெட்டி செய்து, அதற்குள் சிறீசபாரத்தினத்தை படுக்கவைத்து கொண்டு செல்ல ஏற்பாடு நடந்தது. சவப்பெட்டியும் தயாராகிவிட்டது.

இடையிலே புலிகள் மறித்தால் தமது உறுப்பினரது உடலைக் கொண்டு செல்வதாகக் கூறிவிடலாம் என்பதுதான் நோக்கம்.

இந்த ஏற்பாடுகள் ஒரு புறம் நடந்து கொண்டிருந்தபோது, சிறீசபாரத்தினம் தங்கியிருந்த இடத்தை புலிகள் கண்டுபிடித்து விட்டனர்.

கிட்டுவின் தலைமையில் சென்ற புலிகளது அணி கோண்டாவிலில் அன்னங்கையில் இருந்த வீட்டைச் சுற்றிவளைத்தது.

எதிர்த்துப் போராடுவதில் பலன் இல்லை. முதலில் நிலமையைச் சமாளிக்க வேண்டும். என்று சிறீ சபாரத்தினம் நினைத்தாரோ என்னவோ, வீட்டைவிட்டு வெளியே வந்தார்.

கிட்டுவை நோக்கினார் சிறீசபாரத்தினம். "நாங்கள் பிரச்சனையைப் பேசித் தீர்க்கலாம்" என்று சொன்னார்.

கிட்டு பதிலேதும் சொல்லவில்லை. சுடத்தொடங்கினார்.

சிறீசபாரத்தினமும் அவரது மெய்ப் பாதுகாவலர்களும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்.

சிறீசபாரத்தினத்தின் உடலை தூக்கிக் கொண்டு புலிகள் சென்றுவிட்டனர்.

அதனையடுத்து ஒலிபெருக்கி பூட்டிய கார்களில் புலிகள் அறிவித்த செய்தி இது;

"இந்திய கைக்கூலிகளான ரெலோ இயக்கத் தலைவர் சிறீசபாரத்தினம் இன்று நடைபெற்ற மோதலில் கொல்லப் பட்டார். ரெலோ உறுப்பினர்கள் எம்மிடம் வந்து சரணடைந்தால் மன்னிப்பு வழங்கப் படும்."

### கண்டனங்கள்

சிறீசபாரத்தினம் கொல்லப்பட்டதை ஏனைய இயக்கங்கள் யாவும் கண்டித்தன.

யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் சவப்பெட்டி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்டது.

ஏனைய இயக்கங்கள் பத்திரிகை அறிக்கை மூலம் கண்டனம் தெரிவித்ததோடு நிறுத்திக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி சிறீசபாரத்தினம் பலியான செய்திகேட்டு அதிர்ந்து போனார்.

முரசொலி பத்திரிகையில் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் "எனது நெஞ்சில் இருந்து இரத்தம் வடிகிறது" என்று தனது வேதனையை வடித்திருந்தார். புலிகளையும் கண்டித்திருந்தார்.

### விளக்கம் சொல்லப்பட்டது

ரெலோ உறுப்பினர்களை டயரில் போட்டு எரித்தது ஏன்? என்று கிட்டுவிடம் பலரும் கேட்டார்கள்.

"சண்டைகளில் இது சகஜம். மறுதரப்பை அச்சமடையச் செய்வதற்கு இப்படியான சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும். இங்கே இது புது அனுபவம் என்பதால் அதிர்ச்சியடைகிறீர்கள்" என்று விளக்கம் சொன்னார் கிட்டு.

யாழ்ப்பாணம் நல்லூரில் புலிகள் ஒரு கண்காட்சி நடத்தினார்கள்.

ரெலோ பாவித்த வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன.

ரெலோவால் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் என்று தொலைக்காட்சி பெட்டிகள், வீடியோ டெக்குகள், தங்க நகைகள் போன்றவையும் வைக்கப்பட்டிருந்தன.

உரியவர்கள் வந்து அடையாளம் காட்டி பெற்றுச் செல்லலாம் என்று அறிவித்தார்கள்.

ரெலோவால் கொள்ளையிடப்பட்டதாக கூறி பார்வைக்கு வைக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி புலிகள் இயக்கத்தின் வசம் இருந்தவை என்பது கிட்டுவுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

ரெலோ தடைசெய்யப்பட்டதையும், ரெலோ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையையும் நியாயப்படுத்த புலிகள் செய்த ஏற்பாடுதான் அந்தக் கண்காட்சி.

ரெலோவின் கல்வியங்காட்டு முகாமில் பெருந்தொகையான ஆயுதங்கள் இருந்தன. அத்தனையையும் புலிகள் கைப்பற்றினார்கள்.

ஐந்து பிரதான இயக்கங்களில் ஒன்று அதிலொரு இயக்கத்தாலேயே தடை செய்யப்பட்டது.

நான்கு இயக்க ஒற்றுமையும் ஈழத் தேசியவிடுதலை முன்னணியும் (ENLF) ரெலோவிற்கு விதிக்கப்பட்ட தடையோடு முடிந்த கதையாகியது.

கைகோர்த்து நின்ற நான்கு இயக்க தலைவர்களில் ஒருவர் சக இயக்கத்தாலேயே கொல்லப்பட்டார்.

ஈழப்போராளி அமைப்புக்களது முதலாவது ஒற்றுமை முயற்சி முறிந்த கதையும் அதுதான்.

(தொடர்ந்து வரும்)

# இலங்கையில் உலகக் கிண்ண கிரிக்கெட்!

அலசுவது - இராஜதந்திரி



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கோலாகலமான முறையில் ஆரம்பமாகியுள்ளன.

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவிலுள்ள 'ஏடன் கார்டின்ஸ்' **(Eden Gardens)** மைதானத்தில் கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டிகளின் ஆரம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இறுதி நிகழ்ச்சிகள் பாகிஸ்தானின் லாகூரில் இடம் பெறவுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் இணைந்தே இந்த ஆறாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்றன.

## ஒருசாரார்: "கிரிக்கெட் ஒரு கனவான்களின் பந்தயம்."

## மறுசாரார்: "11 மடையர்கள் விளையாடுவதை ஆயிரம் மடையர்கள் பார்த்து ரசிக்கிறார்கள்."

இலங்கையில் அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், கென்யா, ஸிம்பாப்வே ஆகியன பங்கு கொள்ளும் போட்டிகள் இடம்பெறுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆயினும் அவுஸ்திரேலிய அணி, மேற்கிந்தியதீவுகள் அணி என்பன இலங்கையில் இடம்பெறும் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன.

இலங்கையில் மத்திய வங்கிக் கட்டிடம் தகர்க்கப்பட்ட சம்பவத்தை ஆதாரம் காட்டியே அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் என்பன இலங்கைவர மறுப்புத் தெரிவித்திருந்தன.

இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் ஏறத்தாழ ஒரே வகையான அரசியல் மற்றும் தீவிரவாதப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் சமூக, கலாசார, பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, அரசியல் மற்றும் தற்போதைய தீவிரவாத இன மத பூசல்கள் விடயத்திலும் இம்மூன்று நாடுகளும் ஏறத்தாழ ஒரே விதமான சூழ்நிலைகளுக்கே முகங்கொடுத்திருக்கின்றன.

குண்டு வெடிப்புகள் என்பது பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் கடந்த சில வருடங்களாகவே அடிக்கடி இடம்பெறுவதொன்றாகவே இருந்திருக்கின்றது.

இம் மூன்று நாடுகளிலும் இலங்கை, கடந்த பன்னிரெண்டு வருடகாலமாகத் தொடர்ச்சியாக ஒரு மோசமான உள்நாட்டு யுத்தத்தைக் கொண்டிருக்கின்றது.

இந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக தென்னாசியாவில் அதிகளவு குண்டு வெடிப்புக்களை கடந்த 12 வருடகாலமாகக் கண்டிருந்த ஒரு தலை நகரமாகவே கொழும்பு விளங்குகின்றது.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் அரசியல் தலைவர்கள் முதல் சாதாரண குடிமக்கள் வரை பல நூற்றுக்கணக்கானவர்களைப் பலியெடுத்துள்ளது. கூடவே சொத்துக்கள் உடமைகளை நாசமாக்கிப் பல கோடி ரூபா நஷ்டங்களையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மட்டும் உயிர், உடமை நஷ்டங்கள் ஏற்படவில்லை. இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் கடந்த 12 வருடகால யுத்தத்தில் சின்னாபின்னமாகியுள்ளதுடன், இப்பிரதேசங்கள் இன்றைய ஆப்கானிஸ்தான், பொஸ்னியா, செச்னியா போன்ற பிரதேசங்களுக்கு நிகரானவையாக அழிவுகள், சிதைவுகளைக் கொண்டுள்ளன.

இத்தகைய அழிவுகள், அவலங்களுக்கு மத்தியில் இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு மாநகரில் இலங்கைப் பொருளாதாரத்தின் சிரசாக இருக்கும் மத்திய வங்கிக் கட்டிடம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் அனைத்தையுமே கேள்விக்குறியாக்கிவிட்டுள்ளது.
இலங்கை அரசாங்கம் அதன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை மட்டுமல்ல, முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது மக்களைக் கூட பாதுகாக்கத்தவறியுள்ள நிலையில், வெற்றிகரமாக சர்வதேச ரீதியிலான விளையாட்டுப் பந்தயங்களை நடத்த முடியுமா? அல்லது அவ்விளையாட்டுக்களுக்கென வருவோருக்கு தகுந்த பாதுகாப்பை வழங்க முடியுமா என்ற கேள்விகள் நிச்சயம் எழவே செய்யும்.

எனவே அவுஸ்திரேலிய அணியும், மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இலங்கை வருவதில் தமது பாதுகாப்புக்குறித்து அஞ்சியமை நியாயமானதாகவே இருக்கின்றது.

கடந்தகாலங்களில் இரு தடவைகள் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இலங்கைக்கு கிரிக்கெட் பந்தயங்களில் பங்குபற்றவந்தபோது பாரிய குண்டு வெடிப்புகள் இடம்பெற்றிருந்தன. இதனால் அவ்விருதடவைகளும் நியுஸிலாந்து வீரர்கள் அச்சத்தின் காரணமாக தமது பந்தயங்ளைச் சுருக்கிக் கொண்டனர். அத்துடன் அந்த அணியைச் சேர்ந்த வீரர்கள் சிலர் நாடுதிரும்பியுமிருந்தனர்.

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் நியூஸிலாந்து அணியினர் கொழும்பு வந்து காலிமுகத்திடலை அண்டிய தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கியிருந்தபோது, அந்த ஹோட்டலுக்கு எதிரே பாரிய குண்டு வெடிப்பொன்று நிகழ்ந்தது.

இக் குண்டு வெடிப்பில் கடற்படைத் தளபதியாகவிருந்த கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்பட்டிருந்தார்.

அச்சமயம் தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இருந்த நியூஸிலாந்து அணியினர் குண்டு வெடிப்பின் அதிர்வை உணர்ந்ததுடன், தாம் நாடு திரும்பி விடவேண்டுமென்று பிடிவாதமாக நின்றனர்.

ஆனால் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மன்றாட்டமாக வேண்டி அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்ததையடுத்தே, தொடர்ந்து போட்டிகளில் ஈடுபட நியுஸிலாந்து அணியினர் முன்வந்திருந்தனர்.

கிரிக்கெட் பந்தயத்தை கனவான்களின் விளையாட்டு **(Gentle Men's Game)** என்றே குறிப்பிடுவதுண்டு.

எனவே கிரிக்கெட் பந்தயத்தை ஆடுபவர்களுக்கு ஆட்டத்திறமை மட்டும் இருந்தால் போதாது; அவர்கள் சிறந்த பண்பாளர்களாகவும் இருக்கவேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை பிரிட்டிஷ்காரர்களினாலேயே இப்பந்தயம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.
ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் இருந்த தோட்டத்துரைமார்கள் இப்பந்தயத்தை ஆடியதுடன், இப்பந்தயத்தை இலங்கையரிடையேயும் நாளடைவில் அறிமுகப்படுத்தினர்.

காலப் போக்கில் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கிரிக்கெட் பந்தயம் பாடசாலை மட்டங்களிலும் பரவிப் பிரபலமடையத் தொடங்கியது.

இலங்கையில் கிரிக்கெட் பந்தயங்களை பொறுத்தவரை தமிழர்களும் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கொழும்பு நகரின் மேயராகவிருந்த சரவணமுத்து அவர்கள் ஓவல் மைதானம் என்ற பெயரில் கிரிக்கெட் மைதானம் ஒன்றை கொழும்பில் நிர்மாணித்தார்.

சர்வதேச தரத்திலான இம்மைதானம், தற்போது தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகத்தினருக்குரியதாக இருக்கின்றது.

இது தவிர இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரரான சதாசிவம் இன்றுங்கூட இலங்கைக் கிரிக்கெட் அபிமானிகள் மத்தியில் நீங்கா இடம்பெற்றுள்ளார்.

இவரது துடுப்படித்திறமை அசாதாரணமானது. இலங்கை அணியின் சார்பில் பல்வேறு பந்தயங்களிலும் அபரிமிதமாக இவர் விளையாடியிருந்தார்.

இது தவிர, கொழும்பில் கடந்த காலங்களில் கிரிக்கெட் ஆட்டத்தில் பாடசாலை மட்டத்திலும் கழகங்கள் வாயிலாகவும் தமிழர்கள் பலரும் கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் பிரகாசித்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கிரிக்கெட் பந்தயம் பிரபலமடைந்திருக்கவே செய்தது. இலங்கையின் இன, பிரதேசவாத அரசியல் யாழ்ப்பாணத்தவர்களை தேசிய மட்டத்தில் பிரகாசிக்க விடவில்லை.

இருந்தபோதிலும் மிகத்திறமையான கிரிக்கெட் ஆட்டக்காரர்களை காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணம் உருவாக்கி வந்துள்ளது.

இராணுவ அச்சுறுத்தல்கள், அரசியல் கெடுபிடிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் இலங்கைக்கு வெளிநாட்டுப் பாடசாலைகள் கிரிக்கெட் அணியினர் பயணங்களை மேற்கொண்டபோது யாழ்ப்பாணத்துக்கும் அவர்கள் வரத்தவறியிருக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய பாடசாலைகள் கிரிக்கெட் அணியொன்று பயணஞ் செய்து விளையாடியிருந்தது.

இக் கிரிக்கெட் அணியில் முன்னாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் கப்டன் இயன் சாப்பலின் சகோதரர் ஒருவரும் இடம் பெற்றிருந்தார்

பாகிஸ்தான் பாடசாலைகளின் கிரிக்கெட் அணியொன்றும் யாழ்ப்பாணம் வந்து, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில், யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் அணியுடன் விளையாடியிருந்தது.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், தற்போதைய இலங்கைக் கிரிக்கெட் அணியின் மனேஜருமான டுலீப் மெண்டிஸ், பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில், கொழும்பு மாவட்ட பாடசாலை அணி சார்பில் யாழ்ப்பாணத்துக்கு விளையாட வந்திருந்தார்.

அப்போது யாழ் மாவட்ட பாடசாலை ஒன்றின் மாணவர் ஒருவர் வீசிய முதல்பந்து விச்சிலேயே அவர் ஆட்டமிழந்திருந்தார்.

எனவே இன்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு மக்கள்கூட கிரிக்கெட் பந்தயங்களை ஆடவும், ரசிக்கவும் தெரிந்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால் அம்மக்கள் இன்று தமது வீடுவாசல்களை இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள நிலையில் இலங்கை அரசு உலகக்கிண்ணப்போட்டிகளை நடத்துவதில் ஆர்வங்காட்டுகிறது.

இந்நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் உலக அரங்கில் தமது நிலையைப் பலப்படுத்தவும், தாம் ஓர் உன்னத விளையாட்டின் பிரியர்கள் எனவும் காட்டிக்கொள்ள முற்படலாம்.

இருந்த போதிலும் கனவான்களின் பந்தயம் என்று வர்ணிக்கப்படும் கிரிக்கெட் பந்தயம் பற்றி இப்படியும் கூறுவதுண்டு:

"11 மடையர்கள் விளையாடுவதை ஆயிரம் மடையர்கள் பார்த்து ரசிக்கிறார்கள்" என்பதே அக்கூற்றாகும்.

எனவே இலங்கையைப் பொறுத்தவரை ஒரு கனவான்களின் பந்தயத்தை நடத்துவதில் விவேகமற்ற கொள்கைகளையுடையவர்களும் ஆர்வங்காட்டுகிறார்கள் என்று குறிப்பிடுவதே சாலப் பொருத்தமானதாகும்.



பெண்கடற்கரும்புலிகளைத் தயார்ப்படுத்தும் பிரபாகரன்.

## "யாரை யார் சுற்றி வளைப்பது?"

**சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தொடர்பாக 'ஈழநாதம்' பத்திரிகையில் விடுதலைப் புலிகளது விமர்சகர் எழுதியிருப்பதில் இருந்து :**

சூரியக் கதிர் நடவடிக்கையின்போது இறந்த போராளிகளது எண்ணிக்கை 300 அளவிலேயே இருக்கும். ஆயினும் 1800க்கு மேற்பட்ட புலிகள் இறந்ததாக அரசாங்கம் பிரசாரப்படுத்தி வருகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பில் லெப்டினன்ட் கேணல் அகிலா இறந்ததை முக்கிய இறப்பாகக் குறிப்பிடலாம்.

சிறீலங்கா அரசாங்கம் இராணுவ ஆட்சிக்குட்பட்ட இடங்களில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவர முடியவில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிலத்தைப்பிடித்தல், இராணுவ முகாம்களின் எல்லைப் பரப்பை விஸ்தரித்தல் என்ற விடயமும் சரிவரப் போவதில்லை.

பெருவாரியான படையினரை கிழக்குப் பகுதியிலிருந்து எடுத்து வடபகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தும்போது, கிழக்குப்பகுதி இழக்கப் படுகின்றது. நீண்டகால இராணுவ, குடியேற்ற நடவடிக்கைகள் மூலம் அபகரித்துக்கொள்ள முயன்ற கிழக்குப் பகுதி பறிபோவதையும், விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுக்குள் வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

**"இலங்கை இராணுவத்தின் 'தின் பீன் பூ' யாழ்ப்பாணத்தில்தான். எப்போது என்பதுதான் தீர்மானிக்கப்படவேண்டும்."**

பொருத்தமற்ற கால, இடச்சூழலில் இராணுவம் பரந்த நிலப்பரப்பில் பரவுவதும், நீண்டகாலம் அப்பகுதியில் தங்கியிருப்பதும் ஆபத்தாகவே முடியும்.

பெரும் படையணிகளுடன் விடுதலைப்புலிகள் பெரும் எதிர்த்தாக்குதல்களை தொடுக்கும்போது பெரும் அழிவுகளுடன் பழைய இடங்களுக்கு ஓடுகின்ற நிலையோ, யாழ் மண்ணே அவர்களுக்கு புதைகுழியாக மாறுகின்ற நிலையோ ஏற்படும்.

விடுதலைப்புலிகளை சுற்றிவளைத்து சரணடையவைக்கப் போவதாக அரசாங்கமும், இராணுவமும் கூறுகிறது. யாரை யார் சுற்றிவளைப்பது என்பது விரைவில் தெரியும். புலிகளின் மண்ணில் நின்று கொண்டு, அவர்களைச் சுற்றிவளைக்கப் போவதாகக் கூறுவது அபத்தம்.

வியட்நாமில், வியட்நாம் போராளிகளைச் சுற்றிவளைக்க முற்பட்டு, ஃபிரெஞ்சு இராணுவம்தான் சுற்றிவளைக்கப்பட்டது. தின் பீன் பூ சுற்றிவளைப்போடு, சரணாகதியடைந்த ஃபிரெஞ்சு இராணுவம் முற்றுமுழுதாக வியட்நாமைவிட்டு வெளியேறியது.

சிறீலங்கா இராணுவத்தின் தின் பீன் பூ யாழ்ப்பாணத்தில்தான் என்பது நிச்சயம். எப்போது என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டும்."



18 வயதில் ருத்மேரி

**ருசிகரமான**

# உண்மைச் சம்பவம்



30 வயதில் ருத்மேரி

**தருவது — ரசிகன்**

# ஒரே ஒரு கொலை

**"தாழ்வு மனப்பான்மை அவருக்குள் சந்தேக மிருகத்தை உசுப்பிற்று. அந்த மிருகம் என்னை வதைத்தது."**

### ➡ ருத்மேரி பேசுகிறேன்

படுக்கையில் மல்லாந்து கிடந்துமிகச் சுதந்திரமாக தூக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவரைப் பார்க்க எனக்கு எரிச்சல் வந்தது.

நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதே அவருக்கு மறந்துபோய்விடுகிறது.

அப்படியொன்றும் மறந்துவிடக் கூடிய சராசரிப் பெண் அல்ல நான்.

நேற்றுக்கூட ஹேன்றி கேட்டான், "உனக்கு எத்தனை வயது?" ஒளிக்காமல் உண்மையைச் சொன்னேன். "முப்பத்தொன்று". "பொய்! பத்துவயது அதிகமாகச் சொல்கிறாய்" என்று தொடக்கூடாத இடத்தில் தொட்டுப்பார்த்தான். கிராதகன். எங்கே தொட்டால் என்னாகும் என்றெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறான்.

யாரது ஹென்றி? அவனை அறிமுகப்படுத்த முன்னர், இதோ அருகில் கட்டிலில் கிடந்து தூங்கிக் கொண்டிருக்கும் என் கணவரை அறிமுகப்படுத்தி விடுகிறேன்.

பெயர்: அல்பேர்ட் ஸ்னைடர். தொழில்: படகுகளைப் பற்றிய ஆராய்ச்சி. அதைத் தவிர வேறெந்த சுவாரசியமான ஆராய்ச்சியிலும் ஈடுபாடே கிடையாது.

படகுச்சவாரியென்றால் அதென்ன சொல்வார்கள்.. ஆ.. அலாதிப்பிரியம். வேறெந்த சவாரியும் செய்யப் பிரியம் அதிகமில்லை.

வீட்டிலே நான் ஒருத்தி இருப்பதுகூட படகில் ஏறிவிட்டாரென்றால் சத்தியமாக மறந்து போய்விடுவார். எனக்குத் தெரியும்.

என்னைவிட பத்துவயது அவருக்கு அதிகம். நாற்பத்தொன்று!

பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமாக இருப்பார். அதுதான் பார்த்தவுடன் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தேன்.

பின்னர்தான் தெரிந்தது, அவருக்கு இன்னொரு காதலியும் இருக்கிறாள் என்று. படகுதான் அவரது காதலி.

அப்போது நான் இப்போதிருப்பதை விட அழகாக இருப்பேன். அதிக இளமையாக இருந்தேன். இளமையை உபயோகமாக்கும் கனவுகளோடு இருந்தேன்.

அன்பான கணவர். அணைத்தபடி தூங்கி, அணைத்தபடி பேசி, அணைத்தபடியே நடந்து, நாம் நினைத்தபடியே வாழ்ந்து.. நீண்ட பட்டியல் ஒன்று என் கனவில் இருந்தது.

முதல்நாள் இரவிலேயே என் கனவுகள் மணலில் கட்டிய கோட்டையாக காணாமல் போய்விட்டன.

முதல்நாளன்றே படகுகள் பற்றிப் பேசினார். பேசினார் பேசிக்கொண்டேயிருந்தார்.

"சலிப்பாக இருக்கிறதா டியர்?"

"நோ நோ.. மிகச் சுவாரசியமாக இருக்கிறது." என்றேன் எரிச்சலை மறைத்தும், கொட்டாவியைத் தடுத்தும் கொண்டு.

'கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தேன். மெல்லிய நைட்டி அணிந்திருந்தேன். இளமை உன் எதிரே இருக்கும் போது படகுச் சவாரிபற்றிப் பேசுகிறாயே என் கண்ணாளா' என்பதுபோல எழுந்த தணிந்த நெஞ்சகங்களால் உணர்த்த முயன்றேன்.

"அதில் பார் டியர் படகுச்சவாரியில் எனக்கு அலுப்பே வருவதில்லைத் தெரியுமோ, இப்படியெல்லாம் ஒருநாள் கூட சோம்பல் முறித்தது கிடையாது தெரியுமோ?"

கெட்டதுபோ! அதன்பின்னர் நான் எந்த முன் முயற்சியிலும் இறங்கவில்லை. அவர் தொடர்ந்து அளந்துவிட்டு, ஏதோ என் அதிஷ்டம் ஒரு கட்டத்தில் நிறுத்தி, "தூக்கம் வருவது மாதிரி இருக்கிறது, உனக்கு?" என்றார்.

"அப்படியா!" என்றேன், "உனக்கு வரவில்லையா, அப்படியானால் சரி, அமெரிக்காவிலேயே அதிக படகுச்.. நீ பொய் சொல்கிறாய். கொட்டாவி வருகிறது உனக்கு. வா தூங்கு." என்றார்.

அந்த "வா. தூங்கு"வுக்கு என்ன அர்த்தம்? அறியும் சுவாரசியத்தில் கட்டிலில் சரிந்து வேண்டுமென்றே மார்புகள் உயர்ந்திருக்க, மல்லாந்து சரிந்திருக்க, "குட்நைட்" என்றார். "குட்நைட்" என்றேன் எல்லா எதிர்பார்ப்பும் வடிந்துபோன நிலையில்.

### ➡ ஹென்றி பேசுகிறேன்

நான் ஹென்றி. 29 வயதான அமெரிக்க இளைஞன். 29 இளமைதான் என்று நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் நான் இளைஞன்.

இளமை என் உடலில் இருக்கும்போது அதன் பயன் என்னவென்று அறிந்துவிடத் துடிக்கும் இளைஞன். என்னை நான் வர்ணிக்கக்கூடாது. அருகில் புகைப்படம் இருக்கிறது. பார்த்துக்கொள்ளுங்கள்.



ஹென்றி

அழகானவன் என்று சொல்வதற்கு ஒரு மில்லி மீட்டர் தயங்கினாலும், அழகில்லாதவன் என்று சொல்லமாட்டீர்கள்.

எனது 25 வயதில் ஒரு விபத்து நடந்தது. அதுதான் என் திருமணம். விபத்து என்று சொன்னது தப்பாகப்பட்டால் மன்னியுங்கள். எனக்கு வேறுவிதமாகச் சொல்லத் தெரியவில்லை.

எங்கள் இருவருக்கும் எந்த ஒரு ரசனையிலும் ஒத்துவரவில்லை. எனக்கு செஸ் விளையாடப் பிடிக்கும். செக்ஸ் பிடிக்கும். இரண்டுமே அவளுக்கு பிடிப்பதில்லை. எனக்கு மர்லின் மன்றோவை பிடிக்கும். அவளுக்கு சினிமாவே பிடிக்காது. எனக்கு ஒரு குழந்தை தேவை என்றேன். 'அது ஒன்றுதான் குறைச்சல்' என்று சலிப்புக்காட்டுவது அவளுக்கு பிடிக்கும்.

இரவு நரகம்தான். சிகரெட் புகைத்துக் கொண்டு நான் விழித்திருப்பேன். இழுத்து மூடிக்கொண்டு தூங்கிப் போவாள்.ஒருநாள் வீடியோவில் படம் போட்டேன். "நீங்கள் பாருங்கள்" என்றாள். "இல்லை நீயும் இரு." என்று கட்டிப்போடாத குறையாக பிடித்துவைத்தேன்.

அது ஒரு மாதிரியான படம். ஒரு ஆணும், பெண்ணும் 'ஹலோ' சொல்லிக் கொண்டார்கள். இந்த உலகத்தில் மிக முக்கியமான காரியத்தில் ஈடுபடப்போவது போன்ற சிரத்தையோடு அனைத்தையும் களையத் தொடங்கினார்கள். அவள் களைய அவன் உதவினான். அவன் களைய அவள் உதவினாள். இருவரும் அணைத்தபடியே சோபாவில் போய்....

என் அருகில் திருப்பிப் பார்த்தேன். அவள் எப்போதோ எழுந்து போய்விட்டாள். அன்று இரவு மட்டும் ஐந்து பாக்கெட் சிகரெட் ஊதித்தள்ளினேன். அவள் நன்றாக, நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தாள்.

இப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டால் என்னவென்று ஒரே ஒர தடவை மட்டும் நினைத்தேன். துணிச்சலில்லை.

நாலு வருட வாழ்க்கையில் எப்போதாவது என் கட்டாயத்திற்காக-ஒத்துழைத்தாள் என்று சொல்லமாட்டேன்-சம்மதித்தாள்.

'செக்ஸ்' என்றால் என்ன? அது ஒரு உணர்வுபூர்வமான பரிமாறல்தானே. பாவச் செயல் அல்லவே. அவளுக்கு புரியவைக்க முன்னர் நான் கிழவனாகிவிடுவேன்.

அப்போதுதான் அவளைச் சந்தித்தேன். நியூயோர்க்கில் ஒரு உணவுவிடுதியில் எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்தது என்று ஞாபகம்.

அப்படி ஒரு அழகியை இத்தனை நெருக்கமாக நான் சந்தித்ததில்லை. அவள் விழிகள் எதையோ தேடுவது போல எப்போதும் அலைந்து கொண்டிருந்தன. உள்ளே ஒரு சோகம் இருப்பதை அவளது புன்னகையால் மறைக்க முடியவில்லை.

இருவருக்கும் ஏதோ ஒரு பிணைப்பு இருப்பதாக மூளைக்குள் ஒரு பட்சி சொன்னது.

தொடர்ந்து சந்தித்தோம். மெல்ல, மெல்ல எங்கள் சோகங்களை பரிமாறிக் கொண்டோம்.

நியூயோர்க்கில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில், மிக ஆடம்பரமான தனியறையில், முதன் முதலாக அவளை முழுமையாக பார்த்தேன்.

என் வாழ்வில் நான் ஒரு பெண்ணுடன் மிகச் சந்தோசமாக இருந்தது அன்றுதான் முதல் முறை. அவளும் அதையே சொன்னாள். ஹோட்டல் 'பில்'லை அவளே கட்டினாள். "இந்தா ஹென்றி செலவுக்கு வைத்துக் கொள். பணம் தேவையானால் கூச்சப்படாதே. என்னைக்கேள்." என்றாள்.

"இப்போது வேண்டாம். கூலி தருவது போலாகிவிடும். பின்னர் பார்த்துக் கொள்ளலாம்" என்றேன்.

### ➡ ருத்மேரி பேசுகிறேன்

எங்கே விட்டேன். அவரது படகுச் சவாரிப் புலம்பலில் நிறுத்தினேன் அல்லவா.

என்றோ ஒருநாள், படகுச்சவாரி, படகுகள் ஆராய்ச்சி எல்லாவற்றையும் அவர் தற்காலிகமாக மறந்த ஒரு கணத்தில் நானும் அவரும் ஒன்று சேர்ந்தோம். அந்தக் கணத்தை வைத்தே அவரை மாற்றிப்போடலாம் என்று முயன்றேன். படகுச் சவாரிமட்டும் உலகம் அல்ல, எத்தனையோ சுவாரசியமான சங்கதிகள் உலகில் இருக்கின்றன. அதில்பாதி பெண்ணில் இருக்கிறது. மறுபாதி ஆணில் இருக்கிறது என்றெல்லாம் புரிய வைக்க முயன்றேன்.

பாதியிலேயே அவர் கவனம் திசை மாறியிருக்க வேண்டும். "சந்தோசம்தானே டியர்?" என்றேன். "ம்.ம்.. இன்று புது டிசைன் ஒன்று போட்டிருக்கிறேன். இந்தப் படகு மட்டும் தயாராகி ,விட்டால் நல்ல விலைக்கு கொடுக்கலாம். வேகமாக அலையைக் கிழித்துச் செல்லும், டிசைனைப் பார்க்கிறாயா?"

எரிச்சலை மறைத்துக்கொண்டு "காலையில் பார்க்கலாம். குட்நைட்." கலைந்துகிடந்த ஆடைகளைக்கூட சேகரிக்காமல், போர்வையால் இழுத்து மூடிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டேன். தூக்கம் வரவில்லை.

படகுகள் மேல் கொண்ட காதலால்தான் வேறு கவனம் இல்லாமல் இருக்கிறார் என்று நான் நினைத்தது தப்பு.

தாழ்வு மனப்பான்மை. அதுதான் அவருக்குள்ள மிகப் பெரிய பலவீனம். தன்னால் என்னை திருப்த்தி செய்ய முடியாது என்று நினைத்தார். 10 வருட வயதுத்தூரம் அவரைப் பயம்கொள்ளச் செய்திருக்கலாம்.

அவரது தாழ்வு மனப்பான்மை அவருக்குள் சந்தேக மிருகத்தை உசுப்பிவிட்டது.

அன்றிலிருந்து ஆரம்பமானது நரகம். அந்த மிருகம் என்னை வதைத்த கதையைச் சொன்னால்தான், அதனைக் கொல்ல நான் ஏன் நினைத்தேன் என்பது புரியும்.

நான் ஹென்றியை சந்தித்தது. அவனை என் திட்டத்துக்கு உபயோகப்படுத்த என் அழகை உபயோகித்தது அனைத்தையும் உங்களிடம் வெட்கத்தை விட்டுச் சொல்லப் போகிறேன். (தொடர்ந்து வரும்)

# முள்ளாகும் ரோஜாக்கள்

## இரத்தம் குடித்த குழந்தைகள்

பள்ளிக்கு சென்ற உங்கள் மகன் வீடு திரும்ப நேரமானால் எப்படித் துடித்துப் போகிறீர்கள்? உங்கள் மகனின் அல்லது மகளின் பாதுகாப்பை எண்ணி உருகும் பெற்றோரே! உங்களுக்குத் தெரியுமா? இந்தக் கணத்தில் உலகின் சுமார் 20 இடங்களில் உங்கள் பிள்ளைகளைப் போல பதினைந்து வயதுக்கும் குறைந்த 2 இலட்சம் குழந்தைப் போராளிகள் துப்பாக்கி ஏந்திப் போரிடுகின்றனர்.

மனித நாகரீகத்திற்கு நவீன யுத்தம் இழைந்துள்ள மற்றொரு கொடுமையே குழந்தைப் போராளிகள்.

குழந்தைப் பருவத்தின் ஆனந்த நாட்கள் இவர்களுக்குத் தெரியாது. இனிய பள்ளி நினைவுகள் கிடையாது. பட்டம், பம்பரம் இவர்களுக்குத் தெரியாது. எழுதுகோலும் புத்தகமும் இவர்களது அகராதியில் இல்லாதவை.

பத்து வயதில் இரத்தம், சாவு இரண்டையும் தினசரி சந்தித்து இவர்களது மனம் காய்ந்து இறுகிக் கிடக்கிறது.

துப்பாக்கிகளுடன்தான் இவர்களுக்கு நிரந்தர தோழமை. விமானம் இவர்களுக்கு வியப்பைத் தருவதில்லை. மாறாக உடனடி எச்சரிக்கை உணர்வை தருகிறது. சாலைகளில் விளையாடித் திரிய வேண்டியவர்கள் கண்ணிவெடிகளைப் புதைத்துக் கொண்டிருக்கின்றனர். இதுதான் இவர்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை.

உள்நாட்டு யுத்தங்களால் அநாதைகளான சிறுவர், சிறுமிகள்தான் இன்று குழந்தைப் போராளிகளாக உள்ளனர்.

தங்கள் தந்தை இராணுவத்தால் கொல்லப்பட்டதையும், தாயும், சகோதரியும் பலாத்காரம் செய்யப்பட்டதையும் கண்ணால் கண்டவர்கள். இத்தகைய கொடுமைகளால் இவர்களது மனது கல்லாகிவிடுகிறது.

பல குழந்தைகள் இரத்த ருசிகண்ட வன்முறையாளர்களாகி கடும் மனநோய்க்கும் ஆளாகின்றனர்.

உதாரணம்; லைபீரியா நாட்டைச் சேர்ந்த கப்டன் புல். கப்டன் என்றதும் விரிந்த மார்பும், அடர்ந்த மீசையும், உருக்குப் போன்ற உடலும் கொண்ட ஒருவராக நினைத்துவிடாதீர்கள்.

கப்டன் புல் எனப்படும் சாமுவேல் புல் 12 வயதுச் சிறுவன். எட்டுவயதில் லைபீரியா தேசபக்த முன்னணி என்னும் இயக்கத்தில் சேர்ந்தான். ஏ.கே. 47 துப்பாக்கியைக் கையாள்வதில் பயங்கரத் திறமைசாலி.

இவனது திறமையைப் பாராட்டி சக போராளிகள் கப்டன் என்று அழைத்தார்கள்.

உச்சி குளிர்ந்த புல் பலரைச் சுட்டுத் தள்ளினான்.

ஐக்கிய நாடுகள் அமைதிப்படையால் பிடிக்கப்பட்ட புல் குழந்தைகள் நலன் அமைப்பொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளான்.

தான் எதிரிகளைச் சுட்டுக் கொன்றதை ஒரு சாதனையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். "இன்று மூன்று விக்கெட் எடுத்தேன்" என்ற பாணியில் "மூன்று பேரை சுட்டுத் தள்ளினேன்" என்கிறான்.

இப்போதும் தான் ஒரு தலைவன் என்ற பிரமையில் மற்றக் குழந்தைகளை மிரட்டுவதும், கட்டளைபோடுவதுமாக இருக்கிறான்.



கப்டன்புல் 'சுடுவது சுகமே'

பர்மாவில் உள்ள போராளி இயக்கம் ஒன்றில் முன்னணிப் போராளியாக உள்ள யேஹரூட் என்பவனுக்கும் 12 வயது. எம்.16 துப்பாக்கியை இயக்கி எதிரிகளை வீழ்த்துவதில் கில்லாடி.

1992இல் முடிவடைந்த மொசாம்பிக் உள்நாட்டுப் போரில் ஆயிரக்கணக்கான குழந்தைப் போராளிகள் மடிந்தனர். அங்கு நடந்த சம்பவம் நெஞ்சை அதிர வைக்கிறது.

அந்தக் குழந்தைகளை இயக்கத்தில் சேர்த்தபோது மனித இரத்தம் குடிக்கக் கொடுக்கப்பட்டது. அவர்களது பெற்றோர்கள் பலரை அந்தக் குழந்தைகள் மூலமே துரோகிகள் என்று கொல்லவைத்தார்கள். குழந்தைக் குணத்தைப் போக்கும் பயிற்சி என்று விளக்கம் சொல்லப்பட்டது.

உள்நாட்டு யுத்தங்கள் குழந்தைகளை இரத்தத்தில் குளிப்பாட்டிக்கொண்டிருக்கின்றன.

இன, மத, மொழிரீதியில் ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடும் அரசுகளே குழந்தைப் போராளிகள் உருவாகவும் காரணமாகின்றன.

# ஹலோ டாக்டர்



**"வணக்கம் டாக்டர். நேரடியாகக் கேள்விகள். மூச்சு இழுத்து விடும்போது லேசாகவும், அடிக்கடியும் நெஞ்சுவலி வருகிறது. அதனால் உடலின் ஆரோக்கியம் பாதிக்கப்படுமா,"**

*"ஈ.சி.ஜி மார்பு எக்ஸ்ரே எடுத்து பார்த்து, அதனால் நெஞ்சுவலி ஏற்படுகிறது என்று அறியவேண்டும். அதன் பின்னரே சிகிச்சை என்னவென்று தீர்மானிக்க முடியும்."*

**"இதய நோய் இருப்பவர்கள் சைக்கிள் ஓடலாமா டாக்டர்?"**

*"குறைந்தளவு தூரத்திற்கு ஓடலாம். உடற்பயிற்சியும் மிதமாகச் செய்யலாம். இதயத்திற்கு வலு ஏற்படுத்தும் பச்சைக் காய்கறிளை சாப்பிடுவது நல்லது. கொழுப்பு, எண்ணெய் பதார்த்தங்ளை தவிர்ப்பது முக்கியம். தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடலாம். அளவோடு வைத்துக்கொள்வது நல்லது."*

**"நரம்புத் தளர்ச்சி வருவது ஏன் டாக்டர்?"**

*"பலவீனமான உடல்வாகு, பயந்த சுபாவம் போன்றவையும் ஒரு காரணம். சிறுவயதில் போலியோ, மூளைக்காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்தாலும், அல்லது கடுமையாக உழைப்பவர்களுக்கும் நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது."*

*"ஒரு செயலை முடிக்க முற்படும்போது ஏற்படும் பதட்டம் காரணமாக இதயத்துடிப்பு அதிகமாக ஏற்படும் போதும் நரம்புத் தளர்ச்சி வருகிறது."*

*"பயத்தைத் தவிர்த்தல், உடல் ஆரோக்கியம் காத்தல் , பதட்டம் தவிர்த்தல் மூலமாக நரம்புத் தளர்ச்சி வருவதை தடுக்கலாம்."*

**"நரம்புத் தளர்ச்சியால் ஞாபக சக்தியும் பாதிக்கப்படுமா டாக்டர்?"**

*"ஆம் வல்லாரை போன்ற காய்கறிகள் ஞாபகசக்திக்கும் உதவும். நரம்புத் தளர்ச்சிக்கும் மருந்தாகும்."*

**"முகத்தில் வெள்ளைத் தழும்புகள் தோன்றுவது ஏன்?"**

*"விற்றமின் ஏ குறை பாட்டாலும், வயிற்றுப் பூச்சிகள் இருப்பதாலும் அப்படி ஏற்படுவதுண்டு. மருத்துவரை நாடிக் குணப்படுத்திக் கொள்ளலாம்."*

**"பார்வையாளர்கள் அதிகம்பேர் இருப்பதால் இன்று இது போதும். நன்றி டாக்டர்."**



# 150 கிலோ

நடிகை பிந்துகோசை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். (மறக்கக்கூடிய உருவமா அது)

சினிமாவில் பிசியாக நடிக்கிற காலத்திலேயே அவர் 140 கிலோ எடையாக இருந்தார். அந்த உடலையும் தூக்கிக் கொண்டு ரசிகர்களை சிரிக்க வைத்தார்.

சமீபகாலமாக பிந்துகோசுக்கு சினிமாவாய்ப்பு இல்லை. வீட்டுக்குள் அடைந்து கிடக்கிறார்.

சும்மா இருந்து மூக்கு முட்டப் பிடித்துக் கொண்டிருப்பதால் அவரது எடை ஏறிவிட்டது. எவ்வளவு என்கிறீர்களா, 150 கிலோவை வெற்றிகரமாகத் தாண்டிக்கொண்டிருக்கிறார்.

உடற்பயிற்சி செய்யவும் முடியவில்லை. சிறிதுதூரம் நடந்தாலே மூச்சு முட்டுகிறதாம். பிந்துவை நினைத்தால் ரொம்பப் பாவமாக இருக்கிறதல்லவா.


அனுதாபப்படுவதோடு நிறுத்தாமல் உங்களுக்கும் அதிக எடை போடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.



# ராசியான ஆச்சி

கின்னஸ் புத்தகம் உறுதிசெய்துள்ள தகவலின்படி இன்று உலகில் அதிக வயதான பெண்மணியின் பெயர் ஜீனி கால்மென்ற். அவரது வயது 120. ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். 116வது பிறந்தநாளைக் கொண்டாடும்போது ஒரு துக்ககரமான சம்பவம் நடந்தது. திடீரென்று ஏற்பட்ட தீவிபத்தொன்றில் வீட்டிலிருந்த 2 பேர் கருகிப்போனார்கள். ஆச்சி மயிரிழையில் தப்பிக்கொண்டார். (ஆச்சிக்கு காலனால் வீசப்பட்ட மரணக் கயிறுதான் குறிதப்பியதோ தெரியவில்லை.)

116 வயதில் ஏற்பட்ட கண்டத்தில் இருந்து தப்பிக்கொண்டதால் ஆச்சி படு உற்சாகமாக இருக்கிறார். ஆரோக்கியமாகவும் இருக்கிறார்.



# எப்போது நறுக்குவார்?

முரசு வாசகர்களுக்கு இவர் முன்னரே அறிமுகமானவர்தான். இவரது நீளமான நகங்களை வாங்கிச் செல்ல பெரும் செல்வந்தர்கள் போட்டி போடுவதாக முன்பு குறிப்பிட்டிருந்தோம். இப்போதும் போட்டியிருக்கிறது. கிராக்கியிருக்கிறது. ஆனால் ஸ்ரீதர் லாலுக்கு (அதுதான் பெயர்) நறுக்க மனம் வரவில்லை.

இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீதர் லாலுக்கு இப்போது 59 வயது. இவர் கடைசியாக நகம் வெட்டியது 1952ம் ஆண்டு.

1995 பெப்ரவரி 25ம் திகதி கின்னஸ் புத்தகத்திற்காக இவரது நகம் அளக்கப்பட்டது. மொத்தமாக 574 சென்றி மிட்டர் இருந்தது.

பெருவிரலில் 132 செ.மீ, சுட்டுவிரலில் 102 செ.மீ, நடுவிரலில் 109 செ.மீ, மூன்றாவது விரலில் 117, செ.மீ, சுண்டு விரல் 114 செ.மீட்டர். எல்லாமாக 574 செ.மீட்டர்.

சைக்கிள் சவாரி செல்லும்போது நகங்களை பாதுகாக்க கையை ஒரு பையில் திணித்து செல்கிறார். நம்நாட்டில் என்றால் கஷ்டம். ஏ.கே.47 கொண்டு வருகிறார் என்று மடக்கிப் பிடித்துவிடுவார்கள்.




தகவல் பெட்டி

மேலைநாடுகளில் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் கெட்டு வருகிறது. அறியக்கூடாத சமாச்சாரங்களையெல்லாம் அறிந்து வருகிறார்கள் என்று கவலைப் படுகிறவர்களுக்கு இதோ ஒரு ஆறுதலான தகவல்.

ஃபிரான்சில் உள்ள லிய்சீ சென்ற் ஜோசப் என்னும் பாடசாலை மாணவர்கள் பலர் ஒன்று சேர்ந்து, தூக்கமில்லாமல் உழைத்து ஒரு அதிசயக்காரை உருவாக்கியுள்ளார்கள். ஒரு கலன் பெற்றோலில் 7591 மைல்கள் சவாரி போகலாம். ஆனால் ஒரேஒரு நபர்தான் பயணம் செய்யமுடியும். சின்னக்கார். சிக்கனக்கார்.

# சின்னக் கார்-சிக்கனக்கார்






# மடியில் ஒரு பை

குட்டியை கண்ணின் மணிபோல தன்மடியில் வளர்க்கும் இனம் கங்காரு. கங்காரு தாயின் மடியில் இயற்கையாகவே பைபோல் ஒரு மடியிருக்கும். அதில் குட்டி பத்திரமாக இருக்கும். படத்தில் இருப்பது மடிப் பையுக்குள் இருக்கும் கங்காருக் குட்டிதான்.

# யுத்தம் இல்லாது போனாலும்



பெருந்தொகையான இடம்பெயர்வுகள் நமக்கெல்லாம் புதிய அனுபவங்கள்தான். படத்தில் பாருங்கள், உடமைகளோடு இடம்பெயரும் லட்சோப லட்சம் மக்கள் பங்களாதேஷத்தவர்கள். வெள்ளப் பெருக்குத்தான் அவர்களை இப்படி விரட்டிக்கொண்டிருக்கிறது. பங்களாதேஷ் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளது. எப்படித் தெரியுமா? உலகில் சன நெருக்கம் அதிகமுள்ள பகுதிகள் இருப்பதும் அங்குதான். அதேபோல அடிக்கடி புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு அதிகளவான மக்கள் பலியானதும் பங்களாதேஷில்தான். இதுவரை பலியானோர் எண்ணிக்கை 10 இலட்சத்துக்கும் மேல்!, இங்கு யுத்தம்! அங்கு இயற்கையின் சீற்றம்!

# பந்தயக் களத்தில் பட நிலவரம் சூப்பர் ஹிட்டாகாத படங்கள்

தைப்பொங்கலுக்கு வெளியான தமிழ் படங்களின் எண்ணிக்கை பத்து.

படங்கள் வெளியாகி ஒரு மாதமாகிவிட்டன. பத்துப் படங்களிலும்

பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட படங்கள் மூன்று.

1. தாயகம். 2. லவ் பேர்ட்ஸ் 3. பரம்பரை.

லவ்பேர்ட்ஸ் எதிர்பார்த்தளவு வசூல் அறுவடை செய்யவில்லை. சுமார் ரகம் என்ற ரசிகர்கள் தீர்ப்புச் சொல்கிறார்கள்.

'தாயகம்' முதல் வாரவசூல் திருப்தியில்லை. பின்னர் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

'பரம்பரை' சூப்பர் ஹிட் என்று சொல்ல முடியாவிட்டாலும் நஷ்டம் ஏற்படுத்தாது.

அஜித்குமார்-சுவாதி நடித்த 'வான்மதி', நாசர்-ஊர்வசி நடித்த 'அருவா வேலு' இரண்டும் முதலீட்டுக்கு பாதகம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இராம-நாராயணன் இயக்கத்தில் சரவணன் நடித்துள்ள படம் 'திரும்பிப்பார்.' ரஜினி ரசிகர்களுக்கு பிடித்தமான படம் என்று ரஜினியின் படத்தோடு விளம்பரம் செய்திருக்கிறார்கள். ரஜினியின் கதையாக இருக்குமோ என்று ரசிகர்கள் திரள்கிறார்கள். வசூலுக்கு பாதகமில்லை.

கார்த்திக் நடித்து இரண்டு படங்கள் திரைக்கு வந்தன. 'கிழக்கு முகம்' 'உள்ளத்தை அள்ளித்தா'. 'கிழக்கு முகம்' சுருங்கிவிட்டது. 'உள்ளத்தை அள்ளித்தா' வசூல் பாதகமில்லை.

பொங்கல் படங்களில் எதுவுமே வசூல் ரீதியில் சூப்பர் ஹிட்டாகவில்லை. அதனால் தமிழ் பட உலகில் பல ஹீரோக்களும், தயாரிப்பாளர்களும் கலங்கிப் போயிருக்கிறார்கள்.

# கமல்-சுகன்யா பாடல்காட்சி

கமல்-மனிஷா கொய்ராலா, சுகன்யா-ஊர்மிளா நடிக்கும் 'இந்தியன்' படம் முடிவடையும் கட்டத்தில் இருக்கிறது.

செஞ்சிக் கோட்டையில் கமல்-சுகன்யா பங்குகொண்ட பாடல் காட்சி ஒன்று பிரமாண்டமாக படமாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான விளக்குகளின் வெளிச்சத்தில் இரண்டாயிரம் துணை நடிக, நடிகையர் பங்கு கொண்டனர்.

இந்தப் பாடல்காட்சி 'பிளாஷ் பேக்'கில் இடம்பெறுகிறது. படம் முழுக்க வயதான தோற்றத்தில் வரும் சுகன்யாவுக்கு இந்தப் பாடல் காட்சி ஒரு வாய்ப்பு. இளமையை வெளிப்படுத்தி விதம் விதமான உடைகளில் தோன்றியிருக்கிறாராம்.

# கார்த்திக் படம் கூட்டாளி

கார்த்திக் புதிதாக நடிக்கும் படம் 'கூட்டாளி'. கார்த்திக் ஜோடியாக நடிப்பவர் ரவாளி. மற்றொரு ஜோடி ஊர்வசி. கப்டன் பிரபாகரன், செம்பருத்தி போன்ற படங்களுக்கு கதை எழுதிய ஜான் அமிர்தராஜ் முதல் முதலாக இயக்குகிறார். இம்மாதம் 20ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. இசை: ஆதித்யன்.



# நன்றியாக ஹீரோ

சினிமா உலகில் நன்றி மறப்பவர்களே அதிகம். விதிவிலக்குகளும் இருப்பதுதான் ஆறுதல். 'முத்து' பட இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் தனது புதிய படமான 'காளையன்' படத்தில் இராமராஜனை கதாநாயகனாகப் போட்டுள்ளார். இராமராஜன் முன்பு ஹீரோ என்று இருந்தபோது அவரிடம் உதவி இயக்குநராக இருந்தவர்தான் கே.எஸ். ரவிக்குமார்.

# குஷ்புவும் ஊர்வசியும்

'கடல் புறா' என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்தவர் பாபுகணேஷ். கதை, வசனம், இயக்கம், இசை என்று பல பொறுப்புக்களையும் அவரே செய்திருந்தார்.

தற்போது புதிய படம் ஒன்றை இயக்கி நடிக்கப் போகிறார். அவருக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கிறார். மற்றொரு ஜோடியாக ஊர்வசி நடிக்கிறார்.

படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'பாரதி.' இம்மாதம் 10ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது.

# சத்யராஜ் நடிக்கும் வள்ளல்

சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தயாரிக்கும் புதிய படம் 'வள்ளல்'.

சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கிறார். மூன்று கதாநாயகிகள் நடிக்க இருக்கின்றனர். தேர்வு நடைபெற்று வருகிறது.

கிராமத்துக் கதை. சத்யராஜுக்கு கதை பிடித்துவிட்டதால் தொடர்ச்சியாக 60 நாட்கள் நடித்துக் கொடுக்க சம்மதித்தாராம்.

இயக்கம், ராஜ்கபூர். 'சின்ன ஜமீன்' 'உத்தமராசா' போன்ற படங்களை இயக்கியவர்.

# கவிதாஶ்ரீ பதவி உயர்வு

'காதலன்' படத்தில் போலிஸ் உடையில் வந்து வெறுப்பேற்றும் வேடத்தில் நடித்த கவிதாஶ்ரீயை ரசிகர்கள் மறந்திருக்க முடியாது. (நம்நாட்டில் காதலன் ஓடிக்கொண்டிருக்கிறது) கவர்ச்சி ஶ்ரீயான கவிதாஶ்ரீக்கு மற்றுமொரு போலிஸ் வேடம். 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' படத்தில் போலிஸ் இன்ஸ்பெக்டராக நடிக்கிறார். காதலனில் கான்ஸ்டபிள். இதில் இன்ஸ்பெக்டர். ஆக, பதவியுயர்வு!

# 96 இல் யோகம்

கடந்த ஆண்டு ரமேஷ் அரவிந்த்பாடு கொண்டாட்டம்தான். சதிலீலாவதி சூப்பர் ஹிட். தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு அங்கும் சூப்பர் ஹிட். கன்னடத்தில் ரமேஷ் அரவிந்த் நடித்த 'அனுராக சங்கமா' என்னும் படமும் வெள்ளிவிழாக் கொண்டாடியுள்ளது. இந்த ஆண்டு கமலுடன் நடிக்கும் 'கல்யேடன் சீதையை' பாலு மகேந்திராவின் 'ஒரு கோடை விடுமுறை' ஆகிய படங்களை நம்பியிருக்கிறார்.



# தமிழ் சின...
## 800 நாட...

# 'பல்...

# மலையாளத்தில் சரத்

ரஜினிகாந்த் அரசியலுக்கு வராவிட்டால் நான் தனிக்கட்சி தொடங்குவேன் என்று அறிக்கைவிட்டுள்ளார் சரத்குமார்.

ஜெயலலிதாவோடு எனக்கு தனிப்பட்ட நெருக்கம் இருந்ததாக சொல்லப்படுவது தவறு. முதல்வர் என்ற முறையில்தான் அவரை சந்தித்தேன். அதை உறவு என்று அர்த்தப்படுத்தியது அவர்களின் தவறு என்று சொல்கிறார் சரத்குமார்.

சரத்குமார் அரசியலில் குதித்தாலும் சினிமா உலகிலும் தீவிரமாக இருக்கிறார். முதல் முறையாக மலையாளத்தில் ஒரு படம் பண்ணப்போகிறார். மீனாவும், ரோஜாவும் கதாநாயகியாக நடிக்கின்றனர்.

தமிழில் நக்மாவோடு நடித்துக்கொண்டிருக்கும் 'அரவிந்தன்' படம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்கிறார் சரத். நக்மாவோடு சரத் நடிக்கும் காதல் காட்சிகள் விழிப்புணர்ச்சியை மட்டும்தான் ஏற்படுத்துமா என்று பார்த்துச் சொல்லுங்கள்.

# பிரபுதேவா கில்லாடி

ஆரம்பத்தில் தன்னோடு நடிக்கும் நடிகைகள் விடயத்தில் ஒதுங்கியே இருந்தார் பிரபுதேவா. தற்போது குளிர்விட்டுப் போய்விட்டது.

மிஸ்டர் ரோமியோவில் பிரபுதேவாவோடு நடிக்கும் ஷில்பா ஷெட்டி சொல்வதைக் கேளுங்கள்.

"அவரைப் பார்த்தா குழந்தை மாதிரி இருக்கிறார். ஆனா அந்தமாதிரியான நோக்குகளை அள்ளிவிடுகிறார். பெரிய கில்லாடியா இருப்பார் போலத்தெரிகிறது." என்கிறார்.

புகைபிடிப்பது உடலுக்கு பகை என்றெல்லாம் பிரசாரம் செய்பவர்கள் ஷில்பாமீது தாராளமாக கண்டனம் தொடுக்கலாம். புகைபிடிக்கும் பழக்கமுள்ள ஷில்பா ஷெட்டி என்ன சொல்கிறார் தெரியுமா? "அதில் என்ன தப்பு? டென்ஷனில் இருந்து மீள புகைபிடிக்கிறேன்" என்கிறார்.

ஷில்பா ஷெட்டிக்கு தமிழ்பட உலகம் பிடித்துப்போய்விட்டதாம். தொடர்ந்து வாய்ப்புக்கிடைத்தால் அங்கேயே தொங்கி... மன்னிக்கவும் தங்கிவிடுவாராம்.

# வாயை அடைத்தார் வினிதா

வினிதாவின் தாய்க்குலம், தந்தைக்குலம், உடன் பிறப்பான சகோதரர் எல்லோரும் தாமும் நடித்துக் கலக்கப்போவதாக வாயடித்துக் கொண்டிருந்தனர். வினிதாவுக்கு வந்தது பாருங்கள் கெட்ட கோபம்.

உங்களுக்காக நான் சிபாரிசு செய்யமாட்டேன். அப்படி சினிமா உலக ஆசை இருந்தா அப்பா மேக் அப் மேனாகவும், அம்மா முடியலங்காரம் செய்பவராகவும், தம்பி 'டச்-அப்' பையனாகவும் வேலை செய்யலாம், சம்மதமா? என்று சத்தம் போட்டார் வினிதா. சரியானபோடு. யாருமே இப்போது மூச்சுவிடுவதில்லை.

# பிரபுவுக்கு பறக்க ஆசை

பிரபுவுக்க வேட்டண்டாக வந்துள்ள ஆசை என்ன தெரியுமா? விமானம் செலுத்தக் கற்றுக் கொள்கிறாராம். சும்மா ஒரு ஜாலிக்குத்தான் என்கிறார் பிரபு. 'லைட் வெயிட்' விமானம் பிரபுவின் ஹெவி வெயிட்டை எப்படித் தாங்குமோ?

# சிவாஜியின் பக்தி

மலையாளத்தில் 'யாத்ரா மொழி' என்னும் படத்தில் தமிழில் மின்சாரக் கனவுகள் படத்திலும் சிவாஜி கணேசன் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இப்போதும் அவரது தொழில் பக்தியை கண்டு அனைவரும் வியக்கிறார்கள். காலை நாலுமணிக்கு எழுந்து, ஏழு மணிக்கே படப்பிடிப்புக்கு ஆஜராகிவிடுகிறார்.

ஓய்வு நேரங்களில் குழந்தைகளோடு விளையாடுகிறார். தொலைக்காட்சி பார்க்கிறார். சுறு சுறுப்பாக இருக்கிறார்.

மலையாளத்தில் மம்முட்டி நடித்து வெற்றி பெற்ற படம் 'யாத்ரா'. தற்போது மோகன்லால், சிவாஜி நடிக்க பிரதாப்போத்தன் இயக்கும்படம் யாத்ரா மொழி.

# ஆனந்தம் விற்பனை

மணிரத்னம் இயக்க, மோகன்லால், ஐஸ்வர்யாராய் இணைந்து நடிக்கும் ஆனந்தம் படம் 12 கோடி ரூபாய்க்கு விற்பனையாகிவிட்டது. பூஜைபோட்ட தினத்தன்றே விநியோகஸ்தர்கள் பணத்தைக் கட்டிவிட்டார்கள். உத்தரவாதமுள்ள குதிரையில் பணம்போட கசக்குமா என்ன?



# சினிமா-வயசு 65

## ...கள் ஓடிய படம்

...பலர் தனது உண்மையான வயதை சொல்லாமல் ...தனது வயதை மறைக்கமுடியுமா?
...இன்றோடு 65 வயதாகிறது.
...பேசும் படம் காளிதாஸ். 1931இல் வெளியானது. ...30 முதல் 40 பாடல்கள் வரை இடம்பெறும் ...பாடல்கள்.
...புகழ்பெற்ற நடிகர்களில் முதன்மையானவர் ...வெளியான 'ஹரிதாஸ்' தமிழக தலை நகரான ...கிட்டத்தட்ட 800 நாட்கள் ஓடியது. அடுத்தடுத்து ...தான்.
...படம் தமிழ் படவுலகில் திருப்பம் ஏற்படுத்தியது. ...எழுதியிருந்தார். அதற்கு முன்னர் பிராமண தமிழ் ...இருந்தது. மக்கள் அன்றாடம் பேசும் வழக்கு ...எழுதி மாற்றம் ஏற்படுத்தினார்.
...ராசக்தி அனல் தெறிக்கும் வசனங்களுக்கு மதிப்பு ...கலைஞர் கருணாநிதி. உயிர்கொடுத்து நடித்தது ...
...ஜி.ஆர் படங்கள் நீதிக்கருத்துக்களை உள்ளடக்கிய ...கொண்ட படங்களாக முன்னணியில் இடம் ...
...ரின் வருகை. அரச உத்தியோகத்தை உதறினார், ...ருந்து சினிமா உலகில் புகுந்தார்.
...ராஜா வந்தார். ஸ்டூடியோவில் இருந்து கமராவை ...கொண்டு சென்றார். 70 இன் இறுதியில், கமல், ...டிக்க பாரதிராஜா இயக்கிய 16 வயதினிலே ஒரு ...
...பகுதியில் கமல், ரஜினி ஆதிக்கம் ஏற்படத்தொடங்கியது. ...டல்களை வழங்கி சினிமா இசைத்துறையில் மாற்றம் ...ளையராஜா.
...ரகுமானின் வரவு படங்களில் மீண்டும் இசையில் ...திருக்கிறது.
...ஆதிக்கம் தமிழ் படவுலகை பாதிக்கத் தொடங்கி ...
...ற இயக்குநர்களின் வரவு, ரசிகர்களை தியேட்டரில் ...மாவுக்கு புதிய உத்திகளை அறிமுகப்படுத்தியது. ...கோட்டை, குருதிப்புனல், போன்ற படங்கள் தமிழ் ...நுட்பத் துறையில் புதிய பாதையைத் திறந்துள்ளன.

## ...நடிகை சங்கவி

...க்கு சினிமா உலகில் என்ன பட்டப்பெயர் ...காரணம், குசியானது, பல்லி சுவரில் ...லவா. அது போல சங்கவியும் பசையுள்ள ...கொள்வாராம். அந்த அடிப்படையில்தான் பல ...க் கிடைக்கிறதாம்.

# மினி சினி

* கே.ராஜேஷ்வர் இயக்கிவரும் 'கோவில் பட்டி வீரலட்சுமி' என்ற படத்தில் சொந்தக் குரலில் ஒரு பாடலைப் பாடியுள்ளார் கஸ்தூரி.

* 'பவித்ரா' படத்திற்குப் பின்னர் கே.சுபாஷ் இயக்கும் படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தில் 'ஆசை' அஜித்குமாரும் நடிக்கவிருக்கிறார்.

* பிரசாந்த் நடிக்கும் 'கிருஷ்ணா' படத்தின் இயக்குநரும், நடிகருமான சிட்டி, இப்படத்திற்காக மூன்று பாடல்களை எழுதியிருக்கிறார்.

* சித்ரா லட்சுமணன் இயக்கத்தில் பிரபு நடிக்கும் 'பெரியதம்பி' படத்தின் மூலம் கோகன் என்னும் இளைஞர் கதாசிரியராக அறிமுகமாகிறார்.

* கே.பாக்யராஜ் நடிக்கும் 'ஞானப்பழம்' படத்தில் கதாநாயகியாக நடித்த சுகன்யாவிற்குத் தோழியாக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ரேகா நடித்து வருகிறார்.

* விஜயகாந்தின் 125 வது படமான 'உளவுத்துறை' படத்திற்கு ஷா என்ற புதிய இசையமைப்பாளர் இசையமைக்கிறார்.

* 'புவநாக்கி' என்ற மலையாளப்படத்தில் முதன்முறையாக நடிக்கவுள்ள விஜயசாந்தி, மேலும் இரண்டு புதிய மலையாளப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்க பிரபுதேவா நடிக்கும் 'மின்சாரக் கனவு' படத்தை பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்குவார் என்று தெரிகிறது.

* 'ஆசை' நாயகி சுவலட்சுமியுடன் 'வானமகால்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் விக்னேஷ் அடுத்து 'வாரிசு' என்ற புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* இந்தியில் தயாராகும் 'தேவர் மகன்' படத்தில், சிவாஜி வேடத்தில் முதலில் திலீப்குமார் நடிப்பதாக இருந்தது தற்போது கவிதைத் நடித்து வருகிறார்.

## முரளியின் ஆகாஷ்

முரளி 'ரத்னா' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். கடந்த ஆண்டு முரளிக்கு திருப்பம் தரும் திரைப்படங்கள் எதுவும் இல்லை. ஆனால் சொந்தவாழ்க்கையில் ஒரு சந்தோஷம் கிடைத்திருக்கிறது. முரளிக்கு ஏற்கெனவே காவ்யா என்ற மகளும், விஜய் என்ற மகனும் இருக்கிறார்கள். கடந்த ஆண்டும் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. ஆகாஷ் என்று பெயர் சூட்டியிருக்கிறாராம்.

## காதோடு சொல்லுகிறோம்

மூன்று எழுத்து சூப்பர் ஹீரோ தயாரிக்கும் படத்தில் தனக்கு சான்ஸ் இல்லாமல் போகாது என்கிறார் ஒரு நடிகை. புனலில் முத்துமிட்டு வெறுத்துக்கட்டிய 'கெ' நடிகைதான் அவர். முத்ததில் பிறந்த நம்பிக்கையோ?!

'பம்பாய்' நாயகியான மணியான நடிகை ஒருவரை காதலிக்கிறார், அவரும் ஒரு நடிகர்தான். நடிகையைவிட 20 வயது முத்தவர். காதலுக்கு வயதில்லை.

'மீன்' நடிகையின் பந்தா அளவுக்கு அதிகமாகிவிட்டதாம். வெறுத்துப்போன தயாரிப்பாளர்கள் திரும்பிப் பார்ப்பதில்லையாம். மார்க்கெட் டல்லானதை நினைத்து வருந்தும் நடிகை பந்தாவுக்கு டாடா காட்டத் தொடங்கிவிட்டாராம்.


சூப்பர் ஸ்டாருடன் அடுத்த படத்தில் நடிக்க முன்னணி நடிகைகள் பலர் போட்டா போட்டியில் இறங்கியிருக்கிறார்கள். தயாரிப்பாளர், இயக்குநர் யார் என்று தெரிந்தால் தனியாகக் கவனிக்கவும் தயாராக இருக்கிறார்களாம். அடுத்த பட இயக்குநர் என்ற கருதப்படுபவருக்கு பலர் 'விருந்துபசார' அழைப்பு விடுத்துள்ளார்களாம்.

## மன்சூரின் கோரிக்கை

நடிகர் மன்சூரலிகான் ரொம்ப வித்தியாச டைப். சமீபத்தில் பத்திரிகையாளர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். "என்னைப் பற்றி தப்பா எழுதிவிட்டு இருங்க," என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். பரபரப்பாக பேசப்படுவதற்காகவே ரஜினியை தாக்கிப் பேசிக்கொண்டிருக்கிறாரோ?

## மனைவியின் பொழுதுபோக்கு

அரவிந்தசாமிக்கு நிறைய பெண் ரசிகைகள் இருப்பதாக அவரே அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார். இளம் பெண்களிடம் இருந்து தொலைபேசிகள், கடிதங்கள் வருகிறபோது அரவிந்தசாமியின் மனைவி டென்ஷன் ஆகமாட்டார். தொலைபேசியில் பேசும் பெண்களுடன் ஜாலியாகப் பேசுவதுதான் அரவிந்தசாமியின் மனைவியின் பொழுது போக்காம். ரசிகைகள் உருகி எழுதும் கடிதங்களையும் ரசித்துப் படிப்பாராம். பொறாமையில்லாத மனைவி!



முரளி-ரங்கீலா
படம்-ரத்னா



அர்ஜுன்-மீனா
படம்-செங்கோட்டை

## கலாட்டாப் படம்

பிரசாந்த், அஜித்குமார், பூஜாபட், ரிக்கி, தேவயானி (மூவரும் இந்தி நடிகைகள்) ஆகியோர் நடித்துள்ள கல்லூரிவாசல் இம்மாதம் வெளியாகிறது. பொங்கலுக்கு வெளியிடுவதாக விளம்பரம் செய்திருந்தனர். போட்டி அதிகம். திரையரங்குகள் கிடைக்கவில்லை. எனவே வெளியீடு தள்ளிப் போய்விட்டது.

கவர்ச்சியை நம்புவோர் கைவிடப்படார் என்று இயக்குநர் பவித்ரன் நம்பத் தொடங்கி விடுவார். அதாவது கல்லூரி வாசல் வெற்றி பெற்றால்! அந்தளவுக்கு படம் முழுக்க கவர்ச்சி அழகிகளின் ஆக்கிரமிப்பாம். கலாட்டாப்படம்.

## "தமிழன் இரத்தத்தில் கலந்த வீரம்"

திரைப்பட விநியோகஸ்தராக ஆரம்பித்து, இன்று ஒரு படத்திற்கு கோடிரூபாய் வாங்கும் நட்சத்திரமாக இருப்பவர் ராஜ்கிரண். சண்டைக்காட்சிகளில் மாமிச மலைபோல 'ரிஸ்க்' எடுத்து மோதி நடிப்பது அவரது ஸ்டைல்.

தமிழனின் இரத்தத்தில் கலந்தது வீரம். அதனை வெளிப்படுத்தும் வீர விளையாட்டாகத்தான் சண்டைக்காட்சிகளை வைக்கிறேன்" என்கிறார் ராஜ்கிரண்.



முகப்பில்
பிரசாந்த் • படம்:- கல்லூரிவாசல்
நாசர் • படம்:-
மாதுரி டிக்சித்

ராஜ்கிரண்
படம்:- மாணிக்கம்

## ரஜினிக்கு தொடர் யோகம் பம்பாய் பத்திரிகையில் ஜோசியம்

ரஜினி அதோ வருகிறார். இதோ வருகிறார் என்று அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்தன.

இப்போது ஜாதகத்தை ஆராயத் தொடங்கி விட்டார்கள். பம்பாயிலிருந்து வெளிவரும் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஜோசியர் ஒருவர் சொல்லியுள்ள கணிப்பைக் கேளுங்கள்.

"அவருடைய ஜாதகத்தில் எல்லாக் கிரகங்களும் உச்சக் கட்டத்தில் இருக்கின்றன.

படவுலகில் அவருக்கு பணமழை பொழிந்து கொண்டேயிருக்கும். பெரும் புகழும் மேலும் அதிகரிக்கும். அரசியலில் ஈடுபட்டால் ஜெயலலிதாவுக்கு தலை வலியை உண்டாக்குவார், 1996 பெப்ரவரி முதல் 1998 ஏப்ரல்வரை அரசியலில் ஈடுபடுவார். ஆனால் புகழில் தொடர்ந்து இதே நிலையில் இருப்பார் என்பதற்கு உத்தரவாதம் தரமுடியாது. என்கிறார் ஜோசியர். ஜோசியம் பலிக்குமா?

## கவுதமியின் கனவு டமால்

இந்தியில் ஒரு கலக்குக் கலக்கலாம் என்று கனவு கண்டார் கௌதமி.

இந்தியில் ஜாக்கி ஷெரப் ஜோடியாக கௌதமி நடித்த படம் திரிமூர்த்தி. பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட திரிமூர்த்தி படு தோல்வியடைந்துவிட்டது.

ஜாக்கிஷெரப், அனில் கபூர், ஷாருக்கான் ஆகியோர் நடிக்க சுபாஷ்காய் தயாரித்த பிரமாண்டமான படம் திரிமூர்த்தி. கதை சரியில்லை. படம் அவுட்டாகிவிட்டது. பாவம், கௌதமி. அவரது கனவும் உடைந்துவிட்டது.

## பெயர் ஒன்று. படம் இரண்டு

அர்ஜுன் ஹீரோவாக நடிக்க ஆர்.கி.உதயகுமார் இயக்கவுள்ள படம் 'ஆகஸ்ட் 15' படம் பூஜையெல்லாம் போட்டு முடித்துவிட்டார்கள்.

இப்போது ஒரு சிக்கல். 'ஆகஸ்ட் 15' என்ற பெயரில் புதிய படம் ஒன்று தயாராகி படப்பிடிப்பும் நடந்து கொண்டிருக்கிறது. கபாள் சந்திரபோஸ் என்பவர் கதாநாயகனாக நடிக்கிறார்.

"முதன் முதலில் 'ஆகஸ்ட் 15' என்ற பெயரை பிலிம் சேம்பரில் பதிவு செய்தது என் அப்பாதான்" என்கிறார் கபாஸ் சந்திரபோஸ். அப்பா டி.வி.நாராயணசாமிதான் தயாரிப்பாளர்.

ஆகவே வேறுவழியில்லை, அர்ஜுன் நடிக்கவுள்ள படத்தின் பெயரைத்தான் மாற்ற வேண்டும்.

...ர் வசம்-உன் ...வரம்.
...ன்வரும்-தடு ...ரம்.
...ஞர் வைரமுத்து.
...ர்ந்துள்ளது
...ன நகை?
...றிபடியுங்கள்.
...நிந்தனை;
...பார்க்காதீர்கள்.
...ட்டுவிடும்!

# லேடீஸ் ஸ்பெஷல்

## உடை விஷயத்தில் நீங்கள் எப்படி?

ஆடை பாதி, ஆள்பாதி என்பது நூற்றுக்கு நூறு உண்மை. வயதிற்கேற்ற உடை, நிறத்திற்கேற்ற வண்ணங்கள், கோடை காலம், குளிர்காலம் என்ற இருவேறு பருவங்களுக்கேற்ற உடைகள் என்று இவற்றில் சற்று கவனம் செலுத்தினால் சந்தேகமேயில்லை; உடை விஷயத்தில் நீங்கள்தான் நம்பர்.1.

ஒரே விதமான நிறம், டிசைன் கொண்ட ஆடைகள் மனதிற்குச் சலிப்பூட்டும். சீருடைகள் அணிவது என்பது தனி ஒரு அழகையும், மனம் ஒத்த உணர்வையும் வாங்கும். மற்றப்படி வண்ண ஆடைகள் வாங்கும் போது தங்கள் நிறத்திற்கும் பேர்ஸின் பலத்திற்கும் தக்க வகையில் புதிய வண்ணங்கள், டிஸைன்களினால் ஆன சேலையோ, பிற நவநாகரிக வகை ஆடைகளோ அவரவர் வயது, மனப்பான்மைக்கு ஏற்ப வாங்கி அணியும்போது உள்ளத்திலும் அந்தப் பிரகாசம் நிச்சயம் போய் உட்காரும்.

நல்ல நிறமான பெண்களுக்கு அநேகமாக எல்லா நிறங்களும் பொருந்தும். சற்று மாநிறமான பெண்கள் கடும் வண்ணங்களை ஒதுக்கி விடுவதோடு வெள்ளை சார்ந்த நிறங்களையும் தவிர்த்து விட வேண்டும்.



மெல்லிய வண்ணங்களே வெளிறிய நிறமாக இல்லாமல் கொஞ்சம் ஆழ்ந்த ஷேடாகப் பார்த்து வாங்கி உடுத்த வேண்டும்.

மலிவான துணிவகை என்றாலும் அதனைச் சுருக்கமின்றி சுத்தமாக அயர்ன் பண்ணி நேர்த்தியாக உடுத்தும் பாங்கில், விலை உயர்ந்த ஆடையின் தோற்றத்தினை எட்டலாம்.

கோடை காலத்தில் பருத்தி ஆடைகளேயே அணிதல் வேண்டும். பிற செயற்கை இழை ஆடைகளைச் சுட்டெரிக்கும் வெய்யிலில் அணியும்போது அதனால் வீண் எரிச்சல், கோபம் போன்ற இம்சைகளுக்கு அதுவே வழி வகுக்கும் என்பது கண்கூடாகக் காணும் உண்மை.

வண்ணங்களுக்குத் தனித்தனிக் குணங்கள் உண்டு. சிவப்பு, மஞ்சள், ஒரேஞ்ச் போன்ற வர்ணங்கள் வெப்பமான நிறங்கள். இதைச் சார்ந்த வர்ண உடைகளை குளிர் காலங்களுக்கு உடுத்தலாம். நீலம், பச்சை, ஊதா போன்ற நிறங்கள் குளிர்ச்சியானவை. இது போன்ற நிறங்களினால் ஆன ஆடைகளை வெய்யில் காலங்களில் உபயோகிக்கலாம். வெளிர் நீலம், வெளிர் பச்சை போன்ற நிறங்கள் மன அமைதியைத் தரவல்லவை. இல்லங்களில், மருத்துவமனை அறைக்ளில் இது போன்ற வண்ணங்களே தீட்டப்பட்டிருக்கும்.

குண்டான உடல்வாகு உடையவர்கள் கடும் வண்ணங்ளை அணியும் போது சற்று ஒடுங்கித் தெரியும். ஒல்லியானவர்கள் மெல்லிய வண்ண ஆடைகளை அணிந்தால் சற்று விஸ்தாரமாகக் காட்டும்.

# மாதுரி சொல்லும் அழகு இரகசியம்

இன்று இந்திப் படவுலகில் நம்பர் 1 இடத்தில் இருப்பவர் மாதுரி டிக்ஷித்.

"எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று அது ஏதோ உங்களிடம் இருக்கிறது. அது தான் பல கோடி ரசிகர்களை கவர முடிகிறதோ?" என்று மாதுரியிடம் கேட்டால் மர்மமாகப் புன்னகைக்கிறார்.

"எல்லாப் பெண்களுமே அழகானவர்கள் தான். ஆனால், பலருக்கு அழகாக இருக்கத் தெரியவில்லை. ஆண்களுக்கும் அது பொருந்தும்" என்கிறார் மாதுரி டிக்ஷித்.

மாதுரிக்குப் பிடித்தது; எப்போதும் கலகலவென்று சந்தோசமாக இருப்பது.

மாதுரிக்குப் பிடிக்காதது; கவலைகளை மனதில் பூட்டிவைத்து, அதையே நினைத்துப் புழுங்கிக் கொண்டிருப்பது.

"அழகாக இருக்க உடலைவிட உள்ளம் தெளிவாக இருக்க வேண்டும். அதுதான் அழகாயிருப்பது எப்படி என்பதற்கு முதலாவது அடிப்படை" என்கிறார் மாதுரி.

"ஒரு நடிகை என்ற ரீதியில் எனக்கு பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. யாராவது ஒரு நடிகரோடு சிரித்துப் பேசினால் அவரோடு கட்டிலறைவரை கொண்டு சென்று கற்பனை செய்துவிடுகின்றன பத்திரிகைகள்.

ஏன் சஞ்சய்தத் விவகாரத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். நல்ல நண்பராக நினைத்துத்தான் பழகினேன். இருவரையும் இணைத்து எங்கோ கொண்டு சென்று நிறுத்திவிட்டன பத்திரிகைகள்.

நமது சமூக நிலவரம் அப்படி. நடிகைகளுக்கு மட்டும் என்றில்லை, வீட்டை விட்டு வெளியே வந்து கருமங்களில் ஈடுபடும்



பெண்கள் அநேகமானோருக்கு இப்படியான பிரச்சனைகள் இருக்கவே செய்யும்.

அவற்றைக் கண்டு ஓடத் தொடங்கினால் ஒளிய இடம் கிடைக்காது. அய்யோ இப்படி அபாண்டம் சொல்கிறார்களே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் எழுந்து நடக்க முடியாது.

எதையும் சந்திக்கும் துணிச்சலும், பிரச்சனைகளை சமாளிக்கும் திறமையும் கூட அழகுதான். அதன்மூலமாக பெண்ணுக்கு ஒரு ஆளுமை வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட பெண்ணை யாராலும் ஏமாற்ற முடியாது. அவள் இஷ்டத்திற்கு மாறாக எதுவும் செய்யவும் முடியாது" என்கிறார் மாதுரி டிக்ஷித்.

# பருமனைக் குறைக்க வழி!

உப்பு, உடற்பருமனைக் குறைக்கப் பயன்படும். இளஞ்சூடான நீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அத்துடன் சிறிதளவு உப்பைச் சேர்த்துத் தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் உடல் எடையைக் குறைக்கலாம்.

குதி காலில் பித்த வெடிப்பு ஏற்பட்டு வலியால் அவதிப்படுபவர்களும், பாதத்தில் ஆணி உள்ளவர்களும் இரவு படுக்கு முன் வெதுவெதுப்பான நீரில் உப்பைப் போட்டுப் பாதங்கள் அதில் முழுகுமாறு சில நிமிஷங்கள் வைத்துக் கொண்டிருந்தால் இதமாக இருக்கும். தொண்டைப் புண்ணுக்கும், வலிக்கும், உப்பை வெந்நீரில் போட்டுக் கொப்பளிக்கலாம்.



உப்பு பல கறைகளைப் போக்குகிறது. தற்செயலாகச் சிந்திவிடும் பேனாவின் மைக்கறையையும், இரத்தக் கறையையும் உப்பில் தோய்ந்த துணியினால் தேய்த்துப் பின்பு சோப்புப் போட்டு துவைத்தால் சுத்தமாகிவிடும். அதிகச் சூடு அடைந்த இஸ்திரிப் பெட்டியால் இஸ்திரி செய்கையில் துணியின் மீது ஒருவிதப் பழுப்பு நிறம் எற்படும். அதன்மீது கொஞ்சம் உப்பைத் தேய்த்து நீக்கலாம். சமைக்கும்போது அதிகமாகக் கரி ஏறிப்போகும் பாத்திரங்களின் மீது உப்பைத் தடவி ஊறவைத்துப் பின்பு தேய்த்தால் விரைவில் கரி நீங்கும்.

பூக்கிண்ணங்களில் வைக்கப் படும் மலர்கள் அதிக நேரம் வாடாமல் இருக்க தண்ணீரில் ஒர சிட்டிகை உப்பைச் சேர்க்கலாம்.

உப்பு கிருமிநாசினி. பச்சைக் காய்கறிகளை நறுக்கிச் சமைக்கும் முன் வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பைத் தூவி அதில் அவற்றை அலம்பினால் கிரிமிகள் கொல்லப்படும். அரிசியில் புழுபூச்சி வராமல் இருக்க, அதில் கொஞ்சம் உப்பைக் கலந்து வைக்கலாம். இப்படிக் கலந்துவைத்த அரிசியைச் சமைப்பது ஜீரண சக்திக்கு நல்லது. அரிக்கேன் விளக்கில் மண்ணெண்ணெயுடன் ஒரு சிட்டிகை உப்பைச் சேர்த்தால் விளக்குப் பிரகாசமாக எரியும்.

# அடக்கிவாசிப்பதும் அழகுதான்

சந்தோஷமோ, துக்கமோ எதையும் மிகையாக வெளிப்படுத்தாமல் கொஞ்சம் அடக்கி வாசித்தால் அது ஓர் அழகுதான். வெடிச்சிரிப்பு, வீண் அலட்டல், பொங்கும் கோபம் என்று தங்கள் குணச்சித்திரத்தைச் சிதைத்துக் கொள்ளாமல் இருக்கப் பழக வேண்டும்.

சாப்பிடும்போது சத்தம் எழுப்புவது சிறுவயது முதலே கண்டிப்பாகக் கண்டித்து விட வேண்டிய ஒரு குறைபாடு. கண்ணாடி ஒரு அதி அற்புதமான படைப்பு. ஒரு மனிதனின் ஆளுமையின் முன்னேற்றத்தில், சுய மேம்பாட்டில் பெரிதும் பங்கு வகிக்கின்றது. வீட்டில் அநேக இடங்களில் உங்கள் முழு உருவமும் தெரியும் வகையில் கண்ணாடிகளை மாட்டி வையுங்கள்.

கண்ணாடி முன் நின்று பேசிப் பாருங்கள். சாப்பிட்டுப்பாருங்கள். உங்களிடம் உள்ள குறை நிறைகள் உடன் புலனாகும். நீங்களே உங்களுக்கு முதல் விமர்சகர் ஆவீர்கள். உங்கள் போக்கில் பலத்த மாறுதல் வெகு எளிதில் கிட்டிவிடும். சாப்பிடும்போது நாக்கை வெளியே நீட்டாமல், அண்ணாந்து கொண்டு வாயில் போடாமல் சற்றுக் குனிந்து சிறியகவளங்களாக நன்கு மென்று சாப்பிட்டுப் பழகுவது விரும்பத்தக்கது.

ஒரு பெண்ணின் பிரசன்னம் ஓர் இடத்தில் ஒரு பூவின் இருப்பைப் போல மென்மையாகவும், வாசனையாகவும் இருக்க வேண்டும். அடுப்படி வாசத்துடனேயே நாளெல்லாம் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. வேலைகளை முடித்தபின் ஒரு முறை நீராடிவிட்டுப் புத்தொளியுடன் விளங்கலாம்.


**தினமுரசு அம்மன் ஜீவல்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலை பரிசுப் போட்டி**

* கடந்த 25 வாரங்களாக நீங்கள் சேகரித்த பரிசுக் கூப்பன்களை தபால் உறையில் போட்டு அனுப்பிவையுங்கள்.
* பின்வரும் கூப்பனையும் பூர்த்தி செய்து அத்தோடு அனுப்புங்கள்.

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

..............................தொ.பே.இல.(இருப்பின்) ..............................

கையொப்பம் ..............................

அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் திகதி: பெப்ரவரி - 31, 1996.

முகவரி: தங்கமாலை பரிசுப் போட்டி த.பெ.இல 1772, கொழும்பு.

பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா


# உலகக் கோப்பை துணுக்ஸ்

### வெள்ளைப் பந்து

உலகக் கோப்பை போட்டியின் சில ஆட்டங்கள் இரவு பகல் ஆட்டங்களாக நடத்தப்படவுள்ளன. வீரர்கள் வண்ண உடைகளில் ஆடுவார்கள். நடுவர்கள் இம்முறை கறுப்பு கோட் அணிந்திருப்பார்கள். வெள்ளைப் பந்து பயன்படுத்தப்படும்.

### அதிகாரப் பரவலாக்கம்

இம்முறை நடுவர்கள் சைகையால் பேசத் தேவையில்லை. வோக்கிடோக்கி சாதனம் மூலமாக பேசிக் கொள்ளலாம். மூன்றாவது நடுவருக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. ரன்-அவுட், ஸ்டம்பிங் போன்றவற்றுக்கு மட்டுமே முடிவு சொல்வதோடு நிறுத்தத் தேவையில்லை. காட்ச் பிடிக்கும்போது எல்லையைக் கடந்துவிட்டாரா என்றும் கவனித்து தீர்ப்புச் சொல்லுவார். அவரிடமும் ஒரு வோக்கி டோக்கி இருக்கும்.

### பங்கில்லை

உலகக் கிண்ணப் போட்டிகளை இம்முறை ஏற்பாடு செய்வதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மூன்றும் கூட்டுப் பொறுப்பாளிகள். ஆனால் லாபமாக கிடைக்கப்போகும் பலகோடிக்கணக்கான டொலர்களில் இலங்கைக்கு ஒன்றுமே கிடைக்காது. இந்தியாவும், பாகிஸ்தானும் பங்கு போட்டுக் கொள்கின்றன.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### மாத்தளை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

தேவி திருநாவுக்கரசு
இல-88 நாகொல்ல வீதி, மாத்தளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் இம்மாதம் 20ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் வந்து காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் (ஞாயிறு தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காலிங்க பிளேஸ், கிருல்லப்பனை, கொழும்பு-06.

# 1975 முதல் 1992 வரை அசத்தலான வெற்றிகளும் மயிரிழையில் பெற்ற வெற்றிகளும்

இதுவரை ஐந்து உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுள்ளன (1975–1992) இந்த ஐந்து போட்டிகளில் நடைபெற்ற ஆட்டங்களில் ஓட்ட மற்றும் விக்கெட் வித்தியாசத்தில் பெறப்பட்ட அசத்தலான வெற்றிகளைப் பார்ப்போம்.

| ஆண்டு | எத்தனைஓட்டங்களால் | எதிர் | வெற்றி பெற்றநாடு |
|---|---|---|---|
| 1975 | 202 | இந்தியா | இங்கிலாந்து |
| 1975 | 196 | கிழக்கு ஆபிரிக்கா | இங்கிலாந்து |
| 1975 | 192 | இலங்கை | பாகிஸ்தான் |
| | விக்கெட்டுக்களால் | | |
| 1975 | 10 | கிழக்கு ஆபிரிக்கா | இந்தியா |
| 1983 | 10 | சிம்பாப்வே | மேற்கிந்தியதீவுகள் |
| 1992 | 10 | பாகிஸ்தான் | மேற்கிந்தியதீவுகள் |

உலகக் கிண்ணப் போட்டிகளில் நடைபெற்ற ஆட்டங்களில் குறைந்த ஒட்டங்கள் மூலமாக, அதாவது மயிரிழையில் பெற்ற வெற்றிகளது பட்டியல்.

| ஆண்டு | ஓட்டங்கள் | எதிர் | வெற்றி பெற்ற நாடு |
|---|---|---|---|
| 1987 | 1 ஓட்டத்தால் | இந்தியா | அவுஸ்திரேலியா |
| 1992 | 1 ஓட்டத்தால் | இந்தியா | அவுஸ்திரேலியா |
| 1987 | 3 ஓட்டங்களால் | நியூசிலாந்து | அவுஸ்திரேலியா |
| 1987 | 3 ஓட்டங்களால் | சிம்பாப்வே | நியூசிலாந்து. |
| | விக்கெட்டுக்களால் | | |
| 1975 | 1 விக்கெட்டால் | பாகிஸ்தான் | மேற்கிந்தியத்தீவுகள் |
| 1987 | 1 விக்கெட்டால் | மேற்கிந்தியத்தீவுகள் | பாகிஸ்தான் |
| 1987 | 2 விக்கெட்டுக்களால் | மேற்கிந்தியத்தீவுகள் | இங்கிலாந்து. |

# இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம்

இலங்கை கிரிக்கெட் அணிக்கு கடந்த வருடம் ராசியான ஆண்டு.

அட... என்று கிரிக்கெட் ரசிகர்களை வியக்கவைக்குமளவுக்கு 95 இல் சிறப்பாக ஆடினார்கள்.

இலங்கை அணி வீரர்களில் பலரும் கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்திற்கு உள்ளானார்கள்.

அவர்களில் ஒருவர் ஹஷன் திலகரட்ண. 28 வயது. சர்வதேசப் போட்டிகளில் 6 வருடமாக களத்தில் இருக்கிறார்.

ஆரம்பத்தில் மித வேக துடுப்பாட்டம் தனது ரன் குவிப்புப் பட்டியலில் முதல் 37 ரன்களை எடுப்பதற்கு 100 பந்துகள் அவருக்கு தேவைப்பட்டன. இப்போது திருப்திகரமாக தேறியிருக்கிறார்.

95 இல் மார்ச் மாதம் இலங்கை அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் போனது. டெஸ்ட் போட்டிகளில் விளாசினார். அந்தச் சுற்றுப் பயணத்தில் ஹஷன் திலகரட்ண மொத்தமாகச் சேகரித்த ரன்கள் 277. 108 ரன் குவித்து செஞ்சரி போட்டதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திலும் ஹஷனுக்கு மற்றொரு செஞ்சரி போடும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சுற்றுப் பயணத்தில் மொத்தமாக அவர் அடித்துச் சேர்த்தது 281 ஓட்டங்கள்.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது பேர்த் நகரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 67 பந்துக்களை சந்தித்து 62 ரன்களை குவித்துக்கொடுத்தார்.

ஹஷன் திலகரட்ண முதலாவது செஞ்சரி போட்டது 1993 இல். மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிராக பம்பாயில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் விளாசிப் பெற்ற செஞ்சரி.



இடதுகை துடுப்பாட்டக்காரரான ஹஷன் திலகரட்ண ஆரம்பத்தில் விக்கெட் கீப்பராக இருந்தார்.

1992 இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் ஹஷன் திலகரட்ண துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை. இலங்கை அணி மொத்தம் எட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டது. இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றது. ஹஷன் ஏழு போட்டிகளில் விளையாடினார். மொத்தமாக அவரால் சேகரிக்க முடிந்தது ஆக, 80 ரன்கள். ஆனால் 6 காட்ச் பிடித்திருந்தார். ஒரு ஸ்டம்பிங் செய்திருந்தார்.

ஆனால், இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் ஹஷன் திலகரட்ண சகலரது கவனத்தையும் ஈர்க்கும் விதமாக உள்ள ஆட்டக்காரர். கணிசமான ரன்களை சேகரிக்கும் ஆட்டக்காரர். அவரை அவுட்டாக்கி அனுப்புவதற்கு எதிரணி பந்து வீச்சாளர்கள் கடுமையாக முயலவேண்டியிருக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை B**

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:24-02-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வா தோழனே!



வா
அகதியாகுவோம்;
இந்த
ஒப்பாரி தேசத்தில்!
*****
அகதிகள் தேசமென்று
பிரகடனப்படுத்தி
கண்ணீரை அருந்தி
மரணித்துப் போவோம்-
வா!
*****
கதிரவன்
களவாடும்
என்று தெரியாமல்தான்
புல்லின்
நுனியை நம்பி
பனித்துளி
சிலகணங்கள் ஜீவிக்கின்றது.
*****
எம் சுவாசம்
திருடப்படும் முன்னே
அகதி முகாம்கள்
எங்கள்
முகவரியாகட்டும்!
*****
சொத்துக்கள்
தேவையில்லை;
இந்த
ரத்த தேசத்தின்
சித்திரவதையினை
அனுபவிப்போம்
வா தோழனே!
*****
மனிதர்கள்
யுத்தக் கதவுகளை
அகலத்திறக்கையில்
அகதிகள்
ஈசலாகக் குவியும்போது,
நாமும்
சேர்ந்தே போவோம்
வா தோழனே!
*****
உடைமைகளை
கைகழுவு!
இனி
வானந்தான் கூரை!
இந்த
யுத்தம் கக்கும்
சோகத்தைவிட
மழையும்
வெயிலும்
பஞ்சணைகளாகட்டும்!
*****
வா
அகதிகளாகுவோம்;
சத்தியம்
தோற்றுப்போன
இந்த
யுத்த தரையில்
இனி
நித்திரை தேவையில்லை;
சுவாத்தியம்,
சுகம்
நம்
எதிரிகளாகட்டும்!
*****
நோய்களின்
கிளைகளிலிருந்து
இலைகளாக
உதிர்வோம்
வா தோழனே!
*****
எம் உறவுகளின்
ஆணிவேர்
அறுந்து கிடக்கின்றது;
எம்
இரவுகளின் முகத்தில்
குருதிக் கறை!
எம்
கல்வியின் முதுகில்
துப்பாக்கி ரவைகள்!
எம்
பூமியின் புன்னகை
கழுகுகளின் வாயில்!
*****
நாம் மட்டும்
உண்டு கொழுத்து
என்ன லாபம்?
*****
மனித இனம்
மயானங்களை
வெறுமையாக்க
ஒரு வழி செய்வோம்;
வா
தோழனே!

கரீமாறாஹில், மாவனல்லை.

## சொந்தம்

என்
பூட்டனின்
வியர்வைத் துளிகள்
உரமாகிப்போன
மண் எதுவோ-அது
எனக்குச் சொந்தம்!
•
என் தாய்
தன்
விரல்களினால்
என் உதட்டில்
சள்ளென்று தெறித்தும்....
நான்
திரும்பத் திரும்ப
அள்ளித் தின்ற
மண் எதுவோ-அது
எனக்குச் சொந்தம்!
•
துள்ளித் திரிந்து
விளையாடி,
துடுக்காய்
கல்லடிபட்டு
கன்னப் பொட்டில்
கசிந்த,
இரத்தம் பட்டுச்
சிவந்துபோன
மண் எதுவோ-அது
எனக்குச் சொந்தம்!
•
என்றோ ஒருநாள்
அழுகி
நாற்றமடித்து
புழுக்கள்
பெருகி,
ஊர்ந்து....
என் உடலை
உக்கவைக்கப்போகும்
மண் எதுவோ-அது
எனக்குச் சொந்தம்!
•

கவியூரன், அக்கரைப்பற்று.

## 2047ல் (ஒரு கற்பனை)

நேரம் பி.ப. 5.30
இலங்கை ஒலிபரப்பு
கூட்டுதாபனம்,
வர்த்தக சேவை,
தொடர்ந்து....
பிறந்த நாள் வாழ்த்து!
000
ஆயுத குடும்பத்தைச்
சேர்ந்த
A.K. 47.....
இன்று தனது
100 வது
பிறந்த நாளை
கொண்டாடுகிறது!
000
இதனை
அப்பாமார்களான
ரஷ்யர்.....
அம்மாமார்களான
ஜெர்மனியர்....
சித்தப்பாமார்களான
சீனர்.....
000
றைபில்
தம்பிமார்....
பிஸ்ரல்
தங்கைமார்....
ஆகியோர்
நீடூழி வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்!
000
மற்றும்
தானியங்கி
மாமாமார்...
தங்கியியங்கி
மாமிமார்....
000
பெரிய தாத்தா
பீரங்கி...
எதிர் வீட்டு
ஏவுகணையார்....
000
அயல் நாடுகளில்
தொழில் புரியும்
தோழர்கள்....
ஆகியோரும்
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்!
000
(பாடல்)
ஆயிர மாண்டுகள்
வாழ்க...
அழிவேயில்லாமல்
வளர்க....!
000
நடைபெற்றது
பிறந்த நாள் வாழ்த்து
நிகழ்ச்சி......!
000

கொக்காகல, எஸ்.பிரபா.

## படித்ததில் ரசித்தது

—ஆத்மா—



கடந்த வருடம் சர்வதேச ரீதியாக ஒரு கலக்குக் கலக்கிய சமாச்சாரம்-பிள்ளையார் பால் குடித்தது. அதனைப் பற்றி கவிஞர் வைரமுத்து சொன்ன கருத்தொன்றை படிக்கக் கிடைத்தது. அது இதுதான்:

"ஞானசம்பந்தன் அழுதான்; பார்வதி வந்து பால் கொடுத்தாள் என்ற கதையிலாவது ஒரு பொருள் இருந்தது.

ஒரு பிள்ளை பாலில்லை என்று பதறி அழுதால் கடவுளின் மனைவி வந்து காப்பாற்று வாள் என்ற போலி நம்பிக்கையாவது அதில் பூத்திருந்தது.

ஆனால், பிள்ளையார் பால் குடித்த கதை நேர் விரோதம்.

தனது பாலை மனிதர்களுக்கு ஊட்டு வதற்குப் பதிலாக மனிதர்களின் பாலை கடவுள் பருகுகிறார் என்று கட்டிவிட்டகதை கடவு ளுக்கே மனிதன் செய்த துரோகம்.

அதைத்தான் பெரியார் திடலில் ஒரு மேடை யில் பேசினேன்.

இந்தியா போன்ற ஏழை நாட்டிற்கு பால் குடிக்கக்கூடிய பிள்ளையார் தேவை இல்லை. பால் கொடுக்கக்கூடிய பிள்ளையார்தான் தேவை.

என்ன செய்வது?

கொசு-மூடநம்பிக்கை! இந்த இரண்டை யும் எந்த மருந்து அடித்தாலும் முற்றிலும் ஒழிக்க முடியவில்லையே!"

## பார்த்ததில் பிடித்தது



என்றும் பார்க்கலாம்

படத்தில் இருப்பவர் யார் தெரிகிறதா? அந்தப் புன்னகை காட்டிக் கொடுத்திருக்கும். ஆம், கே.ஆர். விஜயாவேதான். இது 1963 இல் 'கிளிக்' செய்யப்பட்ட படம்.

இன்றும் பலப் பல ரகமாக நடிகைகள் வருகிறார்கள், போகிறார்கள். காட்ட வேண்டாததெல்லாம் காட்டுகிறார்கள்.

ஆனாலும், இந்தப் படத்தில் உள்ள ஈர்ப்பு அவர்களிடம் இருக்கிறதா? சொல்லுங்கள்?!

## கூந்தல்



முந்தானை வானவிற்கள்
மேய்க்கப் படுவதால்
முந்திக்கொள்ள முடியாமல்
முற்றுகையில்கிடக்கும்
கீற்று மேகங்கள்!
★
நெற்றி-
பிறையாகவே இருப்பதால்...
அமாவாசையை
அமுல்நடத்தும்
'நீக்ரோ' அமராவதிகள்!
★
தலைப்புற்றிலிருந்து
புறப்படுகிறோம்...என்ற
'தலைக்கனத்தில்'
தரைக்கு வராத
கருங்கொடிகள்!
★
பெண்ணை
வரைந்த இறைவன்
எடுக்க மறந்த
தூரிகை.
★
மலர்ச்செண்டுகள் மட்டும்
'மணச்சென்றி' வைத்து
மாறி மாறிக்-
காவல்காக்கும்
'கொங்கோ' காடுகள்!
★
எப்படியாவது...
அவள்-
இடையைத்தொட்டு,
அளக்கத்துடிக்கும்
தூக்கணங்குருவிகள்!
★
என்-
விழிப்பூச்சிகள்
குளிர்காயப்போய்...
குந்திக்கிடக்கும்
கருப்புக்கமலம்
'அவள் கூந்தல்!'

பாணகமுவ-எஸ்-முஸ்தாக், குருநாகல்.

## காதலை எதிர்க்கும் அநாகரிகம்...!

உங்கள்
இதயங்களைப்போல்
ஜன்னலையும்
தெருக் கதவையும்
மூடி வைக்கலாம்!
•••••
எங்கு செல்வதென்றாலும்
ஒரு கைதியைப் போல்
உங்கள்
இருவருக்கும்
இடையில்
அழைத்துச் சென்று
அழைத்து வரலாம்!
•••••
வீட்டிற்குள்ளேயே
'இத்தா' வைக்கலாம்!
இல்லையென்றால்
எங்காவது கொண்டு சென்று
ஒழித்து வைக்கலாம்!
•••••
எங்கள் காதலை
பாலை வனமாக்க
அவளை
பாலை வனத்திற்கு
நாடு கடத்தலாம்!
•••••
இப்படியாக
எங்கள்
இருவருக்குமிடையில்
'பேர்ளின்' எழுப்பலாம்!
•••••
தெரிந்து கொள்ளுங்கள்!
காதலை எதிர்ப்பது
இப்போதெல்லாம்
திருமணவீட்டில்
குரவைபோடுவதுபோல
அநாகரிகமாகிவிட்டது!

மீராவோடை, எஸ்.நளீம்.

## தேன் கிண்ணம்

## நாளை

ஷெல் அரித்து போனபின்
சொல்லிக் கொள்ள
சொந்தமின்றி
சுடுகாடு மிஞ்சி நிற்கும்!
••
இந்து சமுத்திரத்தில்
இரத்த ஆறு சங்கமிக்க
அலைமோதும் கரைதனிலே
பிணங்கள் குவிந்திருக்கும்!
••
வீசும் தென்றலது
சயனைட் நாற்றத்தோடு
இரத்த வாடையும்
கலந்தே வீசும்
••
எல்லோரும் தவித்திருக்க,
என்று தீரும் போர்?
என்ற கேள்வி மட்டும்
தொடர்கதையாய்
தொடர்ந்திருக்கும்!

அகிலா ஜெகதீஸன், வவுனியா.

## சாந்திக்கு... சத்திரம்?

முகங்களைத் தேடு!
மிதித்துப் போட்டு
மிதியடிகளை
துடைக்க வேண்டும்.
சதையைத் தறித்து
சாமிக்குப் போட
வேண்டும்.
இறந்த புறாவின்
தோலால்
துப்பாக்கியைத்
துடைத்து
தயாராக வேண்டும்.
விடிவின் விலாசம்
கொலைக் களத்தில் தான்!
சூரியனின் சுட்டெரிப்பில்
வேட்டின் வெதுவெதுப்பில்
துப்பாக்கித் துளைப்பில்
சோகமாய்ச் சாகலாம்.
சாந்திக்கு அங்காவது
சத்திரம்
இருக்கிறதா...என்று
பார்க்கலாம்.
புறப்படு!
சாவு தாமதமானால்...
என்றாவது ஒரு நாள்
பிறக்கும் மனிதாபிமானம்
பிறக்காமலே போகலாம்!
எரிந்த பிணங்கள்
எம்மைப் பார்த்து
சிரிப்பதைப் பார்!
போலியாகச் சிரி
போதும்.
உள்ளுக்குள் அழு
உடைந்து போ!
இறந்து போனால்
எல்லாம் சரி;
புறப்படு!
புலர்வை எம்
ஆவிகள் பார்க்கட்டும்.

அம்தரவல்ல நிலாவாசன்.

## என்னதும் எனதும்....

என்னதும்
எனதும் போனது.
நான் மட்டும்...?
oo
என் வீட்டு
முற்றம்!
நான் விளையாடிய
என்வீட்டு
ஊஞ்சல்...!
என்னை ஈன்ற
என் உயிர் அன்னை!
என்னை செதுக்கிய
என் உயிர் அப்பா!
oo
எனக்குள்
எப்போதும்
சிரிக்கும் என் அக்கா!
எனக்குள் என்னை
திருடிய என் காதலி!
oo
இப்படியாக
என்னதும் எனதும்
எல்லாம் போனது;
இனி நான்
மட்டும்
தனிமையில்...
தனிமையில்...
மனிதம் போன
தேசத்தை எண்ணி
தவித்தபடி...!

பொகவந்தலாவ, மாரிமஹேந்திரா.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 18.02.96 முதல் 24.02.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | -சூரியன், செவ்வாய், சனி. |
| மீனம் | -வெள்ளி, கேது. |
| கன்னி | -இராகு. |
| தனு | -வியாழன். |
| மகரம் | -புதன். |

★ சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் நட்டம், மனக்கவலை. | பி.ப. 2 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், காரியத்தடை. | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை 7 | மணி |
| **வெள்ளி**- மனக்குறை நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. 3 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பொருள்வரவு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, பொருள் விரயம். | பி.ப. 1 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, கௌரவம். | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 | மணி |
| **புதன்**- பிரயாசை மிகுதி, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| **வியாழன்**-தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், காரியசித்தி. | பகல் 12 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், வீண் செலவு. | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- புதியமுயற்சி, பணச் செலவு. | பகல் 12 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பிரயாணமிகுதி. | மு.ப. 9 | மணி |
| **புதன்**- மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம். | பி.ப. 1 | மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை.. | மு.ப. 9 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 2 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், கடன்படல். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, பிரிவு நிலை. | பி.ப. 1 | மணி |
| **செவ்வாய்**- மனக்கலக்கம், மறைமுக எதிர்ப்பு. | மு.ப. 9 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| **வெள்ளி**- கடன் தொல்லை, மனக்கிலேசம். | பி.ப. 1 | மணி |
| **சனி**- துயர் நீங்கும், காரிய சித்தி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் நிலை கஷ்டம், பணச் செலவு. | காலை 7 | மணி |
| **திங்கள்**- மனக்கிலேசம், பிரயாண மிகுதி. | பகல் 12 | மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | காலை 6 | மணி |
| **புதன்**- வெளியிட பயணம், பணக் கஷ்டம். | பி.ப. 1 | மணி |
| **வியாழன்**-மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு. | பி.ப. 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| **சனி**- காரியசித்தி, பணவரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் பகை, வீண் கலக்கம். | காலை 7 | மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, பணச் செலவு. | பகல் 12 | மணி |
| **செவ்வாய்**- பிரயாணமிகுதி, வீண் அலைச்சல். | மு.ப. 9 | மணி |
| **புதன்**- துயர் அதிகம், இனசன விரோதம். | பி.ப. 2 | மணி |
| **வியாழன்**- நிலைப்பிரிவு, பிள்ளைகளால் தொல்லை. | பி.ப. 3 | மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, சுகபோகம். | காலை 6 | மணி |
| **சனி**- பயண அனுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் நட்டம், காரியக்கேடு. | பி.ப. 2 | மணி |
| **திங்கள்**- வீண் பகை, குடும்ப சுகம் குறைவு. | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- இனசன விரோதம், மனக்கிலேசம். | பகல் 12 | மணி |
| **புதன்** - தொழில் கேடு, மனக் கலக்கம். | மு.ப. 9 | மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 1 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | காலை 7 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் விருத்தி, காரியசித்தி. | பி.ப. 2 | மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பகல் 12 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, கௌரவம். | காலை 7 | மணி |
| **வியாழன்**-துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 | மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 | மணி |
| **சனி**- செய்தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி தடை, பொருள் விரயம். | பகல் 12 | மணி |
| **திங்கள்**- வீண் எண்ணம், காரியத்தடை. | காலை 6 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| **புதன்**- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 7 | மணி |
| **வியாழன்**-வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| **வெள்ளி**-தொழில் மந்தம், அந்நியர் உதவி. | காலை 6 | மணி |
| **சனி**- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 | மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| **செவ்வாய்**- முயற்சி மேன்மை, பண வரவு. | காலை 7 | மணி |
| **புதன்**- காரிய சித்தி, பொருள் விரயம். | பி.ப. 1 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. 9 | மணி |
| **வெள்ளி**- துயர் அதிகம், முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | காலை 7 | மணி |
| **புதன்**- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பகல் 12 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 | மணி |
| **வெள்ளி**- அதிகார விருத்தி, அற்ப இலாபம். | பி.ப. 2 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| **செவ்வாய்**- வீண் குறை கேட்டல், அந்நியர் பகை. | காலை 6 | மணி |
| **புதன்**- மனக்கிலேசம், உயர்ந்த எண்ணம். | பகல் 12 | மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 | மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. 9 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4





## பாட்டுக்கொரு புலவன்

பாட்டுக் கொருவன் பாரதியாம்
பாப்பா முரசின் நாயகனாம்
பாரத நாட்டிற் தோன்றியருட்
பாடல்கள் பாடிய பாவலனாம்!

அச்சம் தவிர்த்திடு என்றானாம்
ஆண்மை தவற மாட்டானாம்
அகத்தின் அழுக்கு அகன்றிடவே
அழகாய்ப் பாடல்கள் புனைந்தவனாம்!

எட்டய புரத்தில் பிறந்தவனாம்
எட்டாப் புகழை அடைந்தவனாம்
எழுமின் எழுமின் என்றுரைத்தே
எழுச்சிப் பாடல்கள் படித்தவனாம்!

பாப்பா உனக்கும் சொன்னானாம்
பாரினில் எவர்க்கும் உரைத்தானாம்
பார் புகழ் தமிழில் பாட்டிசைத்து
பாட்டால் உயர்ந்தவன் பாரதியாம்!

மிருதுபாஷினி-பதுளை.

ஐம்பொறி ஆட்சிகொள்! ஒற்றுமை
-வலிமையாம்!
ஒய்தல் ஒழி! ஔடதம் குறை!
கற்றது ஒழுகு! காலம் அழியேல்!
கிளை பல தாங்கேல்! கீழோர்க்கு
-அஞ்சேல்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## "அராஜக" வர்மன்

ஜெயராஜவர்மன் தனது நாட்டை அராஜகமாக ஆட்சி செய்து வந்தான். சட்டம் என்ற பெயரில் அவன் தனது நாட்டு மக்களைப் படுத்துகின்ற கொடுமை எண்ணிலடங்காது.

அவனது கொடுமைகளிலேயே, மக்களால் தாங்கிக் கொள்ளவே முடியாதது வரி.

நின்றால் வரி, அமர்ந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, குனிந்தால் வரி என்று வரிமேல் வரி விதித்து ஜெயராஜவர்மன் அராஜகவர்மன் என்ற பெயருடன் வாழ்ந்தான்.

இந்த வரி விதிப்பினால் நாட்டு மக்கள் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தார்கள். இதை யாரிடம் சென்று முறையிடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே தலைவிதியே என்று வரிக்கொடுமையால் அவதிப்பட்டு வாழ்ந்தார்கள்.

அளவு கடந்த வரி விதிப்பினால் மக்கள்படும் துயரங்களை அமைச்சர் மதிவாணனும் அறிவார். அவர் துஷ்டனிடம் அமைச்சர் பதவி வகித்தாலும் அவர் மிகவும் நல்லவராக இருந்தார். அவர் மிக நல்ல மனம் படைத்தவர்.

மக்களின் துயர் துடைக்க என்ன செய்யலாம் என்பது பற்றி அவர் நினைக்காத நாளே இல்லை. ஆனால் ஒரு வழியும் அவருக்குப் புலப்படவில்லை.

மன்னன் ஜெயராஜவர்மனின் சட்ட திட்டங்களை எதிர்க்கவோ, சரியில்லை என்று வாதிடவோ,மாற்றியமைக்க வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கவோ யாரும் முயற்சிக்கக் கூடாது. அப்படி முயன்றால் அவர் எத்தனை பெரிய முக்கியஸ்தராக இருந்தாலும் அவருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்.

ஆகவே அமைச்சர் மதிவாணன் எதுவும் செய்ய இயலாமல் வாயை மூடிக் கொண்டிருந்தார்.

அமைச்சர் எதிர்ப்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் அந்த நாள் வந்தது.

அந்த நாளின் மாலை நேரம்-

மன்னன் ஜெயராஜவர்மனும், அமைச்சர் மதிவாணனும் அரண்மனைத் தோட்டத்தில் உலாவியபடி நாட்டின் அரசியல் நிலவரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது-

சில்லென்று குளிர் காற்று வீசியது. 'விறு...விறு...'வென்று வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்தன.



இன்னும் சில நொடிகளில் பலத்த மழை பெய்யலாம் என்பதை உணர்ந்த மன்னன் ஜெயராஜவர்மன், அமைச்சர் மதிவாணனைப் பார்த்து,

"அமைச்சரே! பலத்த மழை வரப் போகிறது. நாம் உடனே அரண்மனைக்குள் செல்லாவிட்டால் முழுக்க நனைந்து போவது உறுதி," என்று கூறினான்.

"மன்னர் மன்னா! தாங்கள் மழையில் நனைந்துவிடுவோமே என்று அஞ்ச வேண்டாம். நிச்சயம் மழை பெய்யாது!" என்றார்.

அதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட மன்னன் ஜெயராஜவர்மன்,

"எப்படிப் பெய்யாது....? பாருங்கள் கரு மேகத்தை!" என்று சொல்லியபடி வானத்தைச் சுட்டிக் காட்டினான்.

அதைப் பார்த்துப் புன்னகைத்த அமைச்சர் மதிவாணன்,

"மன்னர் மன்னா! அந்த மேகத்திற்குத் தெரியாதா? நாம் அராஜக நாட்டிற்குள் நுழைந்தாலோ, அல்லது மழையாகப் பெய்தாலோ மன்னர் கடுமையான வரியை விதித்து விடுவார் என்று!" எனச் சொல்லி நிறுத்தினார்.

அதைக் கேட்ட ஜெயராஜவர்மன் அப்படியே சிலையாக நின்றான். சில வினாடிகள் அசைவற்று, எதுவும் பேசாமல் அப்படியே நின்றான்.

பிறகு நிமிர்ந்து அமைச்சர் மதிவாணனைப் பார்த்து,

"திடிரென்று என் மனதை என்னவோ போல் ஆக்கி விட்டீர். மக்களுக்கு நான் செய்கிற கொடுமைகளை நாசூக்காகவும், அதேசமயம் இதயத்திற்குள் ஈட்டி கொண்டு செருகினாற்போல் வெளிப்படுத்தி விட்டீர். எனக்கும் இப்போதுதான் உண்மையை உணரத் தெரிகிறது, இன்றே மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளை முற்றிலுமாக நீக்கி விடுகிறேன்!" என்றான்.

அடுத்த கணம்-

வானம் பொத்துக் கொண்டது போல் மழை பெய்யத் தொடங்கியது.

## வாரம் ஒரு நாடு

### மலேசியா

தலைநகர்- கோலாலம்பூர்

பரப்பு- 3,30,434 சதுர கிலோமீட்டர்

மக்கள் தொகை- 1.92 கோடி

மொழி- மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ்

எழுத்தறிவு- 80%

சமயம்- இஸ்லாம், புத்தம், இந்து சமயம்.

நாணயம்- ரிங்கிட்

தனிநபர் வருமானம்- 2670 டொலர்.



வரலாறு:

1867 முதல் பிரிட்டனின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. 1963 இல் மலாயா, சிங்கப்பூர், தெற்கு போர்னியோ, ஸராவக் போன்றவை சேர்ந்து மலேசியா உருவானது. 1965 இல் பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் தனிக் குடியரசானது. மலாயா மாநிலங்களின் ஒன்பது அதிபர் களில் இருந்து நாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

பொருளாதாரம்:

உலகிலேயே தாவர எண்ணெய், தகரம், இரப்பர், மிளகு மற்றும் மர உற்பத்தியில் மலேசியா முன்னணி வகிக்கிறது. தேங்காய், காய்கறிகள், அன்னாசிப்பழம், கோப்பி, தேயிலை, கொக்கோ ஆகியன விளைகின்றன. இரும்புத் தாது, தங்கம், இல்மனைட், பொக்சைட் ஆகியன முக்கிய கனிப்பொருட்கள். உணவுப் பொருட்கள், புகையிலை, வெட்டுமரப் பொருட்கள், உலோகப் பொருட்கள், மோட்டார் ஊர்திப் பொருட்கள், இரப்பர்- தோட்ட விளை பொருட்கள் பதப்படுத்தும் தொழில்கள் ஆகியன இந்நாட்டின் பிற தொழில்களாகும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.02.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 129
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 127

பரிசுக்குரியவர்:
சோ. நரேஸ் குமார்
உதயபுரம் த.வி, பெரியகல்லாறு-3.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| என். கிரித்திகா. பிள்ளையார் கோவில், மாத்தளை. | பி. வினோதா. நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். |
| செல்வி. கிறிஸ்பினி மைக்கல். பணந்துறை. | எஸ். எச். றிஸ்னாஸ். களு/ஜீலான் மு.ம.கல்லூரி, பாணந்துரை. |
| செல்வி. திலகேஸ்வரி. க/பல்கும்புரை முஸ்லிம் வித்தியாலயம். | ஏ. ஆர். பாகிமாபானு. சிறாஜ் வித்தியாலயம், தம்பலகாமம். |
| செல்வன். அருண் பிரதாப். சென் ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா. | செல்வி. சி. வினோதினி. சென். ஜோன்ஸ் மகா வித்தியாலயம், மட்டக்குளி. |
| ஏ. எச். ஹாரிஷ். நஸ்றியா மகா வித்தியாலயம், சிலாபம். | ச. யோகேஸ்வரி. ஹய்பொரஸ்ட், கந்தபொல. |

## ஒருவரிச் செய்திகள்


* உலகிலே தேங்காய் அதிகம் விளைவது பிலப்பைன்ஸ் நாட்டில்.
* இரத்த அழுத்தத்தை அளப்பது -ஸ்பிக்மனோ மீற்றர்.
* மனநோய் மருத்துவத்தின் முன்னோடி சிக்மன்ட் ஃபிராய்ட்.
* ரோம் குடியரசு ஏற்பட்டது கி.மு. 509 ல்.
* சுக்கிரன் கிரகத்தில் இரவு பகல் வெப்பம் ஒரே அளவுதான்.
* லேசர் கதிரை உருவாக்கியவர் கோர்டன் கோல்ட் என்பவர்.
* கதிரியக்கப் பொருட்களில் எல்லாம் ஹீலியம் உள்ளது.
* கழுகு சுமார் 50 ஆண்டுகள் உயிர் வாழும்.
* அநாதைகளுக்கு ஓய்வூதியம் அளிக்கும் நாடு சுவீடன்.
* கடல் நீரைப் பருகும் ஒரே ஒரு பறவையினம் பெங்குயின்.
* முதல் கின்னஸ் புத்தகம் வெளிவந்த ஆண்டு 1955.
* விமானத்தை முதன் முதலில் போருக்குப் பயன்படுத்திய நாடு இத்தாலி, 1911ல்.
* வெள்ளை இரத்தம் கொண்ட உயிரினம் வெட்டுக்கிளி.
* இரயிலோ, பஸ்ஸோ இல்லாமல் படகுப் போக்குவரத்து மட்டுமே உடைய நாடு லாவோஸ்.

## வெள்ளி என்பது யாது?

தங்கத்தின் விலை மிக அதிகமாக ஏறியுள்ள இக்காலத்தில் பெரும்பாலானோர் வெள்ளியால் செய்த நகைகளை அணிந்து கொள்கின்றனர். மிகப் பயனுடைய உலோகங்களுள் வெள்ளியும் (Silver) ஒன்றாகும். இது தங்கத்தை விட உறுதியானது. மெல்லிய கம்பியாக நீட்டலாம். தகடாகவும் தட்டலாம். கலைத்திறன் மிக்க பொருள்கள் பெரும்பாலும் வெள்ளியும், செம்பும் சேர்ந்த பொருளில் செய்யப்படுகின்றன. வெப்பத்தையும், மின் சாரத்தையும் எளிதில் கடத்தும் உலோகங்களுள் இது மிகச் சிறந்தாகும்.

இது தூய நிலையில் வெண்மையானது. பளபளப்பானது. துருப்பிடிக்காது. எனினும் காற்றில் கந்தகம் இருப்பின் கறுத்து விடும். மெரு சேர்மங்கள் (வெ.யுரோமைட்டு, வெ.அயோடைட்டு) போட்டோத் தொழிலில் பிலிம் தயாரிக்கப்பயன்படுகின்றன.

## எண்ணெய்ப் பறவை



தென் அமெரிக்காவில் இருண்ட குகைகளில் கூடு கட்டி வாழ்பவை எண்ணெய்ப் பறவைகள். குகைக்குள் நுழையும்போது அவை ஒரு மாதிரி குரல் கொடுத்துக் கொண்டே நுழையும். இதன் எதிரொலி மூலம், இவை தங்கள் கூடுகளின் இருப்பிடத்தை அறியும், இவற்றிற்குப் பார்வைத் திறனும் உண்டு. தென் அமெரிக்க பனை மரங்களின் எண்ணெய்ச் சத்து மிக்க கனிகள்தான் இவற்றின் உணவு.

## அழும் மண் புழு

வடமேற்கு அவுஸ்திரேலியாவில் மிகப் பெரிய மண்புழுக்கள் உள்ளன. அவை 12 அங்குல நீளம் இருக்கும். ஒரு அங்குல விட்டம் இருக்கும். அது ஏதேனும் அந்நியப் பொருளை தொட்டு விட்டால் சுருங்கி, மனித மணிக்கட்டுப் போல் இறுகி விடும். நம் ஊர் மண்புழுக்களைப் போல் இவை அமைதியானவை அல்ல. மண்ணில் செல்லும் போது 'சர்க் சர்க்' என்ற சத்தம் போடும். இது மண்ணிற்குள் இருக்கும்போது யாராவது மண்மீது நடந்தால் அழுவது போல் குரல் கொடுக்கும்.

**கதை ஆரம்பித்ததிலிருந்து முடிவுவரை விறுவிறுப்பு! இறுதிவரை கொலையாளி யார் என்று தெரியாமல் ஒரே சஸ்பென்ஸ்!! ஒரு வாரம் கூட தவறவிடாதீர்கள்.**

அந்தப் பழைய பங்களாவை இடித்துத் தள்ளப்போகிறார்கள்.

நூறு வருஷத்துக்கு முன்பு பிரிட்டிஷ் துரை ஒருவர் ஆசையோடு கட்டிய மாளிகை அது. பெயரே சம்மர் கூல் பாலஸ். லண்டன் இன்ஜினியர் ஒருவர் ப்ளான் போட்டு பிரிட்டிஷ் பாணியிலேயே கட்டப்பட்ட பங்களா.

அகல நீளமான நிறைய படிக்கட்டுகளுக்கு மேலே கணிசமான முகப்புக்குப் பிறகு பங்களா போர்டிகோ ஆரம்பமாகி இருந்தது. உயரம் உயரமான தூண்கள். எங்கேயோபோல மேலே விதானம். ஹைஜாண்டிகான அசல் பர்மா தேக்குக் கதவுகள். கடந்து உள்ளே போனால் விசாலமான ஹால். டான்ஸ் ஹால், சின்னசிமெண்ட் மேஜையில் ஆர்கெஸ்ட்ரா வயலின் இசை வடிய-

பிரிட்டிஷ் சீமான்களும் சீமாட்டிகளும் கட்டிப்பிடித்து உரசியபடி ஆடும் பால் ரூம்டான்ஸ்.

உச்சத்தில் குழிவான விதானத்தில் கண்ணாடி சிற்ப அலங்காங்களில் நிர்வாணப்பெண்கள், இலையால் மட்டும் முக்கிய பாகம் மறைக்கப்பட்ட ஆண்கள். மாடியில் நிறைய அறைகள். ஆளுயரத்துக்கும் அதிகமான கடிகாரம். கொத்துக் கொத்தாகத் தொங்கும் சரவிளக்கு

“ஏலேய் சாத்தப்பா, போய் பார்த்துட்டு வா ஓடு.” என்று மேஸ்திரி சொல்லவே-

அந்த சாத்தப்பாவாகப்பட்டவன் உள் நோக்கி ஓடினான்.

காண்ட்ராக்டர் நீட்டிய சிகரெட் பெட்டியிலிருந்து உருவிய சிகரெட்டை உதட்டில் பொருத்திய இஞ்ஜினியர் நெருப்புக்காகக் குனிந்த போது-

“எப்படியும் ஆடி முடிஞ்சு ஆவணி ஆரம்பத்துக்குள்ளே ப்ளாட்ஸ் ரெடியாயிடணும், முடியுமில்லையா?” என்று கட்டட காண்ட்ராக்டர் கேட்கும் போதுதான்-

மாடி ஜன்னலிலிருந்து கத்தினான் அந்த சாத்தப்பன் உரத்த குரலில்-“சார் மேலே வாங்க சார்.”

“ஏண்டா என்ன ஆச்சு?”

“போலீஸ் கேஸ் சார். ஒரு பொண்ணு செத்துக்கிடக்குது சார்.

காண்ட்ராக்டர் கண்களில் சலிப்புக் காட்டினார். "இன்னைக்கு வேலை நடந்த மாதிரிதான். போலீஸ் எப்ப வந்து என்ன கண்டுபிடிச்சு...? கிரேனை வாடகைக்கு சுற்றிலும் ரத்தம் சிதறியிருக்கும். உலர்ந்து உடம்போடே மட்டுமிருக்கிறது.”

“இதிலே ஒரு பிரச்சினை இன்ஸ்பெக்டர். கட்டடத்தை இடிச்சுத் தள்ள கிரேன் வாடகைக்கு வீணாப் போயிடும்.

அதுவாவது பரவாயில்லே. மறுபடியும் கிரேன் கிடைக்கிறது கஷ்டம். எப்ப கிடைக்குமோ?”

“நோ ப்ராப்ளம். போட்டோ கிராஃபர் வந்ததும் ஒரு சில மணிநேர சடங்குகளுக்கப்புறம் நீங்கள் உங்கவேலை பார்க்கலாம். ஆனாலும் நீங்கள் செய்தது பொறுப்பில்லாத செயல். பிணத்தைச் சுற்றி இத்தனை பேர் நெருங்கி வந்துட்டீங்களே. இப்ப போலீஸ் நாயைக் கொண்டுவந்தாலும் பயனிருக்காது.

“ஸாரி” காண்ட்ராக்டர் சொன்னார். “திடீர்பதற்றம். எதுவும் செய்யத் தோணல. ரியலி வெரி ஸாரி.”

போட்டோகிராபர் வந்தார். சுற்றிச் சுற்றி வந்து ப்ளாஷைக் கண்சிமிட்டு வைத்தார்.

கைரேகை தடயமோ, வேறு எந்தத் தடயமோ கிடைக்காத நிலையில் பிணம் அப்புறப்படுத்தப்பட்டது. ஆஸ்பத்திரி ஆட்கள் தொங்கு படுக்கையில் அவளைக் கிடத்தி மிக அலட்சியமாகப் படியிறங்கிப் போனார்கள்.

போலீசார் முன்னிலையிலேயே பங்களா முழுவதும் சுற்றி வந்து வேறு விபரீதம் எதுவுமில்லை என்பதை உணர்ந்த பிறகுதான் அவசரக் கேள்விக்கு பதில் சொல்லக் கூடிய நிலமைதான்; கேளுங்க.”

“பலாத்காரம்! கற்பழிப்பு?”

“அதெல்லாமில்லை. சின்ன வற்புறுத்தல் முயற்சி கூட தெரியலை. ஆறு குண்டுகள் உடம்பில் பாய்ந்து அதில் ஒரு குண்டு இருதயத்தைத் துளைத்து மரணம் சம்பவித்திருக்கிறது. மற்றபடி ஒரு சின்ன கீறல் கூட கிடையாது.”

“முன் விரோதம் காரணமாக பலி வாங்கப்பட்டதாக இருக்குமா?”

“மே பீ” டாக்டர் கேட்டார் “அடையாளம் தெரிந்ததா?”

“இன்னமும் இல்லை.”

“யாராவது காணவில்லை என்று புகார் தந்திருக்கிறார்களா?”

“வந்த புகார்கள் எல்லாமே இளம் பிள்ளைகளாகத் தானிருக்கிறது. இந்த வயசுப் பெண் காணாமல் போனதாக புகாரில்லை, தலைமையகத்திலேயே கேட்டுப்பார்த்து விட்டேன்.”

“என்ன செய்வதாக உத்தேசம்? பாடியை சொன்னேன்!”

“மார்ச்சுவரிக்கு அனுப்பிடலாம் டாக்டர்! மாலை பேப்பரிலேயே பிணத்தின் படத்தை பிரசுரித்து அடையாளம் கேட்கப் போகிறோம்.”

“பெஸ்ட் ஆஃப் லக்.”

“போட்டோக்களில் முகம் தெளிவாக இல்லை. குண்டு துளைத்த வேதனையில்

ஓடினார்கள்.

கைப்பந்தாட்ட மைதானத்தைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தவர்கள் ரயில்வே லைன் பக்கமாக ஓடும் போது மட்டும் சற்றே குமட்டலாக உணர்ந்தார்கள்.

“என்னடாது என்னமோ கெட்ட வாசனை வரல்லே?”

“நாய் பூனை ஏதாவது ரயிலில் அடிபட்டுச் செத்திருக்கும்.”

ஓடியவர்களில் ஒருவன் மீண்டும் முழுசாக குமட்டி வாந்தி எடுத்ததும் தான் வாடையின் விபரீதத்தை உணர்ந்தார்கள்.

துணிச்சல் அதிகமுள்ள ஒரு மாணவன் மட்டும் கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக் கொண்டு முள்வேலி பக்கமாக போய் நின்று ஆராய்ந்தான்.

காடாக வளர்ந்திருந்த ஊமத்தைச் செடிகளுக்கு அப்பால் ஏதோ நீட்டிக் கொண்டு தெரியவே உற்றுப் பார்த்தான்.

சந்தேகம் வரவே-மற்றவர்களைக் கையசைத்து வரச் சொல்லி சந்தேகம் கேட்டான். “ஏதோ மனிதக் கால்கள் மாதிரியில்லே?”

உற்றுப் பார்த்துச் சொன்னார்கள்-மெலிதான அதிர்ச்சியுடன்-

“ஆமாம்டா.”

“எவனாவது குடிச்சிட்டு வந்து விழுந்து கிடப்பான்” என்ற ஒரு மாணவனின் பேச்சுக்கு எதிர்ப்பு வந்தது.




**புதிய தொடர்**

கண்ணாடி மணிகள் காற்றில் அசையும் போது சுகமான கிணு கிணு ஓசைகள்.

பழைய-மிகப்பழைய ஆனால் உறுதியான சோபா நாற்காலிகள், சுவர் முழுவதுமாக முகம் பார்க்கும் கண்ணாடிகளின் நடுவில் நின்றால் வரிசையாக இரண்டு புறமும் ஏகமாய்த் தெரியும் நீங்கள்.

அனைத்தும் ஏற்கெனவே அப்புறப்படுத்தியாகிவிட்டது. இப்போது பங்களாவை இடித்துத் தள்ளப் போகிறார்கள்.

கொழுத்த பணக்கார பம்பாய்க்காரர் ஒருவர் லட்சம் லட்சமாக கொட்டிக் கொடுத்து வீட்டையும் முக்கியமாக நிலத்தையும் கையகம் செய்த கையோடு பிளாட் கட்ட விற்க அட்வான்ஸும் வாங்கிவிட்டார்.

இன்னமும் சற்று நேரத்தில் இடிந்து தரைமட்டமாகி விடும்.

ஆள் வைத்து இடித்தால் நாளாகுமென்று கிரேன் கொண்டுவந்து நிறுத்தி இருந்தார்கள். கனமான இரும்புத்துண்டை தொங்கவிட்டுக் கொண்டு ஊசலாடிக் கொண்டிருந்தது கிரேன்.

பக்கவாட்டில் பின்வாங்கி ஓங்கி ஓர் இடி இடித்தாலே கட்டடம் கலகலத்துச் சரியப்போகும் அபாயமிருந்தது.

இன்ஜினியர் ஸ்பீக்கரை வைத்து கத்தினார். “பார்த்தாச்சா? உள்ளே யாருமில்லையே?”

“நேத்தே பார்த்தாச்ச சார். யாருமில்லை.”

“அது நேற்றைய சங்கதி, இன்றைக்கு யாராவது விஷயம் தெரியாமல் உட்கார்ந்திருந்தால் வம்பாகிவிடும். எதற்கும் ஒரு தடவை பார்த்துட்டு வந்துடுங்க.”

எடுத்தது வேஸ்ட்.”

“ஏன் சார்?” என்ற இஞ்ஜினியரை-

“போலீஸ் சடங்கெல்லாம் அவ்வளவு சீக்கிரம் முடியற சங்கதியில்லேப்பா.” என்று ஒதுக்கிட்டு மேலேறிப் போனார் காண்ட்ராக்டர்.

“போலீசுக்கு தகவல் சொல்லியனுப்புங்கப்பா.”

“அனுப்பியாச்சு சார்.”

அந்த அறைக்குள்ளே போய்ப் பார்த்தார். கட்டிய புடவையும் அணிந்திருந்த நகைகளும் பெரிய இடத்துப் பெண்ணாகக் காட்டின.

மேலோடு பார்த்த பார்வையில் பலாத்காரம் தெரியவில்லை. ஆடைகள் குலையாமல் கிழியாமல் அணிந்த நிலை மாறாமலிருந்தன.

நல்ல வைர நகைகள் இருந்த நிலையிலிருந்ததினால் பணத்துக்காக நடந்த கொலை மாதிரியும் தெரியவில்லை.

சுட்டுக் கொன்ற விதத்தில்தான் வெறித்தனம் தெரிந்தது. ஆறு குண்டுகள் ஜீவாதாரமான பகுதிகளில் பாய்ந்திருந்தன.

போலீஸ் வந்தது. விசாரணை தொடங்கியது. “அடையாளம் தெரிஞ்சவங்க யாராவது இருக்கீங்களா?”

ஒருவருக்கும் தெரியவில்லை.

“நேற்று ராத்திரி கூட ரூம் விடாம தேடி இருக்கோம் சார்! இந்த இடம் உள்பட இஞ்ச் விடாம தேடினோம். யாரையும் காணல, இப்பதான் இடிக்கிறதுக்கு முன்னால எதற்குமிருக்கட்டும்னு தேடிப்பார்த்தோம். இப்ப இருக்கு. அதாவது ராத்திரிதான் யாரோ கொண்டுவந்து போட்டிருக்கணும்.”

“ஆமாம்.” இன்ஸ்பெக்டரும் சொன்னார். “கொலை இந்த இடத்தில் நடந்திருக்க முடியாது. அப்படியே நடந்திருந்தாலும்

இன்ஸ்பெக்டர் அனுமதித்தார்.

“கோ அஹெட். நீங்கள் இடிக்கலாம்.”

காண்ராக்டரே கவனமாக எல்லாரையும் அனுப்பிவிட்டு கடைசி ஆளாக இறங்கி வந்தார்.

ஆஸ்பத்திரி வண்டியும், போலீஸ் ஜீப்பும் கிளம்பி போகுமளவுக்குக் காத்திருந்து கைவீசி அனுமதி தர-

புகைத்துக் கொண்டிருந்த பீடியை வீசி எறிந்த இயக்குனர் கிரேனை முடுக்கிவிட-கனமான இரும்பு சங்கிலியில் தொங்கிய பாறை போன்ற இரும்புத்துண்டை அப்படியுமிப்படியுமாக நகர்த்தி ஊசலாடியபின் ஆவேசமாக மோதவே-

அந்த நூற்றாண்டு காலக் கட்டடம் விரிசல்விட்டது.

இரண்டாவது மோதலுக்கு கலகலத்தது. மூன்றாவது நாலாவது மோதலுக்கு சரிந்து சரிந்து விழத்தொடங்கியது. பொல பொல வென்று உதிரலாயிற்று,

* * *

பகல் மணி பத்தடிக்கும் போது-

அரசு மருத்துவ மனையில் வாசலில் ஜீப்பிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் வேதநாயகம் நடந்து போனார்.

பிணக்கிடங்கு வாடை குமட்டலெடுக்கவே கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக் கொள்ள வேண்டி வந்தது.

போஸ்ட்மார்ட்டம் நடத்திக் கொண்டிருந்தார் டாக்டர். பழகிப்போன துர்நாற்றம் அவரை பாதிக்காமல் விட்டிருந்தது. அலட்சியமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

“வாங்க இன்ஸ்பெக்டர் வேதநாயகம்!”

“முடிஞ்சுதா?”

“முடியப்போகிற ஸ்டேஜ். உங்க

முகம் கோணலாகி அதே நிலையில் உயிர் போயிருக்கிறது. அடையாளம் புரிவது கொஞ்சம் கஷ்டம். ஆனாலும் வேறு வழியில்லை.”

மாலை பத்திரிகைகளில் படத்துடன் போலீஸ் வேண்டுகோள் விடுத்திருந்தது.

“அடையாளம் தெரிகிறவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.” என்கிற செய்தியுடன் போன் நம்பரும் கொடுத்திருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் வேதநாயகம் போனுக்காகக் காத்திருந்தார். வரவில்லை. அலுத்துப் போய் உதவியாளரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போனபோது இரவு மணி பன்னிரண்டாகிவிட்டது.

விடியும்முன் வரவிருக்கும் இன்னொரு பயங்கரத் தகவலைப் பற்றி அறியாத நிலையிலேயே தூங்கிப் போய்விட்டார்.

***

அந்தக் கல்லூரி வளாகத்துக்குப் பின்னால் ரயில்கள் போவதும் வருவதுமாக இருந்தன. கிழக்கு கீற்றாக வெளுக்கத் தொடங்கியிருந்தது.

இரவுப் போர்வையை விலக்கிய புதிய நாள், குழந்தை சிணுங்குவது போல ஒரு சிலிர்ப்புடன் விளையாடிக் கொண்டிருந்தது.

கல்லூரி விடுதியிலிருந்து ஒரு கொத்து மாணவர்கள் வெளிப்பட்டு வந்தார்கள் அட்டகாச சிரிப்புடன்.

குட்டை நிஜாரும் துவாலை பனியனும் அணிந்த இளம் தளிர்கள் காலை ஓட்டம் ஓடத் தயாரானர்கள்.

“ஏண்டா இவனே. அந்த தூங்கு மூஞ்சி இன்னுமா எழுந்திருக்கல?”

“வந்து சேர்ந்துப்பான்-நீங்க வாங்கடா நாம ஓடலாம்.”

“முண்டம். உயிரோட இருக்கிறவன் அதுவும் குடிச்சிட்டு கிடந்தால் சாராய நெடிதான் வரும். அதெப்படி ரத்த வாடை வரும்? இரு. கிட்டே போய்ப் பார்க்கலாம்.” என்று முள்வேலியைத் தாண்ட முயன்றவனை இழுத்துக் கொண்டு விலகிப் போனார்கள்.

“அப்படியே கொலை விழுந்த பிணமானாலும் நீபோய் என்னத்தை சாதிக்கப் போகிறே? போலீஸ் வந்தால் ஏன் கிட்டப் போனீங்கன்னு தான் சத்தம் போடுவாங்க.”

“அப்ப போலீஸுக்கே தகவல் கொடுத்துடச் சொல்லலாம்.”

உடனே-

“வார்டன் சார்” என்ற கூச்சலுடன் விடுதியை நோக்கி ஓடிப் போகலானார்கள்.

இரவு தாமதமாக தூங்கிப் போனதினால் எழுந்திருக்க மனமில்லாமல் இன்னமும் புரண்டு கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் வேதநாயகத்துக்கு-யாரோ கதவைத் தட்டுவது எரிச்சலைத் தந்தது. அவசரமேயில்லாமல் கட்டிலை விட்டு இறங்கி கால் ரப்பர் செருப்புகளை அணிந்து கொண்டு வெளியேறினார்.

வாசல் கதவைத் திறந்த போது ஏட்டு நின்றார்.

“போன் வந்தது சார். ரயில்வே லயன் பக்கமா யோரோ செத்துக் கிடக்கிறாங்களாம்.

ரத்தவாடை அதிகமாயிருக் கிறதினால உடனே வரச் சொல்லி கல்லூரி முதல்வர் போன் பண்ணினார்.”

அவசரமாக உள்ளே போய் கிளம்பத் தயாரானார். (பதட்டம் தொடரும்.)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: சி. ஹென்றி.
வயது: 18
முகவரி: 10ம் கட்டை, பதுளை வீதி, பசறை.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல், சித்திரம் வரைதல்.



பெயர்: எம். இர்பான்.
வயது: 19
முகவரி: 01, ஹபுத்தலை வீதி, தியத்தலாவை.
பொழுதுபோக்கு: வானொலி தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: டி. ரவி.
வயது: 32
முகவரி: F. NO. 982, P.O.BOX-10331, SHUAIBA-65454. KUWAIT.
பொழுது போக்கு: பேனா நட்பு, பாடல்கள்.



பெயர்: எம். நஜீம்.
வயது: 23
முகவரி: 29/10 ஏ, சேர்க்குலர் வீதி, முஹிதீன் தோட்டம், காலி.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: ரி. வளர்மதி.
வயது: 20
முகவரி: 502, திருக்கடலூர், திரு மலை.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, வானொலி.



பெயர்: எம்.ஆரிப்
வயது: 235
முகவரி: P.O.BOX - 8085 CODE NO- 22051, SALMIYA. KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எம். றிஸ்வி.
வயது: 19
முகவரி: குபுக்வெவ, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். மௌஸ்லி.
வயது: 18
முகவரி: 43/2, கோன்தனிகொட வீதி மவனல்லை.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: ரி. மரியதாஸ்.
வயது: 25
முகவரி: பன்குளம், மொரவெவ-திரு மலை.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: எல். கமலநாதன்.
வயது: 29
முகவரி: 22, மாதம்பிட்டி வீதி, மோதர, கொழும்பு-15.
பொழுது போக்கு: பாடல் கேட்டல், கவிதை வாசித்தல் .

பெயர்: கே. ரவீந்திரன்.
வயது: 26
முகவரி: HOTEL GEMSLI, 7430 THVSIS, SWITZERLAND.
பொழுது போக்கு: ரெலிபோன்காட் சேகரித்தல்.

பெயர்: எஸ். பல்கிஸ்.
வயது: 16
முகவரி: 434/7, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட,கொழும்பு-09.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி,புத்தகம்.

# தாய் 64

## மக்சீம் கார்க்கி

"...நீ பிரிந்து போகிறாய். எப்பொழுதும் நீ உழைத்த மாதிரியே, ஓய்ச்சல் ஒழிவின்றி, நமது கொள்கையிலே சலனபுத்தியின்றி என்னுடைய வாழ்க்கை முழுவதும் நானும் உன்னைப் போல் உழைத்துக் கொண்டிருப்பேன். போய் வா, தோழனே!"

-லூத்மீலா-

இகோர் தன் தலையைப் பின்னால் சாய்த்துக் கண்களை மூடினான்; கை விரல்கள் பிசைந்து கொண்டிருப்பதைத் தவிர, அவனிடம் வேறு எந்த அசைவும் காணப்படவில்லை. அந்தச் சிறு அறையின் வெண்மையான சுவர்கள் ஏதோ ஒரு இனந்தெரியாத மங்கிய சோக பாவத்தையும், வறண்ட குளிர்ச்சியையும் வெளியிட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அங்கிருந்த பெரிய ஜன்னலின் வழியாக வெளியேயுள்ள மரங்களின் உச்சிக்கிளைகள் தெரிந்தன. இருண்டு மண்படிந்த அந்த இலைகளின் மத்தியிலே மஞ்சள் நிறப்பமுப்பு அங்கு மிங்குமாக சிதறிக் கிடந்தது; இலையுதிர் காலத்தின் வரவை அது அறிவுறுத்தியது.

"மரணம் என்னை வேண்டா வெறுப்பாக, கொஞ்சங் கொஞ்சமாக ஆட்கொண்டு வருகிறது." என்று அசையாமலும் கண்களைத் திறவாமலும் சொன்னான் இகோர்; "அவள் எனக்காக வருத்தப்படுகிறாள் என்பது எனக்கு நன்றாய்த் தெரிகிறது. நான் எல்லோருடனும் அவ்வளவு சுமுகமாகப் பழகினேன்!"

"பேச்சை நிறுத்து, இகோர் இவானவிச்" என்று அவனது கரத்தை வருடிக்கொண்டே மன்றாடிக் கேட்டுக் கொண்டாய் தாய்.

"கொஞ்சம் பொறு, நான் நிறுத்தி விடுகிறேன்...." மிகுந்த சிரமத்தோடு அவன் மீண்டும் பேச முயன்றான். அவனுக்கு மூச்சுத் திணறியது. தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதற்குச் சக்தியற்று இடையிடையே பேச்சை நிறுத்தி ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

"நீங்கள் எங்களோடு சேர்ந்திருப்பது ஒரு பெரிய மகத்தான காரியம். உங்கள் முகத்தைப் பார்ப்பதற்கே ஆனந்தமாயிருக்கிறது. சமயங்களில் நானாக நினைத்துக் கொள்வேன்- இவள் கதி என்ன வாகும்? நீங்களும்-எல்லோரையும் போலவே ஒரு நாள் சிறைக்குள் போவீர்கள். இதை நினைக்கும்போது எனக்கு உங்கள் மீது அனுதாபம் ஏற்படும். சரி, சிறைக்குப் போவதற்குப் பயப்படுகிறீர்களா?"

"இல்லை" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னாள் அவள்.

"ஆமாம், நீங்கள் பயப்படமாட்டீர்கள். ஆனால், சிறைவாசம் ரொம்ப மோசமானது. சிறைவாசம்தான் என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டது. உண்மையைச் சொல்லப் போனால், நான் சாகவே விரும்பவில்லை....."

"நீ சாகப் போவதில்லை" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் அவனது முகத்தைப் பார்த்தவுடன் அவள் அதைச் சொல்லாமலேயே மௌனமானாள்.

"என்னால் இன்னும் உழைக்க முடியும்... ஆனால், என்னால் உழைக்க முடியாது போனால் - அப்புறம் நான் உயிர்வாழ்வதில் எந்த அர்த்தமும் கிடையாது-உயிர் வாழ்வது முட்டாள்தனம்..."

தாய் பெருமூச்செறிந்தாள்; தன்னையும் அறியாமல் அந்திரேயினுடைய பிரியமான வாசகத்தை நினைத்துப் பார்த் தாள்: "இதெல்லாம் உண்மைதான். ஆனால் இது மட்டும் ஆறுதல் தராது." அன்று முழுவதுமே அவளுக்கு ஓயாத ஒழியாத வேலை. எனவே அவள் களைத்துப் போயிருந்தாள்; மேலும் அவளுக்கு ஒரே பசி. அந்த நோயாளியின் கரகரத்த முனகல் பேச்சு அந்த அறை முழுதும் நிரம்பி, அறையின் சுவர்களைத் தொட்டுத் தடவி ஊர்ந்து சென்றது. ஜன்னலுக்கு வெளியே தெரியும் மரத்தின் கிளைகள் கறுத்துத் திரண்டு பயங்கரமாகக் கவிந்து சூழ்ந்த கார்மேகங்களைப் போல் தோன்றி தம்முடைய கருமை



யால் வியப்பூட்டின. அந்தியின் அசைவின்மையில், சோகமயமாய், இருளை எதிர்நோக்கி எல்லாமே விசித்திரமாக அமைதியடைந்தன.

"எனக்கு எவ்வளவு மோசமாயிருக்கிறது" என்று கூறிவிட்டுக் கண்களை மூடி மௌனத்தில் ஆழ்ந்தான் இகோர்.

"தூங்கு. தூங்கினால் கொஞ்சம் சுகமாயிருக்கும்" என்று போதித்தாள் தாய்.

அவனது சுவாசத்தை பரிசீலனை செய்து பார்த்துவிட்டு அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்; சோகத்தின் விறைப்பான பிடிப்பிலே சிக்கி, சிறிது நேரம் அப்படியே அசையாது உட்கார்ந்திருந்தாள்; பிறகு அரைத் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

வாசல் நடையில் கேட்ட ஏதோ ஒரு சத்தத்தில் அவள் விழித்தெழுந்தாள். விழித்தவுடன் துள்ளியெழுந்து இகோரைப் பார்த்தாள். அவனது கண்கள் விழித்திருப்பதைக் கண்டாள்.

"நான் தூங்கிப்போய் விட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று மெதுவாகக் கூறினாள் அவள்.

"மன்னிக்கப்பட வேண்டியது நான்தான்" என்று அவன் மெதுவாகக் கூறினான்.

இரவு நேரத்தின் இருள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தது. அந்த அறை சில்லிட்டுக் குளிர்ந்தது. ஏதோ ஒரு விபரீதமான இருள் எல்லாவற்றின் மீதும் படர்ந்து கவிந்திருந்தது; நோயாளியின் முகமும் இருண்டு போயிருந்தது.

ஏதோ கரகரப்புக் கேட்டது. தொடர்ந்து லூத்மீலாவின் குரலும் வந்தது.

"இரண்டு பேரும் இருட்டில் உட்கார்ந்து ரகசியமா பேசுகிறீர்கள்? விளக்கு ஸ்விட்ச் எங்கே இருக்கிறது?"

திடீரென அந்த அறையில் கண்ணைக் கூசும் வெள்ளிய ஒளி நிறைந்து பரவியது. அறையின் மத்தியில் நிமிர்ந்து நிற்கும் நெட்டையான லூத்மீலாவின் கரிய உருவம் தெரிந்தது.

இகோரின் உடம்பு முழுவதிலும் ஒரு நடுக்கம் குளிர்ந்து பரவியோடியது. அவன் தன் கையை நெஞ்சுத் தடத்துக்குக் கொண்டு போனான்:

"என்ன இது?" என்று கத்திக்கொண்டே லூத்மீலா அவன் பக்கம் விழுந்தடித்து ஓடினாள்.

அவன் தனது அசைவற்ற கண்களால் தாயைப் பார்த்தான்; அந்தக் கண்கள் முன்னை விட விரியும் பிரகாசமும் பெற்றிருப்பது போல் தோன்றின.

அவன் தன் வாயை அகலத் திறந்தான்; தலையை உயர்த்தினான்; தன் கையை மெதுவாக நீட்டினான். தாய் அவனது கையைத் தன் கையில் வாங்கி, அவனது முகத்தையே மூச்சுவிடாமல் பார்த்தாள். திடீரென்று அவனது கழுத்தும் பலமாக வலித்துத் திருகி வளைந்தது; அவன் தன் தலையைப் பின்னோக்கிச் சாய்த்துக் கொண்டே உரத்த குரலில் கத்தினான்:

"என்னால் முடியாது! எல்லாம் முடிந்து போயிற்று!"

அவனது உடம்பு லேசாக நடுங்கியது. அவனது தலை தோள்ப்பட்டைமீது சரிந்து சாய்ந்தது. அவனது படுக்கைக்கு மேலாக நிர்விசாரமாக எரிந்து கொண்டிருக்கும் விளக்கு அவனது அகலத் திறந்த கண்களில் உயிரற்றுப் பிரதிபலித்தது.

"என் கண்ணே!" என்று லேசாக முணுமுணுத்தாள் தாய்.

லூத்மீலா அந்தப் படுக்கையை விட்டு மெதுவாக விலகிச் சென்று ஜன்னலருகே போய் நின்றாள்; நின்று வெளியே வெறித்துப் பார்த்தாள்.

"அவன் இறந்துவிட்டான்!" என்று திடீரென்று வழக்கத்துக்கு மாறான உரத்த குரலில் வாய்விட்டுக் கத்தினாள் அவள்.

அவள் தன் முழங்கைகளை ஜன்னல் சட்டத்தின் மீது ஊன்றிச் சாய்ந்து நின்றாள்; பிறகு திடீரென்று யாரோ அவள் தலையில் ஓங்கி அறைந்துவிட்ட மாதிரி, அவள் தன் முழங்காலைக் கட்டியுட்கார்ந்து முகத்தை இரு கைகளாலும் மூடி, பொருமிப் பொருமி விம்மியழ ஆரம்பித்தாள்.

தாய் இகோரின் விறைத்துக் கனத்த கைகளை அவன் மார்பின் மீது மடித்து வைத்தாள். அவனது தலையைத் தலையணை மீது நேராக நிமிர்த்தி வைத்தாள். பிறகு அவள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு லூத்மீலாவிடம் போனாள்; அவளருகே குனிந்து அவளது அடர்ந்த கேசத்தைப் பரிவோடு தடவிக்கொடுத்தாள். லூத்மீலா தனது மங்கிய விரிந்த கண்களை மெதுவாக அவள் பக்கம் திருப்பினாள்; உடனே எழுந்து நின்றாள்.

"நாங்கள் இருவரும் தேசாந்திர சிட்சையின் போது ஒன்றாக வாழ்ந்தோம்" என்று துடிதுடித்து நடுங்கும் உதடுகளோடு சொன்னாள் அவள். "நாங்கள் இருவரும் ஒன்றாகவே அங்கு சென்றோம்; சிறைவாசத்தை அனுபவித்தோம்... சமயங்களில் அந்த வாழ்க்கை எங்களுக்குத் தாங்க முடியாததாகவும் வெறுப்பூட்டுவதாகவும் இருக்கும்; எத்தனையோ பேர் மனமொடிந்து போனார்கள்..."

வறண்ட உரத்த தேம்பல் அவளது தொண்டையில் முட்டியது. அவள் அதை அடக்கிக் கொண்டு தன் முகத்தைத் தாயின் முகத்துக்கு அருகிலே கொண்டு வந்தாள்; அந்த முகத்திலே படிந்த சோகமயமான பரிவுணர்ச்சியால், அவளது தோற்றம் இளமை பெற்றிருப்பதாகத் தோன்றியது.

"அவனது கேலியும் கும்மாளமும் என்றுமே வற்றி மடியாதவை" என்று அவள் விரைவாகக் கூறினாள்; கண்ணீர் பொங்கிச் சிந்தாது இடையிடையே பொருமி விம்மினாள். "அவன் எப்போதுமே சிரித்துச் சிரித்துக் கேலி பேசுவான். தைரியமற்றவர்களை ஊக்குவிப்பதற்காக, தனது சொந்தக் கஷ்டங்களையெல்லாம் வெளியே காட்டாமல் பொறுத்து மறைத்துக் கொள்வான். எப்போதுமே நல்லவனாகவும் அன்போடும் சாதுரியத்தோடும் நடந்து கொள்வான். அங்கே தேசாந்திரப் பிரதேசமான சைபீரியாவிலே சோம்பேறித்தனம் மக்களை லகுவில் ஆட்கொண்டு குட்டிச்சுவராக்கும் ; அவர்களை கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு கொண்டு செலுத்தும். இந்தமாதிரி நிலைமையை அவன் எவ்வளவு சாமர்த்தியமாக எதிர்த்துப் போராடினான், தெரியுமா? அவன் எவ்வளவு அற்புதமான தோழன் என்பது மட்டும் உங்களுக்குத் தெரிந்தால்.... அவனது சொந்த வாழ்க்கை படுமோசமான துக்க வாழ்க்கைதான்; என்றாலும் யாருமே அந்த வாழ்வைப் பற்றி அவன் கூறிக் கேட்டது கிடையாது; கேட்டதே கிடையாது! நான் அவனுக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதி. அவனது அன்புக்கு நான் பெரிதும் கடமைப் பட்டவள். அவன் தமது அறிவுச் செல்வத்தால் எனக்கு என்னென்ன வழங்க முடியுமோ அத்தனையையும் குறையாது வாரி வழங்கினான். என்றாலும் அவன் களைப்புற்றுத் தன்னந்தனியாக இருக்கும் போது கூட, அவன் மீது பாச உணர்ச்சி காட்டவேண்டும் என்றோ, அல்லது தான் செய்யும் உதவிக்குப் பிரதியாக அவனை நான் கவனிக்க வேண்டுமென்றோ அவன் கொஞ்சம் கூட, இம்மியளவு கூட கேட்டதும் கிடையாது; எதிர்பார்த்ததும் கிடையாது....."

அவள் இகோரிடம் போய் அவனது கரத்தை முத்தமிடுவதற்காகக் குனிந்தாள்:

"தோழா, என் அன்பான, இனிய தோழனே! உனக்கு நன்றி. என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து நான் உனக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று வருத்தத்துடன் மெதுவாகச் சொன்னாள். "நீ பிரிந்து போகிறாய். எப்பொழுதும் நீ உழைத்த மாதிரியே, ஓய்ச்சல் ஒழிவின்றி, நமது கொள்கையிலே சலனபுத்தியின்றி என்னுடைய வாழ்க்கை முழுதும் நானும் உன்னைப் போல் உழைத்துக் கொண்டிருப்பேன். போய் வா, தோழனே!"

அவளது உடம்பு பொருமலினால் குலுங்கியது. தன் தலையை இகோரின் பாதங்களுக் கருகே வைத்துக்கொண்டாள். தாய் இடைவிடாது மௌனமாக அழுது கொண்டிருந்தாள். என்ன காரணத்தினாலோ அவள் கண்ணீரை அடக்க முயன்றாள். லூத்மீலாவைத் தேற்ற, பலமாகத் தேற்ற விரும்பினாள். இகோரைப்பற்றித் துயரமும் பாசமும் கலந்த அருமையான வார்த்தைகளைச் சொல்ல எண்ணினாள். கண்ணீரின் வழியாக அவனது அமிழ்ந்துபோன முகத்தை, அவனது கண்களை, முழுவதும் மூடாது அரைக்கண் போட்டுத் தூங்குவது போல் தோன்றிய அவன் கண்களை, இளம் புன்னகை பதிந்து நின்ற அவனது கரிய உதடுளை- எல்லாம் பார்த்தாள். எல்லாமே அமைதியாகவும் வேதனைதரும் ஒளி நிரம்பியதாகவும் இருந்தன.

இவான் தனீலவிச் வழக்கம்போலவே விடுவிடென்று உள்ளே வந்தான். தீடீரென அந்த அறையின் மத்தியில் நின்று விட்டான். தனது கைகளை விறுட்டென்று பைகளுக்குள் சொருகிக் கொண்டு நடுநடுங்கும் உரத்த குரலில் கேட்டான்:

"இது எப்போது நிகழ்ந்தது?"

யாரும் பதில் சொல்லவில்லை. அவன் தன் நெற்றியைத் துடைத்துக் கொண்டான்; லேசாகத் தள்ளாடியவாறு இகோரின் பக்கம் நடந்து சென்றான். அவனிடம் கரம் குலுக்கிவிட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றுகொண்டான்.

"எதிர்பாராதது எதுவும் நடக்கவில்லை. இவனது இருதயம் இருந்த நிலைமைக்கு, இந்த மரணம் ஆறுமாதங்களுக்கு முன்பே நேர்ந்திருக்க வேண்டியது....குறைந்த பட்சம்...."

இடத்திற்குப் பொருந்தாத, ஓங்கிய உரத்த அவனது குரல் திடுமென்று நின்றது. அவன் சுவரோடு சாய்ந்து கொண்டு, தன் தாடியை விறுவிறுவென்று திருகித்திரித்தான்; அடிக்கடி கண் சிமிட்டியபடி படுக்கையருகே சூழ்ந்து நின்றவர்களையே பார்த்தான்.

"இவனும் போய்விட்டான்!" என்று அமைதியாகக் கூறினான்.

லூத்மீலா எழுந்து ஜன்னலருகே சென்று அதைத் திறந்தாள். அவர்கள் எல்லோருமே சிறிது நேரத்தில் அந்த ஜன்னல் பக்கம் வந்து, ஒருவருக்கொருவர் நெருங்கி நின்று இலையுதிர்கால இரவின் முகத்தை வெறித்து நோக்கினார்கள். மரவுச்சிகளுக்கு மேலாக விண்மீன்கள் மினுமினுத்தன. நட்சத்திரக் கூட்டம் வான மண்டலத்தின் ஆதியந்தமற்ற விசாலப் பரப்பையும் விரிவையும் அழுத்தமாக எடுத்துக் காட்டியது.

லூத்மீலா தாயின் கரத்தைப் பற்றி எடுத்தாள்; வாய் பேசாமல் அவள் தோள்மீது சாய்ந்தாள். டாக்டர் தலையைக் குனிந்து, தனது மூக்குக் கண்ணாடியைத் துடைத்தவாறே நின்றார். ஜன்னலுக்கு வெளியே பரந்து கிடக்கும் அமைதியின் வழியாக, நகரின் ஓய்ந்து களைத்துப் போன இரவின் ஓசைகள் கேட்டன.

(தொடர்ந்து வரும்)

# விபத்து

அவள் மனதிலின்று எந்த குழப்பங்களும் இருக்காது. நிச்சயமாய்... இதயம் இன்ப வலைக்குள் சிறைப்பட்டிருக்கும்,

என்று அனைவரும் நினைத்திருப்பார்கள். ஆனால் அப்படியிருக்கவில்லை. மனதில் என்றுமில்லாதவாறு குழப்பங்கள்...பயம்...அச்சம்...

இன்று தேவிக்கு முதலிரவு.

சராசரி பெண்களுக்கு இருக்கும் சந்தோசம், எதிர்ப்பார்ப்புக்கள் இவையொன்றும் தேவிக்கு இருக்கவில்லை.

ஏதோவொரு இனம் புரியாத பயம்... சோகம்... ஏதோவொன்றை இழந்து தவிக்கும் தவிப்பு.

பாற் செம்பு கையிலிருந்தது. ஆனால் அந்த பாலைப்போல் தெளிந்ததாக தன் மனமும் இருக்க மறுக்கிறதே என்று உள்ளுக்குள் கலங்கிப்போயிருந்தாள்.

லேசாக சாத்தப்பட்டிருந்த கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைகிறாள். மணமகனான பவித்திரன், அவள் வரவிற்காய் காத்திருந்தவனாய் எழுந்து கொள்கிறான்.

வழக்கமான சம்பிரதாய முறைப்படி ஆரம்ப அத்தியாயம் நடந்து முடிய, தேவி கட்டிலின் ஓரத்தில் அமர்ந்து கொள்கிறாள். அவள் மனமெல்லாம் மௌனம். மனதுக்குள் "திக்...திக்"கென்று ஒரு துடிப்பு... தவிப்பு..!

"தேவி! இப்ப ஏன் ஊமையா இருக்கிற? ஏதாவது பேசலாமே..!"

"........."

"நீ..... சராசரி ஆம்பிள்ளையா என்னையும் நினைக்கிற..! அது தான் மனசுக்குள்ளேயே பயப்படுற..!"

".........."

"நாங்க உன்ன பொண்ணு பார்க்க வந்தப்போ... நீ எப்ப மறைக்காம உண்மையெல்லாம் சொன்னியோ, அப்பவே உன் மனசு எனக்கு புரிஞ்சிரிச்சி...! இனி சரி பேச மாட்டியா?"

"........."

"தேவி... பேசு தேவி?"

அவளால் அதற்கு மேலும் பொறுமையாய், மௌனமாய் இருக்க முடியாமலிருந்தது.

கட்டலின் ஓரத்தில் முகம் புதைத்து விம்மி அழத்தொடங்கியிருந்தாள். பவித்திரன் அவளின் தோள் தொட்டு ஆதரவாய் தலையுயர்த்தினான்.

"தேவி... என்ன இது... இப்ப ஏன் அழுவுற?" அவளின் விசும்பல் மேலும் அதிகரித்திருந்தது. உதடு பிரித்தாள்.

"அத்தான்... உங்களுக்கு ஏற்ற மனைவியா நான் இல்லனு நினைக்கிறப்போ... எனக்கு பேச வாய் வரல..!" மீண்டும் அவளது விசும்பல்.

"என்ன இது... இங்க பாரு தேவி... நான் பெண்கள மதிக்கிறேன். அவுங்க உணர்ச்சிகள, திட்டங்கள, எதிர்பார்ப்புக்கள, ஆசைகள இது எல்லாவற்றையும் மதிக்கிறேன். அதேபோல உனக்கு நடந்த சம்பவத்த ஒரு விபத்தாதான் நான் நினைக்கிறேன்"

"அத்தான்... அப்ப எனக்கு 14 வயசுதான் இருக்கும். எட்டாம் வகுப்பு. பக்கத்து ஊர்க்காரன். தெனமும் பஸ்ஸில வருவான். சிரிப்பான். காதலப்பற்றி எனக்கு ஒன்னுமே தெரியாது. ஏதேதோ கேட்பான். கதைப்பான். நிறைய "ஸ்டோரி புக்ஸ்" குடுத்தான். படிச்சேன். எல்லாமே காதல் கதைகள். சராசரி பெண்களுக்கு வார ஏதோவொரு உணர்வு எனக்குள்ளேயும் வந்திச்சி. பிறகு



ஹப்புத்தளையூர்- எப்.லெனாட் குமார்

காதலிச்சோம். அப்ப கூட எனக்கு காதலப் பற்றி நிறைய தெரியாது. ஒரு நாள் பஸ் லேட்டாகிரிச்சி. தனியா அழைச்சிகிட்டு வந்தான். தொட்டான். அணைச்சான். ஏதேதோ பண்ணினான். புதிய அனுபவம். நானும் மறுக்கல. ஆனா எல்லாமே முடிஞ்ச பிறகு தான் ஒவ்வொன்றா விளங்க ஆரம்பிச்சிச்சி. கதறி அழுதேன். நிறைய ஆறுதல் சொன்னான். பிறகு கொஞ்சக் காலத்துல ஏதேதோ காரணம் சொல்லி அவனாகவே விலகிப் போயிட்டான்!"

"தெரியும்... எல்லாமே நீதான் எனக்கு சொல்லிட்டியே!" அவனை பேசவிடவில்லை. அவள் குறுக்கிட்டாள்.

"ஆமா.., இதுக்கு முன்னுக்கு கூட என்ன 8 பேர் பெண்பார்க்க வந்தாங்க. இந்த விசயத்த அவுங்களுக்கு மட்டும் நான் தனியா கூப்பிட்டு சொன்னேனா.... பிறகு, அவுங்களா கவே எழுந்து போயிடுவாங்க...!"

"........."

"ஆமா அத்தான்... ஒரு உண்மைய மறைச்சி, பொய்ய சொல்லி ஒரு ஆம்பளைய ஏமாற்ற எனக்கு மனம் வரல!"

"தேவி... இது உனக்கு மட்டுமில்ல. பலருக்கு நடக்குது. அறியாத வயசு. புதுப்புது உணர்ச்சி. காதல் செய்ய சொல்லுது. முடிவு இப்படி விபரீதமா முடியிற நேரத்திலதான் சிந்திக்கிறாங்க...!"

"இதப்பற்றி நான் அம்மாகிட்ட கூட சொல்லல. பயம். சொல்லவும் தைரியம் வரல. ஆனா என்ன பொண்ணு கேட்டு வார மாப்பிள்ளைங்ககிட்ட தைரியமா மறைக்காம சொன்னேன்!"

"எனக்கு புரியுது தேவி. மருந்து நோயாளிக்குத் தான் கட்டாயமா தேவைப்படும். நல்லா ஆரோக்கியமா இருக்கிறவங்களுக்கு இல்ல. மனம் சுத்தமா இருக்கல்லே. அதுபோதும்!"

"........."

"தெரியாம செய்யிற தவற மன்னிக்கலாம். நீ செய்தது அறியாத வயசுல புரியாத தப்பு. மன்னிக்க முடியாதது தெரிஞ்சி செய்யிறததான்."

"........."

"நீ இப்ப என் மனைவி மட்டுமில்லை. எல்லா சுகதுக்கங்களிலும் பங்கெடுத்து துணைக்கு வாற பங்காளி. குடும்பங்கிறது ஒரு கோயில் மாதிரி. உன்ன கல்யாணம் முடிக்கிறதுக்கு முன்னாடி, நூறு தடவைக்கு மேல யோசிச்சேன். பெண்கள ஒரு கவர்ச்சி பொருளா நான் நினைக்கல. அவுங்களுக்கும் ஆண்களுக்கு இருக்கிற உரிமையில சமபங்கு இருக்குது. இல்லையா தேவி?"

"........."

"பெண்கள் தப்பு செய்தா, அது எப்பவோ ஒரு நாள் தெரியவருது. ஆண்டவன் படைப்பு அப்படி. ஆனா ஆண்களுக்கு அப்படியில்ல. நிறைய தப்பு செய்தாலும், வெளியில தெரியிறதில்லை!"

தொடர்ந்தும் அவள் மௌனமாயிருந்தாள். அவன் தான் பேசினான்.

"வீணான சந்தேகமோ, இல்லாட்டி பெண்கள கொடுமைப்படுத்தியோ, வாழ்க்க பூரா நரகத்துல வாழ நான் விரும்பல. என்னப்பொறுத்தவரையும் நீ... அது ஒரு விபத்து மாதிரி தான்...!"

"இருந்தாலும்..... அ....த்...தா...ன்!"

அதற்கு மேல் அவளை தன் இதழ் பிரித்து பேச அவன் அனுமதிக்கவில்லை.

# முறிவு

ரங்கராஜனுக்கு மழையை வேடிக்கை பார்ப்பதென்றால் மிகவும் பிடிக்கும். வானத்திலிருந்து ஊசிகளைப் போல விழுந்து, பூமியில் தெறித்து, சிதறி, மண் வாசனையைக் கிளப்பிவிட்டு ஓடுகிற நீர்த் துளிகள் எத்தனை புனிதமானவை! குருவிகள் நனைந்து, புகலிடம் தேடி ஜன்னலருகில் அமர்ந்து ஈரச் சிறகுகளைச் சிலிர்த்துக் கொள்வதுதான் எத்தனை இனிமையான காட்சி!

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்*
*துப்பார்க்குத்*
*துப்பாய தூவும் மழை.*

என மனசுக்குள் வள்ளுவன் குறளைப் பாடிக் கொண்டே வாய் மணக்க ஏ.ஆர்.ஆர். பாக்கும் (2 பொட்டலம்) வெற்றிலையும் மென்றபடியே மழையைப் பார்ப்பதில் இருக்கிற சுவாரஸ்யம் அலாதியானது அவருக்கு. "உண்பவர்க்கு உணவை விளைவித்தும் தானே ஓர் உணவாகவும் பெய்கிற மழை" என்ற குறளின் மெய் சிலிர்க்க வைக்கிற தரிசனத்தில மூழ்கிப்போவார்.

அறுபத்தி இரண்டு வயதில் வேறென்ன சுகம் மிச்சமிருக்கிறது. கழிந்துபோன வாழ்க்கையின் கணங்களை-தன் வாழ்நாளில் வந்துபோன வித விதமான மழை நாட்களை எண்ணி மகிழ்வதைத் தவிர? நரையும் வழுக்கையும் சரி பாதியாய் ஆக்ரமித்த தன் தலையை தடவி தடவி நினைவுகளை உசுப்பி விடுவார். ஈ.ஸி சேரை வெராண்டாவில் இழுத்துப் போட்டு மழையை வேடிக்கை பார்ப்பதில் சுவாரஸ்யம் நிறையவே இருந்தது.


அவருக்குப் பிடித்த இன்னொரு விஷயம் பப்புவுடன் விளையாடுவது. "தாத்தா" என்று ஓடி வந்து கட்டிக் கொள்கிற இரண்டு வயசான அவர் பேரன்தான் பப்பு. தன் மகன் கிருஷ்ணனும், சுமதியும் தனக்காகவே பப்புவை பெற்றெடுத்துள்ளதாக ஒரு பூரிப்பு அவருக்கு உண்டு.

கிருஷ்ணனுக்கு அரசாங்க உத்தியோகம். மிக நிறைய வருமானம். பரவாயில்லை. தன்னைப் போலவே புடவைக் கடைகளில் வேலை இல்லை. இருபது வருடம் சிரமப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மாரடைப்பு ஏற்பட்டதால் வீட்டோடு இருக்க வேண்டியதாகிவிட்டது ரங்கராஜனுக்கு. ஓய்வு பெறும்போது அவர் கையிலிருந்த மிச்சத் தொகை முன்நூற்றி சொச்சம்தான். வாழ்க்கையில் தான் சம்பாதித்த மொத்த வருமானத்தின் மிச்சம் அதுதான் என்கிற கனத்த சோகத்துடன் தான் சுரண்டப்பட்டதை உணர்ந்து, உணர்ந்து ஒன்றும் செய்ய வியலாத கையாலாத்தனத்துடனும், இயலாமையுடனும் சாய்ந்துவிட்ட தன்னைப் போல கோரமான நிலை மகனுக்கு நேராது. அவன் ஓய்வு பெறும்போது பென்ஷனாவது வரும் என்று திருப்திப்பட்டுக் கொண்டார்.

பஸ்சுக்காகக் கூட செலவு செய்யாமல் ராயபுரத்திலிருந்து மவுண்ட்ரோடு வரைக்கும் நடந்தே போய் பத்து மணி நேரம் கால் கடுக்க நின்று உழைத்து மீண்டும் நடந்தே வீட்டுக்கு வந்து சேமித்த காசில் மகனை நிறைய படிக்க வைத்தது வீண் போகவில்லை. மகள் மீனாவின் கல்யாணச் செலவுக்கும் மனைவி சுப்புலட்சுமியின் கடைசிக்கால வைத்தியச் செலவுக்கும் இருபது வருட உழைப்பின் வெகுமானமாய் முதலாளி அளித்த பணம் காணாமல் போக மிச்சமிருந்த முன்நூற்றி சொச்சத்துடன் மகனிடம் தஞ்சமாகிவிட்டார்.

மாலை நேரம் மங்கத் தொடங்கிய பின்னரும் மழை தொடர்ச்சியாய்ப் பெய்து கொண்டிருந்தபடியால் வீடுகளில் மின்சாரம் போய் சிம்னி விளக்குகளும் மெழுகுவர்த்திகளும் பிரகாசித்தன. சமையலறையிலிருந்து மருமகள் சமைக்கிற வெங்காய சாம்பாரின் மணம் வாயில் வரை வீசி குளிருக்கு பசியைக் கிளப்பிக் கொண்டிருந்தது. சுடச்சுட இட்லியும், சாம்பாரும் கிடைத்தால் இந்த மழை நேரத்திற்கு வேறென்ன சுவர்க்கம் வேண்டும்?

மெல்ல சமையலறையினுள் எட்டிப் பார்த்தார். "சுமதி என்ன சாம்பாரா?" என்று கேட்டார் சந்தேகத்தைப் போக்க. "ஆமாம் மாமா, கொஞ்சம் பொறுங்கோ" என்றாள் சுமதி. அவள் குரலில் தொனித்தது வேலை செய்த களைப்பால் விளைந்த சலிப்பா அல்லது கோபத்தால் எழுந்த கடுப்பா என்று புரியாமல் மீண்டும் தன் ஈஸி சேரை நோக்கி நடந்தார். பப்பு ஹாலில் பாயில் படுத்து நல்ல தூக்கத்தில் இருந்தான்.




**கே. ஜெகன்**

"உஸ்..." என்று பெருமூச்சு விட்டபடி இலேசாய் கூன் விழுந்த முதுகின் சௌகரியத்துக்கேற்ப சாய்ந்தபடி அவர்கிடந்த போது மழையில் யாரோ குடையுடன் வருவது தெரிந்தது. கிருஷ்ணனா? இல்லையே? அவன் இன்று குடையே கொண்டு போகவில்லியே? வந்தது பரமசிவம்; எதிர்வீட்டுக்காரன்.

"என்னப்பா... மழையிலே...?" என்றார்.

"சார்-கொஞ்சம் காப்பித்தூள் தர்றேளா... கடையெல்லாம் மூடிட்டான் நாளைக்கு வாங்கிட்டு தந்திடறேன். மழைவேற..." என்றான் பரமசிவம்.

"உள்ளே மருமகப் பொண்ணு இருக்கா கேளுங்க" என்றார் கைகாட்டி. பரமசிவம் இரண்டு அடி எடுத்து உள்ளே நகர்ந்தான். ஒரு சில கணங்கள் மழையையே பார்த்த ரங்கராஜன் யதேச்சையாய் இடப்புறம் திரும்பியபோது திடுக்கிட்டார். சுமதி மேலே ஷெல்பிலிருந்து கைக்கு எட்டாமல் இருந்த காப்பி டப்பாவை எடுக்க முயன்று கொண்டிருந்தாள். வலது கை இட்லி மாவில ஊறியதால் இடது கையை தூக்கி டப்பாவை எடுக்க அவள் முயல்வதையும் பரமசிவத்தின் வக்கிரப் பார்வை அவள் இடுப்புச் சதையின் மடிப்புகளின் மீது மேய்வதையும் கவனித்து விட்டார். தன் உடம்பை அந்நியன் ஒருவன் அணு அணுவாய் ரசித்து வெறிப்பதை அறியாத சுமதி காரியத்தில் கவனமாயிருந்தாள். சுறு சுறுவென்று உடம்பிலுள்ள ரத்த மெல்லாம் தலைக்கு ஏற கோபமாய் எழுந்தார் ரங்கராஜன். "என்னம்மா இப்படியா காப்பி டப்பாவை மேலே தூரமா வைப்பது?" என்ற படி தானே அதை எடுத்துக் கொடுத்தார். பெற்றுக் கொண்டு திரும்பி நடந்த பரமசிவத்தை தனியே அழைத்து "இனிமேல் எதுவும் வேலைன்னா நீங்க வராதீங்கோ, சம்சாரத்தை இல்லை; குழந்தைகளை அனுப்புங்கோ" என்றார் கடுமையாக. அசடு வழிய பரமசிவம் போன சற்று நேரத்தில் தொப்பலாக நனைந்தபடி வீடுவந்து சேர்ந்தான் கிருஷ்ணன்.

"குழந்தை தூங்கியாச்சா?" என்று கேட்டான் மனைவியிடம். "ஊம்! ஆபீஸ் விட்டதும் நேரா வீட்டுக்கு வந்தால் தானே?" என்று கோபப்பட்டாள் சுமதி.

"சரி விடு... பசிக்குது. என்ன செஞ்சிருக்கே" என்றான் ஈரத் தலையைத் துவட்டியபடி.

"வாங்கோ! சூடாக இட்லி போட்டுத் தர்றேன். சட்னியும், சாம்பாரும் வச்சிருக்கேன்" என்றாள் சுமதி.

"அப்பா சாப்பிட்டாரா" என்று மகன் கேட்பான் என்று எதிர்பார்த்தார். கேட்கவில்லை. தன்னைக் கூப்பிடுவான் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார். கூப்பிடவில்லை. அவன் மட்டும் சாப்பிடப்போய் விட்டான். வயிற்றில் பசி புரட்ட மெல்ல சாய்ந்து லேசான தூக்கத்தில் ஆழ்ந்து போனார். சுமதிதான் வந்து எழுப்பினாள். எவ்வளவு நேரம் தூங்கினோம் என்று கூடத் தெரியவில்லை.

"உள்ளே போய் சாப்பிடுங்கோ!" என்றாள் அவள். பசி மிக அதிகமாக கிண்ட ஆவலுடன் உள்ளே நுழைந்து சாப்பாட்டு தட்டின் மூடியை அகற்றினார். உள்ளே காலையில் கிண்டிய உப்புமாவின் மிச்சமும், ஊறுகாயும், இரண்டு உடைந்த ஆறிப்போன இட்லிகளும் பாத்திரத்தில் வழித்து வைத்த சட்னியும் மட்டும் இருந்தன, சில்லிட்டு.

அரைத் திருப்தியுடன் சாப்பிட்டு படுக்கையைப் புரட்டி போட்டு படுத்தபோது தலையை வலிப்பது போலிருந்தது. வெராண்டாவில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து மழையையே சுவாரஸ்யமாய் பார்த்துக் கிடந்ததில் நிறைய குளிர்காற்றை சுவாசித்ததால் உடம்பு நடுங்கியது. அமிர்தாஞ்சன் இருக்கா என்று அலமாரியில் தேடினார். சுமதி எடுத்திருப்பாள் என தெரிந்தது.

கிருஷ்ணனும் சுமதியும் அதற்குள் கதவைச் சாத்திவிட்டுக்கொண்டனர். அவர்களுக்கு தொல்லை தரலாமா என்று யோசித்தார். ஆனால் தைலம் தடவாவிட்டால் தன் உடம்பு ரொம்ப பாதிக்கப்படும் என்று பட்டது. சளி வேறு பிடித்துக் கொண்டது. கதவைத் தட்டலாம் என்று முடிவெடுத்து அடியெடுத்தபோது உள்ளிருந்து வந்த பேச்சுக் குரல் தெளிவாகக் கேட்டது. சுரீரென்று அந்த வார்த்தைகள் காதுகளை எரித்தன.

"இந்த கிழத்தை வேற என்னதான் செய்யச் சொல்றே?" இது கிருஷ்ணனின் குரல்.

"பாருங்க. நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. நாளைக்கே ஏதாவது ஏற்பாடு பண்ணி மாமாவை அனுப்பிடுங்க. இனியும் அவர் இங்கே இருக்கக்கூடாது. சதா குழந்தையை சீண்டி அழ வைக்கிறார். சும்மா தண்டச் சோறு திண்ணுட்டு வெராண்டாவிலே ஈஸி சேரைப் போட்டு உட்கார்ந்து எதிர்வீட்டு பரமசிவத்தோட பெண்டாட்டி பரமேஸ்வரியைப் பார்த்துக்கிட்டிருக்காரு! இந்த வயசுல இப்படியொரு அல்பப் புத்தி. அன்னிக்கு நான் குளிச்சிட்டு பிராவை எடுக்க மறந்துட்டதாலே சேலையை சுத்திட்டு வந்து துணி மாத்துறப்ப திடுப்புனு தெரியாத மாதிரி உள்ளே வந்துட்டார். மார்லே துணியில்லாமல் தவிச்சுட்டேன். நாக்கைப் புடுங்கி சாகலாம்னு ஆயிடுச்சு எனக்கு!"

"கவலைப்படாதே சுமதி! அவரோட பால்ய சிநேகிதர் நாகசாமி இருக்காரில்லையா? அவரும் ஒண்டிக்கட்டை. அவர்கூட இவரை தங்க வச்சிடலாம். மாசாமாசம் சாப்பாட்டுக்கு ஓட்டல் டோக்கன் மொத்தமாக வாங்கித் தந்திடலாம்" என்றான் கிருஷ்ணன்.

இதுவரை கேட்டதிலேயே சர்வ நரம்பு மண்டலங்களும் ஆடிப்போக, கை விரல்கள் நடுநடுங்க, கண்கள் கலங்கி கண்ணீர் வழிய திகைத்து நின்றுவிட்டார் ரங்கராஜன். இன்னமும் கேட்டு தாங்காது என்று துயரத்துடன் நகர்ந்தார்.

இந்த வீட்டிற்கு தான் இப்படியொரு சுமையாகிப் போனோமே என்ற வேதனை நெஞ்சை அழுத்த தன்மீது விழும் பழியைச் சுமக்க முடியாமல் கூசிக் குறுகிப் போனவராய் சிறிது குழப்பமடைந்த அவர் பின் தீர்மானித்தார். தன் இரண்டு மூன்று துணி மணிகளை ஒரு பிளாஸ்டிக் பையில் திணித்தார்.

மழை இன்னும் பலமாகப் பெய்தது. குடை எடுக்கலாமா என்று யோசித்தவர் குழந்தையுடன் சுமதி வெளியே போகும் போது தேவைப்படும் என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டார்.

பப்புவை ஒரு முறை ஆசை தீரப் பார்க்கிற ஆவலை ரொம்பவும் சிரமப்பட்டு அடக்கி தலைவலி, சளி எல்லாம் மறந்தவராக மழையில் நனைந்தபடி வீதியில் இறங்கி நடந்தார். நெஞ்சு வலித்தது.

வழியிலேயே மாரடைப்பு வந்து விடுமோ என்ற பயத்துடன் தன்னை முழுவதும் நனைத்த மழையை சபித்தபடி நாகசாமியின் வீட்டை நோக்கி வேகமாக நடந்தார் ரங்கராஜன்.

---

"பெத்தவளை வைச்சுப்பார்க்க ஒரு புள்ளயும் விரும்பல்ல. ஊசலாடிய உயிர்.... பறந்திட்டுது"

# திவசம்



**ரூபராணி — கண்டி**

செய்துமுடித்த பலகாரங்கள், சாப்பாடுகள் அனைத்தும் சமையல் அறையிலிருந்து விசேஷம் நடக்கும் மண்டபத்துக்கு ஒவ்வொன்றாய் ஊர்ந்து கொண்டிருந்தன. விம்மிப்புடைத்த பப்படங்கள் 'மங்கா' என்ற பெயரோடு மலையாக உயர்ந்து கிடந்தன.

"ம்..ம்..எல்லாம் ரெடியாச்சா?" என்று மீசையை முறுக்கியபடி நோட்டம்விட்டார் ஒருபட்டுவேட்டி ஆசாமி, மண்டபம் பலதரப்பட்ட மக்களால் நிரம்பி வழிந்து விழாக்கோலம் பூண்டது.

வேலையை முடித்த சமையல்காரர் சுதந்திரமாகத் தேகத்தை மேசையில் கிடத்தினர். அசதி தாங்காத சுந்தரம் ஆவென்று வாயைப் பிளந்து கொட்டாவி விட்டபடி "மங்கம்மாப் பாட்டி கண்ணமூடி நேத்துப்போலிருக்கு" என்றான். புதிதாக வேலைக்குச் சேர்ந்த சோமுவுக்கு மங்கம்மாவைத் தெரியாது. "அண்ணே அவுங்க பெரிய ஆளுங்களா?" அள்ளி முடித்த கூந்தலும் அகன்ற நெற்றியில் ரூபாயளவு குங்குமமும் சந்தனச் சிலையாய் மங்கம்மா வளையவருவதும் சுந்தரத்தின் மனசில் நிழலாடியது. அசதியைத் தூர வீசிவிட்டு மங்கம்மாப் பாட்டியை விமர்சிக்கத் தொடங்கினான் சுந்தரம்.

"அந்தக் கிராமத்தில மங்கம்மாவைத் தெரியாதவங்க ஆருமில்லை, அவங்க கலியாணமாகி அங்குவந்து மிச்சங்காலம். அவபுருஷன் பெரிய கம்பெனி ஒண்டில கிளாக்கர் வேல. மங்கம்மாவக் கைப்புடிச்சநேரம் சொத்து சொகமெல்லாம் தேடிவந்துது, முத்துப்போல மூணு புள்ளைகளைப்பெத்தாங்க. புருஷன் புள்ளைகள் எண்டு அந்த அம்மா பம்பரமாய்ச் சுழண்டத என்னால மறக்கமுடியா, அவங்கமனசு தங்கம். சொர்க்கமா இருந்த குடும்பத்தில ஆர்ரகண் பட்டதோ என்னவோ ஒரு நாள் நடக்கக் கூடாதது நடந்து போச்சப்பா." காதில் செருகியிருந்த பீடியைப் பற்ற வைத்து நீண்ட பெருமூச்சோடு உட்கார்ந்துவிட்டான் சுந்தரம். "என்னாச்சு அண்ணே?" சோமுவின் கேள்வியில் பதட்டம் தெரிந்தது.

"மங்கம்மாட புருஷன் மாரடைப்பு வந்து மண்டயப் போட்டிட்டார்."

"ஐயோ கடவுளே அப்புறம்...?"

"முந்திரிக் கொட்டைமாதிரி முந்திக்காதே இனித்தான் கதயே ருசி-கேளு"

குசினி விட்டத்தை நோக்கிப் புகையை ஊதிய சுந்தரம் என்ன நினைத்தானோ பீடியை நசுக்கி அண்டாப்பானையருகில் வீசிவிட்டுத் தொண்டையைச் செருமிச் சொல்லத்தொடங்கினான்.

"காலம் எப்பவும் ஒரேமாதிரியா ஓடுது? மங்கம்மா விதவையான பிறகு அவ வாழ்க்கையே அடியோடு மாறிப்போச்சு. தன்ர சோகத்த மூடிமறச்சி புள்ளைகளத் தலநிமிரவச்ச மகராசி அவ. குடியிருந்த வீட்டவித்து, சின்னக் காம்பறா ஒண்ட வாடைக்கு எடுத்தா. சேத்துவச்ச சொத்துகள வித்து புள்ளைகளை வளத்து பட்டணத்துக்கனுப்பிப் படிக்கவச்சா, அது மட்டுமா? நல்ல எடமாப் பாத்துக் கலியாணமும் பண்ணிவச்சா, மூணு புள்ளைகளும் நல்லபடியா வாழுதுகள்.

கடசியில என்ன? மங்கம்மாவுக்குக் கையும் காலுந்தான் மிச்சம். கூலிக்கி மாவிடிச்சி வெறகு வித்துக் காலந்தள்ளினா. ஓடிஓடி உளச்ச உடம்பு தேஞ்சி அவ பாயும் படுக்கையும் ஆகிப்போனா."

"ஆங்... என்னங்க அநியாயம் இது? புள்ளங்கள் ஒண்ணும் பெத்தவங்களக் கவனிக்கிறல்லியா?" சோமுவின் கவலை வெளிப்பட்டது.

"தென்னயவச்சா எளநீரு-புள்ளயப்பெத்தாக் கண்ணீரு" முணுமுணுத்துப் பாடினான் சுந்தரம், அவனுக்குத் தாகமெடுத்தது. வாளியில் மிஞ்சியிருந்த மோரைத் தானுங்குடித்து சோமுவுக்கும் கொடுத்தான். மூலையில் உருண்டு கிடந்த உரலின்மேல் உட்கார்ந்தவன் சமையல் கட்டில் அடுத்த வீட்டுப்பூனை தன்குட்டிகளை அணைத்துச் சுகமாகத் தூங்குவதைப் பார்த்துத் தனக்குள்ளே சிரித்தான்.

"அண்ணே, என்ன சிரிப்பு.? சொல்லுங் கண்ணே." சோமுவுக்கு இருப்புக்கொள்ள வில்லை. "என்னத்தைச் சொல்ல? மங்கம்மாட நில மோசமாப் போச்சு. பிள்ளைகள் எப்பவாவது ஒருக்காவந்து பாத்துப் போகுங்கள். தாயக் கவனிக்கக் கூலிக்கு ஆள் வச்சாங்க. அது வேற ஆருமில்ல-என்ரமனிசி பொன்னம்மாதான். பெத்தவள, வச்சிப்பாக்க ஒரு புள்ளயும் விரும்பல்ல. ஊசலாடிய உசிர் பறந்திட்டுது".

"அடபாவமே, செத்தப்புறம் புள்ளைங்க வந்தாங்களா?" சோமுவினால் ஆவலை அடக்கமுடியவில்லை "ஏன் வரல்ல பறந்தடிச்சி வந்தாங்க. கடசிச்சடங்க எவ்வளவு ஆடம்பரமாப் பண்ணினாங்க தெரியுமா? கொழும்பில இருந்து வந்த பிரேதப் பெட்டிர வடிவ அந்தக் கிராமத்துச் சனங்கள் வச்சகண்வாங்காமப் பாத்தாங்க. உசிரோட கவனிக்காதவங்க செத்த புறகு ஒப்புக்கு எப்புடி, எல்லாம் செய்யிறாங்க பாத்தியா? இது தாம்பா ஒலகம், ஒரு தாய் பத்துப் புள்ளபெத்தாலும் அந்தப் பத்தயும் கவனிப்பா, ஆனா அந்தப்பத்துப் புள்ளைகளும் ஒரு தாயக் கவனிக்கும் எண்டு சொல்ல ஏலா" என்று சோம்பல் முறித்த சுந்தரம் யோசனையில் ஆழ்ந்து போனான்.

"அண்ணே என்ன யோசன? மங்கம்மாட கத முடிஞ்சுபோச்சா?" கலங்கிய கண்களைச் சோமு துவாய்த்துண்டால் துடைத்துக் கொண்டான். "கதமுடிஞ்சபடியாத்தானே திவசம் பெரிய தடபுடலாய் நடக்குது சுந்தரம்." அமைதியாகக் கூறினான்.

தனக்குப் பிள்ளைகள் இல்லாதகுறை இப்போது சோமுவுக்குப் பெரிதாகப்பட வில்லை.

---

# சூழ்நிலைக் கைதி

மாலை மஞ்சள் நிற வானம். ஜன்னலால் வெளியே பார்வையை ஓடவிட்டு கட்டிலில் அமர்ந்தான் ரகு.

கையில் "தினமுரசு" பக்கங்கள் பிரித்து படித்தான். "தாய்"!- "எப்படியும் நான் சாகத்தான் போகிறேன். வாயை முடிப் பேசாதிருந்தாலும் சாகத்தான் போகிறேன்" உணர்ச்சி பூர்வ வசனங்கள். அவன் உடல் சிலிர்த்தது. மனம் பாரமானதாய் உணர்ந்தான்.

"வாழ்வதிலுள்ள இன்பத்தோடு சாவதின் அவசியமும் சேர்ந்து தானே வருகிறது..." இகோர் எனும் பாத்திரம் ரகுவின் கண்களை ஈரமாக்கிற்று. எத்தனை அற்புதமான வசனங்கள். அருமையான கதை. பெருமூச்சு விட்டான். தன்னில் ஏதோவொன்று சூனியமாவதை உணர்ந்தான்.

பத்திரிகையை மடித்து நிமிரவும் அப்பாவின் குரல் உரத்து ஒலிக்கவும் சரியாகவிருந்தது. அலுவலகம் விட்டு வந்ததும் வராததுமாக இத்தனை ஆக்ரோஷமான கூப்பாடு. சற்றே அதிர்ந்தான்.

சமாளித்து வெளியே வந்தவனின் கண்கள் முன் ஹால் சோபாவில் சரிந்தமர்ந்திருந்த அப்பாவை நோக்கி மீண்டன.

'அலுவலகலத்தில் ஏதோ சூடாகியிருப்பார்' என்று நினைத்து மானசீகமாய் சிறிது சிரித்துக் கொண்டான்.

"கூப்பிட்டா வர இத்தனை நேரமா? வர வர உனக்கு திமிர் பெருகிப் போச்சு. தோளுக்கு மேல் வளர்ந்திட்டே இல்ல! அந்தக் கொழுப்பு தான்." உறுமினார்.

ரகுவின் நாக்கு உலர்ந்தது. உடல் லேசாய் நடுங்கியது. என்ன இது? இப்படி கர்ச்சிக்கிறார்? என்ன பிழை விட்டேன் நான்? யோசித்தான் மண்டை வலித்தது தவிர வேறேதும் தோன்ற வில்லை.

"யாரடா அந்தப் பொண்ணு? உனக்கும் அவளுக்கும் எத்தனை நாளாய் பழக்கம்? அதுவும் நம்ம இனம் இல்ல. என்னடா புத்தி ஏதும் பிசகிப் போச்சுதா?"

"என்னப்பா இது? ஏ.. எனக்கொண்ணுமே புரியல." 'பம்பாய்' அரவிந்தசாமிக்கும் அப்பாக்கும் இடையிலான உரையாடலைப் போல சற்று வித்தியாசமாக! இங்கு ரகு தவறே செய்ய வில்லை. அப்படி இருந்தும்...?

"புரியலியா பெரிய மனுசருக்கு? இந்தா

*எதற்கெடுத்தாலும் 'சுள்'ளெனப் பாயும் தங்கை நக்கலடித்து ஏளனம் பண்ணும் அண்ணா.*



பாரு இந்த லெட்டரை! என் ஒபீஸ் எட்ரசுக்கு எத்தனை அழகா வந்திருக்கு! நெருப்பில்லாம எப்படி புகையும்? என்ன சொல்லப் போறன்னு பார்க்கறேன்." சப்பாத்துக்களை வேக வேகமாகக் கழற்றி அங்கொன்றும் இங்கொன்றமாக 'சொத்'தென வீசினார். கோபம். படு கோபம்.

வாசித்து நிமிர்ந்தான். கண்கள் லேசாகப் பனித்தன. எத்தனை குரூரம். எத்தனை கேவலமான வார்த்தைகள். நம்பிவிட்டாரா அப்பா?

"இ..இதெல்லாம் பொய். சத்தியமா நான் அந்தப் பொண்ண காதலிக்கல்ல அப்பா. ஏதோ தினம் "கொலேஜ்"ஜிக்குப் போய் வரையில கண்டு பழக்கம். ஓரிரண்டு வார்த்தைகளும் கொஞ்சம் புன்னகையும் தாம்பா. சத்தியமா வேறெதுவும் இல்ல."

"இதை நான் நம்பணுங்கிறே-அப்படித் தானே?" ஏகத்தாளமாகக் கேட்டார். பின் சிரித்தார். சிரிப்பில் ஒரு சிவப்புக்கோபம்.

சில சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் பொல்லாதவை. சில சமயங்களில் தவறு செய்பவர் தப்பிக்கவும் மனதாலும் பிழை செய்ய நினைக்காத அப்பாவிகள் மாட்டிக் கொள்ளவும் களம் அமைப்பவை. விதி என்பது இதுதானா?

ரகுவை அப்பா நம்பவில்லை. பிடித்தது சனியன். அன்றாடம் அவனை கண்காணிப்பதுவும் கட்டுப்பாடுகள் விதிப்பதுவுமாக அவன் வாழ்க்கை கைது செய்யப்பட்டது. எதற்கெடுத்தாலும் அவன் முகத்தில் 'சுள்'ளெனப் பாயும் தங்கை; நக்கலடித்து ஏளனம் பண்ணும் அண்ணா; முகத்தை இழுத்துக் கொள்ளும் அப்பா; மௌனமாய் உறுத்தும் அம்மா...

"மதம் மாறிப் போனாலென்ன.. மனம் மாறவில்லை... மனங்கொண்ட காதல் நிறம் மாறவில்லை..." சுந்தரமான காலைப்பொழு

**—ஷெர்மிளா இஸ்மாயில்—**

தொன்றில் அண்ணா கர்ண கடூரமாய் அவன் முகத்தைப் பார்த்தபடி தப்புதப்பாய் பாடி வைத்தான். தங்கையின் 'பக்' கென்ற குபீர் சிரிப்பு.

மௌனமாயிருந்த ரகுவுக்கு அப்துல் ரகுமானின் 'இதயக் கோப்பை' கவிதை மனதுக்குள் நிழலாடியது. "...மனித இதயம் அதிசயமான ஆற்றல் உடையது. அது எத்தகைய துயரத்தையும் தாங்கிக் கொள்கிறது. துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இதயத்திற்கு இல்லையென்றால் முதல் துயரத்திலேயே எல்லா மனிதரும் இறந்து போயிருப்பார்கள்..." மௌனமாய் யோசித்தான். பின் தெளிந்தான்.

'யாரும் என்னை நம்பாவிட்டால் பரவாயில்லை. எனக்குள் மனசாட்சியிருக்கிறது. நம்பிக்கை என் மேலே நிறைய எனக்கு. இவர்கள் சொல்கிறார்கள் என என்னால் அவளைக் காதலிக்கவும் முடியாது; இவர்கள் நம்ப வேண்டுமே என்பதற்காக அவளைப் பார்த்து முறைத்து என் சின்னச் சிநேகத்தை முறிக்கவும் முடியாது. சொல்லிக் கொண்டேயிருக்கட்டும் சொல்பவர்கள். நான் நடக்கும் பாதை என்னுடையது. முட்களால் என் பயணத்தை நிறுத்திட முடியாது.' ரகு நினைத்தான். பேசவில்லை.

# இலக்கிய நயம்



தருவது ரசிகன்

## தீராத சந்தேகம்

எதிர்பார்த்துத்தான் வந்தான் கருணாகரன்.

அரச சபையில் இருந்து வசந்தாதேவி எழுந்து சென்ற வேகத்திலிருந்து புயல் மையம் கொள்ளத் தொடங்கிவிட்டது என்று ஊகித்தே இருந்தான்.

கருணாகரன்-மன்னன். ஏழடி உயரமான மலை. விம்மிய தோள்கள். தேக்குமரக் கதவுபோல பரந்து விரிந்த மார்பு, அதிலே கோடாக ஒரு தழும்பு, மார்பின் ரோமத்தை மீறித் தெரியும் விழுப்புண். நீண்ட திடமான கரங்கள். உறுதியான தொடைகள். ஊடறுக்கும் விழிகள், சீராக்கப்பட்ட அடர்ந்த மீசைக்குக் கீழே தடித்த உதடுகள், மேலே நீண்டநாசி. அவனை நோக்கும் எந்தப் பெண்ணும் சற்றே தடுமாறத்தான் செய்வாள்.

அதுதான் வசந்தா தேவிக்கு கவலை. அவளும் பேரழகிதான். அள்ளக் குறையாத சுக சுரபிதான். போதும் என்ற ளவுக்கு தேக வளம். போதாது என்று நினைக்காத மன்னன் தன் அந்தப்புரத்தை வேறு சுந்தரப் பெண்களால் அலங்கரிக்க விரும்பவில்லை.

மலர் பல தேடுவது மன்னர்கள் குணம். அந்தப்புரம்தான் அவர்களுக்கு பாவையரைப் பந்தாடும் களம். என்பதெல்லாம் கருணாகரன் விடயத்தில் தலைகீழ்.

பட்டத்துராணியே போதும் என்று தன்மேல் மட்டற்ற ஆசையோடு உள்ள மன்னன் எங்கே மனம் மாறி, வேறு மணம் தேடி போய்விடுவானோ என்று வசந்தாவுக்கு பயம்.

அமைச்சரின் மகள் அம்சவேணிக்கு நாட்டிய அரங்கேற்றம்.



கட்டான உடல். முன்னும் பின்னும் குன்றுகளாய் நான்கு பேரெழில்கள். சிட்டாக சுழன்று மயில்போல ஆடினாள். மான் போல மிரண்டாள். காண்போரைக் கவர்ந்திழுக்கும் கணையெல்லாம் தொடுத்தாள்.

கண்ணனைத் தேடும் ராதையானாள். கண்களில் விரகதாபம். உதட்டினில் ஏக்க கீதம்.

"வெண்ணெய் திருடிய கள்வன், என்னைத் திருடிய கதை சொல்லவா? கண்ணைப் பறிக்கும் அவன் அழகு எந்தப் பெண்ணும் மறக்காத பொலிவு. புல்லாங்குழல் கொண்டு வந்தான், பொல்லாத காதல் கதை சொன்னான், அவன் கல்லாத கலை என்ன உலகில், நான் பூவாக அவன் கையில் வீழ்ந்தேன்! போய் வருவேன் என்றவனும் போனான், வாள் விழியை வழிமேலே வீசி அவன் தாள் தெரியும் என்று மனம் துடிக்க, நாள் பலவாய் காத்திருந்தேன், ஆவி காத்திருந்தேன், பாவியவன் எங்கே?"

அம்சவேணி விழிகளால் தேடிக் காட்டினாள். மன்னன்மீது நிலைத்து மீண்டது பார்வை.

"வெண்ணெய் உண்டு களித்திருக்கும் கண்ணா! என்னை உண்டு சுகித்திருக்க வாராய்! கண்ணா என் மன்னா, மணிவண்ணா, கண்கொண்டுபார் எந்தன் எழிலை! கார் கொண்ட மேகம் போல் வருவாய், களிப்பென்ற மழையாலே நனைப்பாய்!"

'கண்ணா, மன்னா..' வசந்தா தேவிக்கு சந்தேகம் வந்துவிட்டது. 'இருபொருளோ?' மன்னனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் வைத்த கண் வாங்காமல் அம்சவேணியின் அபிநயத்தில் லயித்திருந்தான்.

"உடலும் உனக்கே. உயிரும் உனக்கே. திருவே வருக. தருவேன் என்னை!"

அம்சவேணியின் மார்புகள் நடன உடையையும் மீறி துடித்தன. உயர்ந்து தணிந்தன.

'கூர்ந்து கவனிக்கிறாரே?' வசந்தாதேவி சட்டென்று எழுந்தாள். கவனம் கலைந்து, "ஏன் எழுந்துவிட்டாய் வசந்தா?" என்றான் மன்னன்.

"தலைவலி" என்றாள். பொய் என்று முகம் சொன்னது. போய்விட்டாள்.

நடனம் முடிந்ததும் மன்னன் தேடிப் போனான். தலைவலிக்கு என்ன காரணம் என்று ஓரளவு ஊகித்தே இருந்தான்.

"வசந்தா!"

"என்ன?" வார்த்தையில் தணல்.

"ஏன் வந்துவிட்டாய்? அமைச்சர் மனம் வாடியிருக்குமல்லவா?"

"கரிசனை அமைச்சர்மீது, கண்கள் அவர் மகள் மீது! அப்பப்பா என்ன ஒரு பார்வை. நான் ஒருத்தி பக்கத்தில் இருப் பதையே சுத்தமாக மறந்துவிட்டீர்களாக்கும்!"

"ஏன் வசந்தா? நன்றாகத்தானே நடனமாடினாள் அம்சவேணி!"

முகத்தில் எரிமலை.

"ஆமாம், ஆமாம், நடனத்தைவிட அவள் வதனத்தில் காட்டிய குறிப்புக்கள் பிரமாதம்! பித்தாக்கியிருக்குமே உங்களை!"

மன்னன் கோபப்படவில்லை. பிரியம் அதிகமாகும்போது சந்தேகமும் இயல்புதான். கிடைத்த பொருளை பங்குபோட விரும்பாத குழந்தைபோலத்தான் இவள் சந்தேகமும் என்று நினைத்தான்.

அருகில் அமர்ந்து தோளைப் பற்றினான். கையைத் தட்டிவிட்டாள்.

"கண்ணா வா, கள்வா வா என்றெல்லாம் அழைத்தாளே அந்தக் கள்ளி. செவிமடுத்து சேவை செய்திருக்கலாமே!"

"அபாண்டமாகப் பேசுகிறாய். எதுவுமறியாத பெண் அவள்!"

"அதுதான் அறிய விடுக்கிறாள் அழைப்பு! முற்றும் அறிந்தவர் சென்று கற்றுக்கொடுக்கலாமே!"

"சேச்சே.."

"என்ன சேச்சே..?"

"பாற்கடல் இங்கிருக்க, பள்ளிகொள்ள வேறிடம் எதற்கு?"

உள்ளே பூரித்தாள்.

"வண்டின் குணம் மலர் தாவுவது!"

"இருக்கலாம். மலர் தோட்டமே இங்கே இருப்பதால் இந்த வண்டு எங்கும் போகாது!"

மேலும் பூரித்தாள். எனினும் கோபம் மாறாதது போல் நடித்தாள்.

என்ன செய்யலாம்? யோசித்தான்.

"வ..வசந்தா.. பா.. பா.. பாம்பு!"

"அய்யோ எங்கே?"

"அதோ உன் பின்னால்!"

நடுங்கி, ஒடுங்கி அவன் மார்பில் சாய்ந்து கட்டிக் கொண்டாள். உடல் சுட்டது. மார்பை மார்பு தொட்டது. இறுக்கிக் கொண்டான்.

"பாம்பு எங்கே?"

மன்னன் நகைத்தான். இதோ என்று அவள் முதுகில் பரந்திருந்த கூந்தல் தொட்டுக் காட்டினான்.

"பொய்தானே!"

"நம் மெய் சேர என்னவாய் சொன்ன பொய்!"

விடுபட்டு விலகினாள்.

"எங்கே கற்றீர் இந்தத் தந்திரம்? இப்படித்தான் பிற பெண்களையும் வளைத்து பணியவைப்பீர்! ஒட்டிக் கொள்ள மறுப்பவளையும் கட்டிக் கொள்ள வைப்பீர்? நம்பமாட்டேன். நான் நம்பமாட்டேன்!"

மன்னன் பாடு தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகிவிட்டது.

**"ஊடலை விலக்கி மகிழ்விக்க நினைத்தேன். அவளோ பிற பெண்களோடும் இப்படித்தான் நடப்பீர் என்று சினம் கொண்டு விட்டாளே!"** என்று நினைத்தான்.

திருவள்ளுவரும் அதே காட்சியைத் தான் காட்டுகிறார். ஊடலை தணிக்க நினைத்து அவதிப்பட்ட காதலன் நிலையைச் சொல்லும் குறள் இது.

**"தன்னை உணர்த்திலும் காயும் பிறர்க்கு நீர் இந்நீரர் ஆகுதிர் என்று"**

குறள்-1319, அதிகாரம்-132.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-140

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | | ■ | 5 | | |
| | 6 | | ■ | | ■ | |
| | | ■ | 7 | | ■ | |
| ■ | 8 | | | | ■ | ■ |
| 9 | | | | ■ | 10 | |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

01. இவன் தன் கடமையைச் சரிவரச் செய்தால் உயர்வடைவது திண்ணம்.
03. ஆண்-பெண் இருவருக்கும் அழகைத் தருவது- தகுந்த முறையில் பராமரித்தால்...!
05. சகலரும் இதனையே நாடுகின்றனர்.
08. இதன் உற்பத்தி மன்னாரில்தான் அதிகம்.
09. இந்தக் கலையில் நளன் பெயர் போனவன். (குழம்பியுள்ளது).
10. கதை எழுத இது வேண்டும்.
11. வீடு கட்டுவதற்கு இதுவும் தேவை.
12. மருத்துவ குணமுள்ள இந்தச் செடி இந்துக்களால் வணங்கப்படுகிறது.

### மேலிருந்து கீழ்

01. நடுங்கும் குளிர் தரும்; இருப்பினும் மகிழ்வூட்டும் ஒரு மாதம்.
02. வங்கிகளில் இது குறைவாக இருப்பதனால், தனியார் இதனால் கூடுதலான நன்மை அடைகின்றனர்.
04. வட-கிழக்கில் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது.
05. சமரசம் உலாவும் இடம் என்றும் இதனைக் கூறுவார்கள்.
06. தமிழ் இலக்கியங்கள், இதிகாசங்கள் யாவற்றிலும் பிரதான இடம் பிடித்துள்ள மலர் இது.
07. அரசியல் தலைவர்கள் இது விடுவதில் எப்போதும் பின் நிற்பதில்லை.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 24.02.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-140
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-138ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 து | ரு | ப் | பு | ■ | 2 தா | சி |
| 3 கி | ளை | ■ | 4 கை | க் | கூ | லி |
| ல் | ■ | 5 எ | ■ | 6 ம | ர் | ■ |
| ■ | 7 மு | று | க் | கு | ■ | 8 ம |
| ■ | 9 க | ம் | ■ | டி | 10 கி | ரி |
| 11 அ | ம் | பு | லி | ■ | ■ | யா |
| வா | பு | ■ | 12 சி | ர | த் | தை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 138இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எவ். நஸீரா பானு, வெள்ளவத்தை.
2. செல்வி. எஸ் ஜெயசிங்கம், நீர் கொழும்பு.
3. ந. ரவீந்திரா, வவுனியா.
4. எம். சதாத், நாவலப்பிட்டி.
5. திருமதி. சாந்தினி உதயகுமார், களுவாஞ்சிக்குடி.
6. ஏ. எம். றிஸ்வானா, பாணந்துறை.
7. ரி. சதானந்தன், சிலாபம்.
8. எம். இம்தியாஸ், மாத்தளை.
9. கே. ரத்னகுமாரி, திருகோணமலை.
10. திருமதி. கே. வேலுச்சாமி, கட்டுகஸ்தோட்டை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**★ கிரிக்கெட் ஆட்டங்களை புலிகள் குழப்பமாட்டார்கள் என்று இலங்கை அரசாங்கம் உத்தரவாதமளித்துள்ளதே?**

எம்.தயாசேகரன், வவுனியா.

*புலிகள் பயங்கரவாதிகள் அல்ல என்று அரசாங்கமே ஒப்புக் கொண்டமாதிரித்தான். அவர்கள் தமது எதிரிகளோடு மட்டும்தான் விளையாடுவார்கள். நீங்கள் (கிரிக்கெட் வீரர்கள்) பயப்பட வேண்டாம் என்பது போலத்தானே அர்த்தம்?*

-●●-

**★ நம்நாட்டுக்கு வரமறுத்து அடம் பிடித்த கிரிக்கெட் அணிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

வி.சௌந்தரன், கம்பளை.

*மரணத்தோடு விளையாட வேண்டும் என்று அவர்களை வலிந்து அழைக்க நாம் யார்? ஆனாலும் திலகரின் கூற்றுக்குப் பின்னராவது அவர்கள் முடிவை மாற்றியிருக்கலாம்.*

-●●-

**★ இங்கிலாந்திலும் குண்டுவெடித்துள்ளதே. அங்கும் நமது கதைதானா?**

ஏ.புவனேஸ்வரன், கண்டி.

*எங்கும் கதை ஒன்றுதான். இருப்பவன் கொடுக்கமாட்டான். இல்லாதவன் விடமாட்டான். யாருக்கு எது சேரவேண்டுமோ அது சேரட்டும் என்ற பொதுநோக்கு வெளியே வந்தால், போர் என்ற கொடு நோய்க்கு மருந்து காணலாம்.*

-●●-

**★ அரசியல் தீர்வு யோசனைகளை புலிகளுக்கு அனுப்பச் சொல்லி கூட்டணி கூறியுள்ளதே?**

எஸ்.மகேந்திரன், கொழும்பு-12.

*நிறைவான ஒன்றை அனுப்பச் சொல்லிக் கேட்டால் அது உயர்வான எண்ணம் என்று பாராட்டலாம். தமிழ் கட்சிகளே நிறைவாக எண்ணாத யோசனைகளை, புலிகளுக்கு அனுப்பச் சொல்லிக் கேட்பதில் உள்நோக்கம் இருக்கிறது. "அவர்களும் நனைந்தால்தான் நாங்கள் குளிர்காய்வதை குறைசொல்ல மாட்டார்கள்" என்று சட்டமூளையொன்று திட்டம் போடுகிறது.*

-●●-

**★ காதலுக்கு கண் உண்டோ?**

எம்.எஸ்.எம்.லாபீர், புல்மோட்டை-01.

*உண்டு. சில நேரங்களில் கண் ஏமாற்றிவிடுவதும் உண்டு.*

-●●-

**★ பெண்களை ஏறெடுத்துப் பார்க்காத ஆண்கள் எப்படி?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

*கொஞ்சம் வெட்கம். கொஞ்சம் அச்சம்.*

**★ ரி.என்.எல். தொலைக்காட்சியில் இப்போது தமிழ் திரைப்படம் ஏன் போடுவதில்லை.**

கே.சந்திரிகா, ரேஸ்கோஸ், நுவரெலியா.

*தமிழ் பட இரசிகர்களை தொடர்ந்து கொடுமைப்படுத்த வேண்டாம் என்ற நல்லெண்ணம்.*

-●●-

**★ சொகுசு வாகனங்களில் பயணம் செய்யும் துறவிகள் பற்றி?**

பாவுல் பங்கிராஸ், பதுளை.

*அவர்களும் மனிதர்களே என்று மறந்தது நம் குற்றம். இன்னொன்று தெரியுமா? இக் காலத்தில் எதையும் இழக்காமலிப்பதும் துறவிகள்தான்.*

**★ எந்த வளம் இல்லை இந்த திருநாட்டில்?**

இரா.ராஜேஸ்கண்ணா, இந்தகல மேற்பிரிவு.

*அதுதானே! இல்லாவிட்டால் இப்படித் தாராளமாக யுத்தத்தில் இழந்து கொண்டிருக்க முடியுமா என்ன!?*

-●●-

**★ எப்படி வாரிக்கொண்டாலும் என் தலைமயிர் படியமாட்டேன் என்கிறது, என்ன செய்யலாம்?**

ஜே.எம்.கியாஸ், கிண்ணியா.

*இருக்கவே இருக்கிறது, மொட்டை.*

-●●-

**★ நிலம் பார்த்து நடக்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எஸ்.சுமதி, பண்டாரவளை.

*காலத்தை அறிந்து காலெடுத்து வைக்கிறார்கள்.*

-●●-

**★ ஐ.ரி.என்.இல் 'தூதருவோ' நாடகத்திற்கு எதிராக ஒளிபரப்பிய 'வண்ணக் கோலங்கள்' அந்த நாடகம் முடிவடைந்த பின்னர் நிறுத்தப்பட்ட மர்மம் என்ன?**

சே.நாகேந்திரா, ஹட்டன்.

*உங்கள் கேள்வியிலேயே விடை இருக்கிறதுபோல் தெரிகிறதே.*

-●●-

**★ சந்தேகம் ஒரு நோய் என்பார்கள்; அதற்கு மருந்தொன்று?**

செல்வி மனோ, டவுன் சமிட்.

*தீரவிசாரித்தல்.*

-●●-

**★ டியர் சிந்தியா! நட்பு என்பது எதுவரை? பகை என்பது எதுவரை?**

கந்தையா கணேஷமூர்த்தி, வெதமுல்லை.

*ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட நட்புக்கு எல்லையில்லை. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாத பகைக்கும் முடிவில்லை.*

-●●-

**★ தமிழ் திரைப்படங்களில் வருவதுபோல சங்க இலக்கியங்களிலும் தாலியை வைத்து எழுதப்பட்ட கதைகள் உள்ளனவா?**

எம்.மகேஸ்வரி, பதுளை.

*சங்க இலக்கியங்களை கரைத்துக் குடித்துவிட்டு கண்ணதாசன் சொன்னது என்ன தெரியுமா? சங்க இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் மட்டுமே தாலி என்ற பதம் வருகிறது. ஆனால் அது மங்கல நாண் என்ற பொருளில் அல்ல. ஒரு சிறுவனுக்கு புலிப்பற் தாலி அணிவிக்கப்படும் காட்சியும் சங்க இலக்கியத்தில் விபரிக்கப்படுகிறது. ஆக, பெண்ணுக்கு மணமானதின் சின்னமாக தாலி வந்து புகுந்தது இடையில்தான் என்கிறார் கண்ணதாசன்.*

-●●-



**★ ரஜினி எதிர்வரும் தமிழக தேர்தலில் அரசியலில் குதிப்பாரா இல்லையா?**

மா.மோனிகா, ஹட்டன்.

*குதிக்கமாட்டார். தேர்தல் நடக்கும்போது தமிழ்நாட்டிலேயே இருக்கமாட்டார் என்று செல்வி தன் கட்சிக்காரர்களுக்கு நூறுவீத உத்தரவாதம் கொடுத்திருப்பது லேட்டஸ்ட் தகவல்.*

-●●-

**★ அதிஷ்டம் யாரைத் தேடி வருகிறது?**

பி.மனோகரன், மாத்தளை.

*முயற்சி என்ற பசையுள்ளவர்களை.*

-●●-

**★ தமிழகத் தலைவர்களில் தங்களை மிகவும் கவர்ந்தவர் யார்?**

சி.சுதாகரன், மட்டக்களப்பு.

*தந்தை பெரியார். சரியோ, தவறோ மனதில் பட்டதை துப்பாக்கி தோட்டாபோல் சடசடவென்று சுட்டுச் சொன்னவர்.*

# இராமாயணம் அங்கம் 20

இராமரும் இலக்குவனும் இளமையிலிருந்தே இணைபிரியாதவர்கள். இராமர் எங்கு சென்றாலும் நிழல்போல் தொடரும் இலக்குவன், வனவாசத்தின்போதும் அண்ணனை விட்டு அகலப்போவதில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டான். இதனால் இலக்குவனையும்

## முடிசூடும் மன்னன் மகன் மரவுரி தரித்துச் சென்றான்

அழைத்துக்கொண்டு சீதையின் அந்தப்புரத்துக்கு இராமர் வந்து சேர்ந்தார்.

இராம பட்டாபிஷேகம் இடையில் தடைப்பட்டுவிட்டது என்ற உண்மையை உணராத சீதை, தன் நாதனுடன் பட்டாபிஷேக மண்டபம் செல்லும் பொழுதினை எதிர்பார்த்தவளாக உப்பரிகையில் காத்து நின்றாள். குடை, கொடி, ஆலவட்டம் முதலான சகல அரச அலங்காரங்களுடன் சென்ற அரசகுமாரர், அவை எதுவுமே அற்று, தேரின் அலங்காரங்களையும் இழந்தவராக, தம்பி இலக்குவனுடன் வருவது கண்டு மனம் வெதும்பினாள். அவ்வாறிருப்பினும் தன் கணவனின் முகத்தில் முன்பைவிட அதிகப்பிரசாகம் தோன்றுவதையும் அவதானித்தாள். கணவர் அந்தப்புர வாயிலை வந்தடையுமுன்னர் கீழே இறங்கி வாயிலுக்கு வந்துவிட்டாள். கணவனின் தாள் தொட்டு வணங்கியபின், கன்று தன் தாய்ப் பசுவின் முகம் நோக்குவது போல் இராமச்சத்திரனின் முகம் நோக்கினாள். வழமையான புன்னகை மறையவில்லை அம்முகத்தில்.

முகூர்த்த நேரம் தாண்டிவிட்டது; இளவரசருக்குரிய இலச்சனைகளற்றவராகத் திரும்பிய தன் கணவனின் முகக் குறிப்பிலிருந்து எதையும் அறியாத சீதை, இலக்குவனைப் பார்த்தாள். கலவரமடைந்திருந்த அந்த முகத்தைக் கண்டதும் ஏதோ நடந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டாள். கணவனை அழைத்துச் சென்று இருக்கையில் அமரச்செய்து, அவருடைய காலடியில் தானும் இருந்து கொண்டாள்.

### நிலையற்றது இவ்வுலகம்

"தேவி! இந்த உலகில் எதுவும் நிலையானதில்லை. அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்பது எவருக்குமே தெரியாது. அயோத்தி மாநகரின் அரியணையில் – எதிர்காலத்தில் ஏறப்போகும் யுவராஜனின் பட்டத்துக்குரிய இளவரசியாக – இன்று உனக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று எண்ணி பெருமகிழ்வுடன் இருந்திருப்பாய். ஆனால் உனது எண்ணம் ஈடேறப் போவதில்லை. எனக்கு இந்நாட்டின் மன்னன் என்ற பட்டத்தை விட மிகவும் மேலான பதவி ஒன்றினை என் தந்தை எனக்களித்திருக்கிறார். மகாராஜாவின் உத்தரவுப்படி உடனடியாகவே நான் காடேகி வனவாசத்துடன் தவ வாழ்க்கை மேற்கொள்ளப்போகிறேன். பட்டத்தையும் பதவியையும் அரசபோகத்தையும் நான் எப்போதும் ஒரு பொருட்டாக மதிப்பவனல்ல; நான் உள்ளத்தால் துறவி. என்னைச் சார்ந்தவர்கள்– என்னைச் சூழ்ந்திருப்பவர்கள் அனைவரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் எதையும் ஏற்க எப்போதும் சித்தமாயிருப்பவன்.

"முன்பொரு தடவை எனது சிற்றன்னைக்கு என் தந்தையார் கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் அவருள்ளார். அதன்படி தம்பி பரதன் அரியணை ஏறவும் நான் வனவாசமேகவும் வேண்டியதாயிற்று. தந்தையை, 'சத்தியம் தவறாத சக்கரவர்த்தி' என்ற பெயரோடு விளங்க வைக்க வேண்டிய கடமை எனக்குண்டு. ஆகவே மன்னரின் ஆணைப்படி நான் தண்டகாருண்யம் செல்கிறேன்.

"தம்பி இலக்குவன் எனக்குத் துணையாக வருகிறான். என் தம்பி பரதன் மிகவும்

இராஜகுமாரி

நல்லவன். பரதன் மனம் புண்படும்படியோ, உன் மாமிமார் மூவரும் புகார் கூறும்படியோ நீ நடந்துகொள்ளமாட்டாய் என்பதை நான் நன்கறிவேன். நித்திய பூசைகளை முடித்து சிலகாலம் வரை பொறுத்திரு. எனக்கு விடைகொடு வைதேகி!"

இவ்வாறு இராமன் கூறியதும் இடியேறு கேட்ட நாகம் போல் இராமரின் கால்களில் சீதா வீழ்ந்தாள். அவள் கண்ணீர் அவர்தம் பாதங்களை நனைத்தது. குனிந்து சீதையைத் தூக்கி அணைத்து அவளுடைய தலையை ஆதரவாகக் கோதிவிட்டார். "சீதா! நான் ஏற்கனவே சொன்னேனே! அரியணையை நான் எப்போதும் விரும்பியவனல்ல என்று– உன் மனத்தில் அத்தகைய ஆசைகள் இருந்தால் அவற்றை உடனடியாக அகற்றிவிடு கண்ணே!" என்று இராமர் கூறியதும் தீப்பிளம்பாகக் கொதித்தெழுந்தாள் சீதை.

"தங்களைக் கரம் பிடித்து பன்னிரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டனவே! இது காலவரை என்குணம் தங்களுக்குப் புரியாமல் போனது விந்தயே! பிரபு! எனது வேதனை பதவியைப் பற்றியதல்ல; என்னை விட்டுத் தாங்கள் பிரிந்து செல்ல நினைத்தீர்களே! என்பது தான் என் வேதனைக்கான காரணம். தங்களை விட்டு ஒரு கணம் பிரிய நேரிட்டாலும் தீயில் புகுந்து என் வாழ்நாளை முடித்துக்கொள்வேன். ஆகவே தாங்கள் எங்கு சென்றாலும் அங்குதான் என் வாழ்வும் பின்னிப் பிணைந்து நிற்கும்– எந்த விதமான மறுப்பும் கூறாமல் தங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்!"

சீதையின் தீர்மானத்தை எக்கதை கூறியும் இராமரால் உடைத்தெறிய முடியவில்லை. அவளையும் தன்னுடன் அழைத்துச் செல்ல ஒப்புக் கொண்டார்.

கோசலாதேவியாரிடம் மூவரும் சென்று ஆசியுடன் விடைபெற்றுக்கொண்டனர். இலக்குவனின் அன்னை சுமத்திரை எதுவித மறுப்பும் கூறாமல் "அண்ணனை நிழல்போல் தொடர்வாய், இனி அண்ணனே உன் தந்தை; சீதையே உன் அன்னை- போய் வாருங்கள்" என்றார். மூவரும் ஒரே இரதத்திலேறி கைகேயியின் அந்தப்புரத்தை அடைந்த போது அங்கே அமைச்சர் சுமந்திரர் சோபை இழந்தவராக நின்றார்.



### மக்களடைந்த ஏமாற்றம்

தங்கள் வாழ்நாளில் கிடைத்தற்கரிய அரும்பெரும் விழாவினைக் காணத் திரண்டிருந்த அயோத்தி மாநகர மாந்தர், நடப்பது எதுவும் புரியாது. செய்வது எதுவுமறியாது தவித்து நின்றனர். ஒரு வகையான பதட்ட நிலை எங்கும் பரவியது. சீதாதேவி, இலக்குவனுடன் இராமச்சந்திரர் இரதத்திலேறி மீண்டும் கைகேயி அந்தப்புரம் செல்வதைக் கண்ட மக்களின் குழப்ப நிலை மேலும் சஞ்சலமாக உருவெடுத்தது. இருப்பினும் இராமரை வாழ்த்தும் ஒலிகள் மக்களிடமிருந்து எழுந்தவண்ணமே இருந்தது.

மூவரையும் கண்ட அமைச்சர் சுமந்திரர், கட்டுப்பாடெதுவுமற்று வெள்ளமெனப் பெருகும் தன் கண்கள் சொரியும் கண்ணீரைத் துண்டினால் துடைத்துக்கொண்டு அந்தப்புரத்தினுள் அவர்களை அழைத்துச் சென்றார். மன்னவரைப் பார்த்து பிரியாவிடை பெற்றுச் செல்ல இராமர் வந்திருப்பதாகச் சுமந்திரர் கூறியதும் துயருடன் சாய்ந்து கிடந்த தசரதர் துடித்தெழுந்தார். கோசலாதேவியாரையும் சுமத்திரைதேவியாரையும் அழைத்துவரும்படி சுமந்திரரிடம் மன்னர் கூறினார்.

தட்டுத் தடுமாறி எழுந்தோடி வந்து இராமரைக் கட்டி அணைத்துக் கொண்டார். கண்கள் கடலாகின. மகனின் அணைப்பிலேயே மயக்க முற்றவரை இலக்குவனுடன் இராமர் தூக்கி படுக்கையில் கிடத்தினார். அவர் மயக்கம் தெளிந்து கண் திறந்து பார்க்கும் போது இராமர், சீதை, இலக்குவன் அருகில் கோசலையும் சுமத்திரையும் நின்றிருந்தனர். அவர்களை அருகழைத்தார். "இந்தக் கொடியவளை நம்பி நான் மோசம் போய்விட்டேன், என் அருமைப் புதல்வனை காடேகச் சொல்லிவிட்டேன்," என்று நாத் தழுதழுக்க விம்மலுடன் கூறினார்.

அப்போது இராமர் மன்னரின் தாள் வணங்கி "தந்தையே! எவ்வளவோ எடுத்துக் கூறியும் சீதையும் இலக்குவனும் என்னைத் தொடர்ந்து கானகம் வரத் தீர்மானித்து விட்டனர். உடனடியாகப் புறப்படுகிறோம். தயவு செய்து விடை தாருங்கள்," என்றார். இவ்வாறு கூறிய இராமரின் தலையைக் கோதி விட்டவாறு "மகனே! இன்று வேண்டாம். நாளை போகலாமே?" என்றார்.

### காலம் தாழ்த்துவதில் பயனேதுமில்லை

"தந்தையே! ஒரு சில நாளிகைகள் மட்டும் தாமதித்துப் போவதால் எதுவித மாற்றங்களாவது ஏற்பட்டு தாங்கள் சத்தியம் தவற நேர்வதை நான் பொறுக்க மாட்டேன். ஆகவே, இன்றே நான் வனவாசம் ஏற்க விடை தந்தருள வேண்டுகிறேன்." இவ்வாறு இராமர் உரைத்ததும் தன் மகனின் மன உறுதியைக் குலைக்க முடியாதவரானார் மன்னர், சுமந்திரரை அழைத்து, "சுமந்திரரே! என் குழந்தைகள் கானகத்தில் துன்பப் படாமலிருப்பதற்கு- பதினான் காண்டு காலம் எக்குறையுமின்றி வாழ்வதற் கேற்ற பொருள் பண்டங்களை அவர்களுடன் அனுப்பிவையுங்கள்" என்று கூறினார். இதனைக் கேட்ட கைகேயி கொதித்தெழுந்தாள். "எல்லாச் செல்வத்தையும் இவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றால் என் மகனுக்கு இங்கே எதுவும் மிஞ்சப் போவதில்லையே!" என்று சீறினாள். உடனே இராமர் இடைப்புகுந்து, "தந்தையே நாங்கள் துறவிகள்கோலம் பூண்டு செல்லவிருக்கிறோம். எங்களுக்கு அரச போகத்துக்கோ அல்லது நாடு நகர்ப்புற மாந்தருக்கோ தேவைப்படும் எப்பொருளும் வேண்டாம். மரவுரி தரித்தே வனம் செல்கிறோம்." என்றார்.

இவ்வார்த்தைகள் காதில் விழுந்ததும் கைகேயி உடனடியாக உள்ளே சென்று மூவருக்கும் தேவையான காவி உடைகளைக் கொண்டு வந்து அவர்களின் கைகளில் கொடுத்தாள். இராமரும் இலக்குவனும் தமது உடைகளைச் சிரமமின்றி அணிந்து கொண்டார்கள். ஆனால் சீதையால் அவ்வுடைகளை அணிவதற்கு முடியாதிருந்தது. இராமரே அவ்வுடைகளை அணிவித்து விட்டார்.

இக்காட்சியைக் கண்ணுற்ற அனைவரின் கண்களும் குளமாயின. ஆனால் இருவரின் கண்கள் மட்டும் வித்தியாசமாக இருந்தன. கைகேயியின் கண்களில் கொடூரத்தன்மை குடிகொண்டிருந்தது. இராமரின் கண்கள் முன்பைவிட இப்பொழுது பன்மடங்கு களிப்பில் குதித்திருந்தன. தசரத மாமன்னர் இக்காட்சியைக் காணச் சகிக்காமல் தன் பார்வையை மறுபுறம் திருப்பியவாறு, இராம- இலக்குவனுடன் சீதையையும் இரதத்தில் கொண்டு சென்று தண்டகாருண்யத்தில் விட்டு வருமாறு சுமந்திரரிடம் கூறினார். இதனைக் கேட்ட சுமந்திரர் அடியற்ற மரம்போல் சாய்ந்தார். இலக்குவன் கொண்டுவந்த தண்ணீர் பாத்திரத்தைப் பெற்ற இராமர் சிறிதளவு நீரை அமைச்சரின் முகத்தில் தெளித்து மூர்ச்சை தெளிவித்தார்; பின்னர் எழுந்து மன்னரின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு தேர்கொண்டுவரப் புறப்பட்டார். மன்னர் மயக்கமடைந்தார்.

"தந்தையே! பதினான்காண்டு வனவாசம் மிகச் சுலபமாக முடிந்துவிடும். கவலை தவிர்த்திருங்கள். அன்னையரே! தந்தையை கவனமாக-கலக்கமில்லாமல் காத்துக் கொள்ளுங்கள்." என்று கூறிய இராமர் அனைவரையும் வலம் வந்து வணங்கினார். அதே போல் சீதையும் இலக்குவனும் அனைவரையும் வணங்கிபின் அந்தப்புரத்தின் முன்புறம் வரவும் அவர்களை கானகம் கொண்டு செல்ல சுமந்திரரும் இரதத்துடன் வந்து சேர்ந்தார்.

இராமரை வனவாசம் அனுப்புவதற்கு தசரத மன்னர் ஆணையிட்டுவிட்டார் என்ற செய்தி அப்போது அயோத்திமா நகரெங்கும் தீபோல் பரவியிருந்தது. அவர்களை தேரில் செல்லவே மக்கள் கூட்டம் விடவில்லை. அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மக்கள் மொய்த்து நின்றனர். இராமர் கைகூப்பி வணங்கி வழிவிடுமாறு வேண்டி ஏனைய இருவருடன் கொஞ்சதூரம் கால் நடையாகவே சென்று பின்னர் இரதத்தில் ஏறினார். மக்கள் கதற ஆரம்பித்தனர். தாங்களும் இராமருடன் வனம் வரப்போவதாகத் துணிந்து நின்றனர். எவ்வகையிலும் சமாதானம் செய்து மக்களைத் திருப்பி அனுப்ப முடியாத வராக இராமர் பயணத்தைத் தொடங்கினார். மக்களும் இரதத்தின் முன்னும் பின்னும் தொடர்ந்தனர்.

காடேகும் தன் மகனை அரண்மனை வாயிலில் நின்றவாறே பார்த்து நின்ற தசரதர் மீண்டும் மயங்கினார். அமைச்சர்களும் ஏனையோரும் அவரை கோசலாதேவியின் அந்தப்புரம் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 18**

**சரியானவிடை:- மந்தரை**

1. செல்வன். என். நாகராஜ். இல-23 வெட்டுக்குளம் வீதி, புத்தளம்.
2. செல்வி.ஜி.எம். லக்ஷ்மி. ஜெயத்தவனா மாவத்த, நாவலப்பிட்டிய.
3. கெமிலியா சேர்மானப்பர். 92 1/3 ரத்தினம் வீதி, கொழும்பு13.
4. திரு கணேசன் சசிகலா. கெனில் வர்த், இல-04, சினிகத்தேனை.
5. கி. சியாமளா. லூர்த்து மாதாவீதி, 45/6, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.

**போட்டி இல. 20** கேள்வி:-இராமருக்கு விதிக்கப்பட்ட வனவாசம் எத்தனை அண்டுகள்?

பெப்.24க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.20, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# ஒரே சீவு



படத்தில் கம்பத்தில் கட்டப்பட்டிருப்பவரது தலை சீவப்படுவதற்கு சில நொடிகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. 1990ம் ஆண்டில்- அதாவது, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்- சீனாவில் உள்நாட்டுக் கலவரம் வெடித்தது. பாக்சர் கலவரம் என்று பெயர். கலவரக்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள். கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு இளநீர் சீவுவது போல தலை சீவப்பட்டார்கள். நம் நாட்டில் வழங்கப்பட்ட 'கம்பத் தண்டனை'களுக்கு இதுதான் முன்னுதாரணமோ?!



# "என்னம்மா சௌக்கியமா,"



தமிழக முதல்வர் ஜெயலலிதாவும். ஆந்திர முன்னாள் முதல்வர் அமரர் என்.டி.ராமராவின் மனைவி லட்சுமி சிவபார்வதியும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டால்....

ஜெயா:- வாழ்த்துக்கள்

பார்வதி:- வருத்தம் தெரிவிக்க வேண்டிய நேரத்தில் வாழ்த்துச் சொல்வது முறையல்ல.

ஜெயா:- முறையாம் முறை, எரிந்த சாம்பல் கூட பறக்க முன்னர் நான்தான் வாரிசு என்று நீ அறைந்தாயே பறை, அதுதானோ முறையோ?

பார்வதி:- மெல்லப் பேசுங்கள் யாரோ ஒரு பெண் நின்று நாம் பேசுவதையெல்லாம் செவிகொடுத்துக்கொண்டிருக்கிறாள்.

ஜெயா:- அடடடே.. உன் உடன்பிறவாச் சகோதரி என்றால்லவா நினைத்துவிட்டேன்.

பார்வதி:- முதலில் சொத்துச் சேரட்டும், பின்னர் ஒரு உடன்பிறவாச் சகோதரியை சேர்த்துக் கொள்ளலாம்.

ஜெயா:- இறுதி ஊர்வலக் காட்சியில் உனது நடிப்பு சூப்பர் ஹிட். அதுதான் வாழ்த்துச் சொல்ல நேரில் வந்தேன்.

பார்வதி:- நடிப்பென்று எப்படி கண்டுபிடித்தீர்கள்,

ஜெயா:- வழி காட்டியவளிடமே விடை கேட்கிறாயா? எனக்காவது முன் அனுபவம் இருந்தது. எதுவுமில்லாமலேயே வெளுத்து வாங்கிவிட்டாய். நான் சொல்கிறேன் நீ எங்கேயோ போகப்போகிறாய்!

பார்வதி:- இந்த ஜனங்களை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது.

ஜெயா:- அரசியலில் பாலபாடம் என்ன தெரியுமா பார்வதி? ஜனங்களைப் பற்றி கவலையே படக்கூடாது.

பார்வதி:- கட்..ஜனங்களைப் பற்றி எனக்கென்ன கவலை. எனக்கும் என்.டி.ஆருக்கும் பொருத்தம் பார்த்துச் சொன்னார்களா? நான் அவரை காதலிக்கும் போது வந்து கைகொடுத்து உதவினார்களா? அல்லது மாமனா, மச்சானா? என்.டி.ஆரையே தோற்கடித்த இந்த நன்றி கெட்டவர்கள் என்னையும் நாளை மறந்துவிடப் போகிறார்களோ என்றுதான் கவலை.

ஜெயா:- பயப்பிடாதே பார்வதி! என்.டி.ஆர் ஒரு ஆண், நீ ஒரு பெண்! என்.டி.ஆரிடம் இருந்தது கணிரென்று குரல்! உன்னிடமிருப்பது கண்ணீரில் தோய்ந்த குரல்! என்.டி.ஆர் சம்பாதித்தது ஆதரவாளர்களை! நீ சம்பாதித்திருப்பது அனுதாபிகளை! ஆதரவை தக்கவைக்க அழுத்தமான கொள்கை வேண்டும்! அனுதாபத்தை தக்கவைக்க அழத் தெரிந்தால் போதும்.

பார்வதி:- தாயே! புரட்சித் தலைவி! பூவுலக மாதா! புகழ் பூத்த ரோஜா! உயிரே! திருவே, ஒளியின் ஒளியே,..

ஜெயா:- போதும் போதும்; என் கட்சிக்காரர்கள் செவியில் விழுந்தால் சினம் கொள்ளப் போகிறார்கள்!

பார்வதி:- ஏனம்மா?

ஜெயா:- தங்களுக்கு போட்டியாக வந்துவிடுவாயோ என்று!

பார்வதி:- அந்தச் சந்தேகம் அவர்களுக்கு வரலாமா, தங்களைப் புகழ்வதில் அவர்களோடு போட்டி போட அகிலத்தில் யாருண்டு! தாயே! தர்மத் தலைவியே! அடிமைப் பெண்ணாக நடித்து, அடிமைகளின் தலைவியாக உயர்ந்தவளே! எனக்குச் சில சந்தேகங்கள் தாயே! கேட்கவா?

ஜெயா:- கேள்வி கேட்பதும் எனக்குப் பிடிக்காது. கேள்வி கேட்பவர்களையும் எனக்குப் பிடிக்காது. உனக்காக என் முடிவில் ஒரு தளர்த்தல். வினாக்களை தொடுக்கலாம்.

பார்வதி:- சேர்ந்தே இருப்பது?

ஜெயா:- உடன்பிறவா சகோதரி.

பார்வதி:- சேராமல் இருப்பது?

ஜெயா:- தமிழ் நாட்டில் மீதியுள்ள நிலங்களும், வளங்களும்!

பார்வதி:- பிரிக்க முடியாதது?

ஜெயா:- பதவியும், ஊழலும்.

பார்வதி:-நம்பிக்கை தருவது

ஜெயா:- மக்களின் மறதி.

பார்வதி:- வாக்குறுதி என்பது?

ஜெயா:- தேர்தலின் பின்னர் காற்றில் பறப்பது.

பார்வதி:- பிடித்தமானது?

ஜெயா:- 'கட்அவுட்'

பார்வதி:- பிடிக்காதது?

ஜெயா:- கெட் அவுட் என்று பதவியில் இருந்து என்னை விரட்ட நினைப்பது

பார்வதி:- உடனடி எதிரி-

ஜெயா:- வருமானவரி இலாகா.

பார்வதி:- நிரந்தர எதிரி-

ஜெயா:- பத்திரிகையாளர்கள்.

பார்வதி:- பொழுது போக்கு?

ஜெயா:- அமைச்சர்களை பந்தாடுவது.

பார்வதி:- ஊதியம்?

ஜெயா:- ஒரே ஒரு ரூபா!

பார்வதி:- சொத்து மதிப்பு.

ஜெயா:- தமிழ் நாட்டு மதிப்பில் 4/3 பங்கு.

பார்வதி:- சம்பாதிக்கும் சாமர்த்தியம்?


ஜெயா:- முதல்வரானால் உனக்கேதெரியும். சொல்லித் தருவதல்ல சுருட்டும் கலை!

பார்வதி:- தாயே! (காலில் விழுகிறார், ஜெயா பூரித்துப் போகிறார்) நீயே என் வழிகாட்டி. நீயே குரு! வாழ்க நின்புகழ்!

கற்பனைச் சந்திப்பை கற்பனை செய்தவர் காதிலை பூ கந்தசாமி.

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# முயன்றால் முடியும்



→ [illegible]

→ சச்சின் டெண்டுல்கர்-இந்தியாவின் ரன் குவிக்கும் இயந்திரம். இதுவரை 101 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். அத்தனையிலும் மொத்தமாக குவித்துள்ள ரன்கள் 3201.

உலகக் கோப்பை போட்டிகளில் இந்திய அணி வெற்றிபெற வேண்டுமானால் டெண்டுல்கர் என்னும் ரன் குவிக்கும் இயந்திரம் துரிதகதியில் இயங்க வேண்டும்.

சராசரியாக டெண்டுல்கர் குவிக்கும் ரன் விகிதம் 36.37. கப்டன் அசாருதீன் குவிக்கும் ரன் விகிதம் 36.24.

டெண்டுல்கர் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம். அதே நேரம் எதிரணிகளுக்கும் அவர்தான் நம்பிக்கை கொடுக்கிறார். டெண்டுல்கர் நிலைத்து நின்று விளாசத் தொடங்கிவிட்டால் எதிரணி திணறுகிறது. நம்பிக்கை இழக்கத் தொடங்குகிறது.

டெண்டுல்கர் அவுட்டாகிவிட்டால் எதிரணியிடம் உற்சாகம் கொப்பளிக்கிறது. இனி, இந்திய அணியை சுருட்டிவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது.

டெண்டுல்கர் கவனமாக ஆட்டம் இழந்து விட்டால் இந்திய அணியில் உள்ள ஏனைய வீரர்கள் பலரும் தளர்ந்து போகிறார்கள். அதனால் டெண்டுல்கரின் தோளில் பெரிய பொறுப்பு. நல்ல துவக்கத்தை அமைத்துக் கொடுத்துவிட்டுத்தான் களத்தை விட்டுப் போகவேண்டும்.

சில சமயங்களில் டெண்டுல்கர் தனது வயதுக்குரிய துடிப்போடு அவசரப்பட்டு பேட்டை சுழற்றி அவுட்டாகி விடுகிறார். அதுதான் அவரது ரசிகர்களின் குறையும்.

எப்படியோ உலகக் கோப்பை தொடரில் இந்திய அணிவெற்றி பெறுமானால் அதில் டெண்டுல்கரின் பங்கு கணிசமாக இருக்கும்.

அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11

# இளம் இரத்தம்



# லா • லா • லா ரா



பிரையன்லாரா: மேற்கிந்திய தீவின் நட்சத்திர ஆட்டக்காரர். கட்டுப்பாடாக நடக்கத்தெரியாது. சற்று தலைக்கனம் என்று அணியில் ஒரு பகுதியினர் முணு முணுக்கின்றனர். ஆனால், கிரிக்கெட் ரசிகர்களின் கருத்து வேறுமாதிரி இருக்கிறது. லாரா இல்லாத அணி சோபிக்காது. மேற்கிந்தியதீவு கிரிக்கெட் வரலாற்றில் லாரா இன்னமும் நிறையச் சாதிக்கப்போகிறார். அவரது அணியில் உள்ள சிலருக்கே பொறுக்க வில்லை. குறிப்பாக கப்டன் ரிச்சாட்சனுக்கு லாராவை பிடிக்கவில்லை. அதனால் சிறு பிரச்சனைகளையும் பெரிதாக்கிவிடுகிறார்கள். அதனால் லாரா மன முடைந்துள்ளார். மனமுடைந்துள்ள நிலையில் ஆட்டத்தில் முழுக்கவனம் செலுத்துவதற்கு கஷ்டமாகலாம். என்கிறார்கள்.

"இல்லையில்லை, அணியில் தனக்குரிய தேவையை உணரச்செய்ய லாரா இனிமேல் தான் அசுரத் தனமாக ஆடப்போகிறார். அதனால் இடையிலே அவர் நிறுத்தப்பட்டதும் நல்லது தான்" என்கிறார்கள் சிலர். எது வேறு சரி பார்க்கலாம்.

# கடுகு சிறுசு காரம் பெரிசு



▲ படத்தில் இருப்பது வண்டு. வண்டெடன் ரவுடன் கவிதை நயமாகவெல்லாம் கற்பனை செய்ய வேண்டாம். இது சாதாரண வண்டல்ல. சாதனை வண்டு. இதனை 'காண்டாமிருக வண்டு' என்று அழைப்பர். இதன் விஞ்ஞானப் பெயர் 'டினாஸ்ரெஸ்'. விலங்கினம், மற்றும் பூச்சியினத்தில் இவ்வண்டுதான் மிக வலிமைவாய்ந்ததாம். அது எப்படித் தெரியுமா? தனது எடையைவிட 850 மடங்கு அதிகமான எடை கொண்ட பொருளை தன் உடல்மீது தாங்கும் இந்த வண்டு! கின்னஸ் புத்தகத்தின் இடம் பிடித்திருக்கிறது.

# உண்ணத்தா அல்லது உன்னைத்தா



→ ஆளை அள்ளி விழுங்கக் கூடிய இந்த முதலைதான் உலகில் மிகப் பெரியது. இதன் நீளம் 19 அடி. எடை: 2465 இறாத்தல். (1115 கிலோகிராம்) தாய்லாந்தில் இருக்கிறது. 'வாய்' என்று பெயர். மறந்துவிடாமல் உணவு கொடுக்க வேண்டும். தவறினால் வசமாக மாட்டுகிறவர்கள் தொலைந்தார்கள். வாய் வழியாக ஒரே நேரத்தில் நாலுபேர் உள்ளே நுழையலாம். என்ன, திரும்பிவர முடியாது. அவ்வளவுதான்!